Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 14/00

දිනමුරසු වාරමලර් ஆக.18-24, 2002

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 473

## தாக்குப் பிடிப்பாரா ரணில்

## ஜனாதிபதியின் நகர்வுகள்



## ஐ.தே.க.வின் 'பிலிபைன்ஸ்' கனவு

# ஆன்மீகம்

## உலக ஆசைகள்

அடர்ந்த காடு, வன பாதுகாப்பு அதிகாரி செல்கிறார். புதர் ஒன்றில் இரு புள்ளிகள் பிரகாசமாக உள்ளன. நெருங்கிப் பார்த்தால் புலியின் கண்கள் .உடனே சத்தம் செய்யாமல் கையில் இருந்த துப்பாக்கியைக் கீழே போட்டு, சலனமில்லாமல் இருக்கிறார். புலி மெதுவாக எழுந்து வேறுபக்கம் சென்றுவிட்டது. அவர் புலியை நெருங்கிச் சுட்டிருந்தால் நிலைமை மோசமாகி இருக்கும். ஆனால் அவர் அமைதியாகக் கட்டுப்பாட்டுடன் இருந்து விட்டதால், புலி ஒன்றும் செய்யவில்லை. மிருகத்தைப் பார்த்தார் தவறில்லை. அதன் வெறியைத் தூண்டும்படி நடந்து கொள்ளவில்லை.

இதைப் போல் நாமும் நமது வாழ்க்கையில் உலகியல் ரீதியான நமது ஆசையைத் தூண்டக் கூடிய கவர்ச்சியான இன்பங்களைச் சந்திக்க நேரலாம். அப்போது அமைதியாக உறுதியுடன் இருந்துவிட்டால் அவை நம்மை விட்டு விலகிவிடும்.

தி. குணவர்த்தன, களுவாஞ்சிக்குடி.



## சந்தோஷமாயிருங்கள்

"கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்,சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்" பிலிப்பியர் 4:4

"எனக்கு இருக்கும் பிரச்சனைகளில் நான் எப்படிச் சந்தோஷமாக வாழ்வது"? இப்படியாக இன்று அனேகர் துக்கத்தோடு வாழ்ந்து கொண்டிருப்பதை நாம் அறிவோம். இதிலிருந்து தற்காலிகமாக விடுபட்டு, சொற்ப நேர சந்தோஷத்தைப் பெற்றுக் கொள்ள மனிதர்கள் தீய, கொடிய வழிகளைப் பின்பற்றுகிறார்கள். அதன் பின் துக்கம் அதிகரிக்குமே ஒழிய சந்தோஷம் நிலை நிற்பதில்லை.

ஆதலால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறுகிறார், "மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். நீங்கள் அழுது புலம்புவீர்கள். உலகமோ சந்தோஷப்படும். நீங்கள் துக்கப்படுவீர்கள். உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்" யோவான் 16:20

நமது துக்கங்கள், வேதனைகள் யாவற்றையும் அறிந்த நம் ஆண்டவர் "உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்" என்று வாக்குறுதி செய்கிறார். கர்த்தரால் சகலரதும் ஆகும் இம்மையிலும், மறுமையிலும் நமக்குத் தர வல்லவரான, நமக்குச் சந்தோஷத்தைத் தரும்பொருட்டு தனது ஜீவனைச் சிலுவையிலே பலியாக கொடுத்த கிறிஸ்து இயேசுவை விசுவாசிப்போம். நித்திய சந்தோஷத்தைப் பெற்றுக் கொள்வோம். ஆமென்.

போதகர் டேவிட் எஸ். சந்திரதாஸ்,நாவலப்பிட்டி.

## செலவு செய்வதில் நடுநிலை வேண்டும்

அளவு கடந்து செலவு செய்தலும் பிழையாகும்; செலவே இல்லாமல் இருத்தலும் பிழையாகும். தானம் இல்லை என்பதும் குற்றம். எல்லாவற்றையும் கொடுத்து விடுவதும் குற்றம். சாதாரண செலவுகளில் நடு நிலைமையை அனுசரித்தலே மேலானதாகும். சிக்கனச் செலவு நலமானது. தான தருமமும், அன்பும், உதவியும் நமது தகுதிக்கேற்ற அளவில்தான் செய்ய வேண்டும். பிறர் மெச்சுவதற்கும், புகழ்வதற்கும், விளம்பரப்படுத்துவதற்கும் செய்யலாகாது. திருமணத்திலும், வேறு சடங்குகளிலும் முறை தவறிச் செலவு செய்து பாழடைந்த குடும்பங்கள் நம்மில் எத்தனை?

"அளவு கடந்து செலவு செய்வோர் ஷைத்தானுடைய தோழர்கள். பணத்தை (செலவு செய்வதில்) கழுத்தோடு கட்டப்பட்டதைப் போன்று (பணச் செலவே செய்யாமல் உங்கள் கையை விலக்கிக் கொள்ள வேண்டாம்) மேலும், (வீண் செலவு செய்து) அதை முழுமையாக நீட்டி விரித்து விடவும் வேண்டாம். ஏனென்றால் நீங்கள் (அதன் விளைவாக சமூகத்தால்) நிந்தனை செய்யப்படுவோராகவும், ஒன்றுமில்லாதோராகவும் ஆகிவிடுவீர்கள். (அல்குர் ஆன் -17:29)

வை.எம். தாஹிர்கரீம்- கல்முனை-06.

# கவிதைப் போட்டி இல.470


பரிசுக்குரிய கவிதை

### நீயும் வீரன் தான்

துணிவுண்டு ஆனால்
பலமில்லையா? உடனே
பத்திரிகையொன்றை ஆரம்பிப்பாய்
துப்பாக்கியால் இயலாத சில
துர்ப்பாக்கிய விடயங்களை
துணிவோடு பிரசுரிக்க.

ஆர்.சிறீதரன், அராலி.

இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்



### நேரமில்லை?

வேலை வாய்ப்பை அறியவும்
பதவி உயர்வை அடையவும்
வாசிப்போம் -மற்றபடி
வாசிப்பை வஞ்சிப்போம்.

பிரபா- பதுளை.

### விந்தை உலகம்

பலதும் படித்தேன்; பண்டிதனாவதற்கு.
சிலதை விட்டேன்; செம்மையாளனாவதற்கு
படித்ததை சொன்னேன்; முட்டாள் என்றார்!
படித்தபடி நடந்தேன்; பரதேசி என்றார்!

நா.ஜெயபாலன், பிபிலை.

### மேலோட்டப் பார்வை

அவசரமான உலகிலும்,
அதிர்ச்சியான செய்தியையும்
ஆனந்தமான தகவலையும்
எம்மிடம் சுமந்து வரும்
வாசிக்கும் நெஞ்சங்களை
யோசிக்க வைக்கும்
சிந்தனையை சிவக்க வைக்கும்
பத்திரிகையே
நீயின்றி எமக்கில்லை விழிப்பு!

து. பரிமளாதேவி, கலஹா.

### உனக்கும் காலம் வரும்!

விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும்
உள்ளவனிடம்தான் வெற்றிகள்,
தோல்வியடைகின்றன.
நேர்முகப் பரீட்சை பயனளிக்கா
விட்டாலும் வீடு செல்லமுன்
மனதுடன் சேர்ந்து விழிகளும்
மறு விண்ணப்பம் தேடுகிறதே!
உனக்கு வெற்றி நிச்சயம்...
காத்திரு!

ஏ.ஏப்.எம்.றியாட்,முள்ளிப்பொத்தானை.

### புதிர்

புத்தகங்கள் பல புரட்டிப்
பட்டம் பெற்ற உந்தனுக்கு
பத்திரிகை விளம்பரத்தில்
வெற்றிடங்கள் தேடுவது
புரியாத புதிரென்று
விளங்காமற் போனதுவோ?

செ.யசோதா, கிளிநொச்சி.

### என்னவென்று!

ஆபிஸ் வேலையை...
அப்படியே போட்டுவிட்டு!
ஓசிப் பத்திரிகையில்!
ஒய்யாரமாய் படிப்பதென்ன?
உன்னைத்தான் கேட்கிறேன்!
எனக்கு மட்டும் சொல்லிவிடு!

ஹப்புத்தளையூர், மனோ கோபாலன்.

### நாமும் அறிய

உள்ளூரில் உத்தமராய்
வெளியூரில் வேடதாரியாய்
பல வேஷம் போடும்
அரசியல்வாதிகள் பலருண்டு
அவர்கள் பொய் முகத்தை
நம் விழிகளும் கண்டுணர
நீ படித்தவற்றைப் பிரதி பண்ணி
எமக்கனுப்புவாயா அமெரிக்க நண்பா?

எஸ். சசிதா- கம்பளை.

### நூதனக் களிப்பு

பார் வேகப் பார்வை மிஞ்சிய
பத்திரிகைப் பக்கம் தூக்கி
நுனிப்புல் மேயும் உன்
நுணுக்கம் தவறவில்லை ஏன்?
நூறில் ஒரு நூதனமாய்
கறுப்பு மாதச் செய்தியற்ற
கலக்கமில்லாக் களிப்புத்தானே....?

லைலா அக்ஷியா அக்ரம்-குருணாகல்.

# கவிதைப் போட்டி இல.473



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 24.08.2002

கவிதைப் போட்டி இல.473
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### வாசகரின் வாஞ்சை

சந்தேகத்தைக் கிளப்பி நிற்கும்
சமாதானத் தீர்வுத் திட்டம்
எந்த நிலையில் போகிறது
என்பதை துல்லியமாய்த் தெரிய
வாஞ்சையுடன் புரட்டுகிறார்
வாசகர் ஒருவர் பத்திரிகையை

கேக்கே-டீன், ஏறாவூர்-3.

### அதிசயச் செய்தி

போரொழிந்தது
பேச்சுவார்த்தையின்றியே
சமாதானம் மலர்ந்தது
ரணில் சந்திரிகா
கூட்டு முயற்சி வெற்றி
எனும் அதிசயச் செய்தியோ
இவர் வாசிப்பது!

அ.சந்தியாகோ- கண்டி.

### பாசாங்கு

பாதையோரம் நின்றிருந்து
பார்ப்பவர் ஐயம் கொள்ளாமல்
பத்திரிகை தனைக் கையிலேந்தி-
செய்தி
படிப்பவராய் தனைக் காட்டி
பாவையவள் வருகைக்காய்
பாசாங்கு செய்திருக்கும்- இளம்
பருவ வாலிபன் இவன்!

க.யோகேஸ்வரன், கஹகல்லையூர்.

### யுத்தமில்லாவிடில்...

யுத்தம் என்ற
சொல் இல்லாவிட்டால்
நம்மிளைஞர்களும்
சத்தமில்லாமல்
வாசிப்பார்கள்
ஆங்கிலப் பத்திரிகைகளை.

ரி.சதீஸ்குமார், அரியாலை.


# வாசக[ர்] சாலை

தினமுரசு வாரமலர்
2002.ஜூலை(21-27)
கண்ணுற்றேன்.
ஆட்டங்காணுமா
அரசு?
அம்மையாரின்
புதிய வியூகம்
ஆகிய மகுடமிட்ட
தலைப்புக்களுடன்
வெளிவந்திருந்தது.
நிம்மதியற்ற
நிலையில் நிதமும்
அல்லல் உற்று
அம்மையார் ஆட்சியில்
அவதிப்பட்டுக் கொண்டிருந்த
மக்களுக்கு
சற்றேனும்
அமைதிநிலை
இப்போது
ஏற்படுத்தியது
இன்றைய அரசே,

கவிக்குயிலன், சேனையூர்-06.

சென்ற நூற்றாண்டுக்கும் புதிய நூற்றாண்டுக்கும் பெருமைக்குரிய முடிக்குரிய முரசே! நானோ இலங்கையில் வெளியாகும் அனைத்துப் பத்திரிகைகளையும் மிக ஆர்வத்துடன் பார்த்து ரசிப்பவன். சில பத்திரிகை ஆசிரியர்கள் மதம் சம்பந்தப்பட்டவைகளில், அரசியலில் விமர்சனங்களில் பக்க சார்பான கருத்துக்களைத் தெரிவிக்கிறார்களேயொழிய நடு நிலையில் நின்று உண்மையை வெளியிடத் தயக்கம் காட்டுகிறார்கள். ஆனால் நீயோ, யாவருக்கும் மதிப்பு கொடுத்து உண்மையான ஜனநாயக நாட்டில் இருக்கின்ற பத்திரிகைச் சுதந்திரத்துக்கு மதிப்பளித்து நடக்கிறாய். உன்முன் ஏனைய அனைத்தும் தூசு. உன் கம்பீரம், உன் அழகு, உன் நேர்மை யாருக்கும் அஞ்சாத உன் தைரியத்தின் முன்னால் அனைவரும் உனக்குச் சிரம் பணிந்தவர்கள். எமது சந்ததிகளுக்கும் துணையாக நீ ஆயிரம் நூற்றாண்டுகள் நீடுழி வாழ்க!

எம்.எம்.எம்.ஹில்மி,அலுத்கம.



அன்புடன் முரசிற்கு

நீ வருவாய் என வாரா வாரம் உனக்காகக் காத்திருப்பேன். கண்ணெதிரே தோன்றி(னால்) உள்ளம் கொள்ளைப் போகும் அளவிற்கு ஆனந்த(ம்)த்துடன் உன்னை பார்த்தாலே பரவசம் அடைகின்றேன். என் போன்ற இளசுகளின் உள்ளம் துள்ளுவதோ இளமைதான் காரணம். நீ தரும் அம்சம் அனைத்தும் விண்ணுக்கும் மண்ணுக்கும் உயர்ந்தோங்கி நிற்பதோடு உன் புகழ் உயர்ந்து ஒலிக்கிறது. பலன் பார்க்க ராசி உன் ரகசியத்தைக் கண்டு கொண்டேன், கண்டு கொண்டேன். பணக்காரன் தொடங்கி ஏழை(ஜாதி) தொழிலாளி போன்றோரின் கையில் இருப்பது நீ(யா)யே. துள்ளாத மனமும் துள்ளுகிறது. அதனால் உன்னுடன் காதல் கவிதை பாடக் காத்திருப்பேன். தாயக(ம்)த்தில் தலை ஓங்கி நிற்க ஹலோ சொல்லி மீண்டும் உன்னை நினைத்து தொடரும் எனது கவிதைகள்.

ஜெ. முகுந்தகுமார், வவுனியா.

அன்பின் முரசே

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சூப்பர்.

அத்துடன் நீ சுமந்து வரும் புத்தம் புது அம்சங்கள் வியக்கத் தக்கவை. பாப்பா முரசு, அறிவுதேடல், சிந்தியா பதில்கள், பார்த்த ஞாபகம் இல்லையோ போன்றவை இன்னும் இன்பமூட்டுகின்றன. அத்தோடு குறுக்கெழுத்து போட்டியையும் சேர்த்துக் கொள்வதன் மூலம் மேலும் சிறப்படையச் செய்யலாம். முரசின் லேடிஸ் ஸ்பெசல் போன்றவை பயனுள்ளவையாக இருக்கின்றது. இது போன்ற பல பயனுள்ள அம்சங்களைச் சுமந்து வரும் முரசே நீ மேலும் சிறப்புற வாழ்த்துகின்றேன்.

கே.பிரியதர்ஷினி, கினலன் எஸ்டேட், எல்ல.

# உங்கள் பக்கம்

## இதுவே எமது கோரிக்கை

சமாதானமே இலங்கையில் உள்ள பல்லின மக்களினதும் அபிலாசையாகும். சமாதான முன்னெடுப்புக்கள் நடைபெறும். இத் தறுவாயில் முஸ்லீம் மக்கள் இதிலிருந்து ஓரம் கட்டப்படும் நிலை ஏற்பட்டுள்ளதென்றே கருதுகின்றேன். முஸ்லீம்கள், வடக்கு-கிழக்கு, மலையகம் போன்ற பகுதிகளில் செறிந்து வாழ்பவர்கள் அல்லர். இலங்கை முழுவதிலும் பரந்து தங்களுடைய கலாசாரங்களைப் பின்பற்றி வாழும் மக்கள்.

இலங்கை முஸ்லிம்கள் வடக்கில் தமிழ் மக்களுடன் ஒன்றிணைந்துதான் வாழ்ந்தார்கள். என்று அவர்கள் இரவோடு இரவாக உடுத்த உடையுடன் பிறந்த மண்ணை விட்டு விரட்டப்பட்டார்களோ அன்றுடன் உறவில் விரிசல் ஏற்பட்டு விட்டதை யாரும் மறுக்கவும், மறக்கவும் முடியாது. எமது குரலையும் அரசு மதித்து, இனப் பிரச்சனைத் தீர்வினில் தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் அதே உரிமை (இடம்) முஸ்லிம்களுக்கும் வழங்கப்பட வேண்டும். அது நடைபெறவில்லையாயின் இரு புறத்தாலும் பாதிப்புக்குள்ளாக்கப்படும் மக்களாக முஸ்லிம்கள் ஆகிவிடுவார்கள். அப்படிப்பட்ட நிலையில், இன்னுமொரு இனப்பிரச்சனைக்கு வித்திடக் கூடாது. இந்தக் கூற்றை, அரசாங்கம் தீர்வுத் திட்டம் தயாரிக்கும் போது, கவனத்தில் கொள்ள வேண்டும். இதுவே எமது வேண்டுகோள்.

ஏ. டபிள்யூ. எம்.வாரிஸ்,
எதுன்கஹகொட்டுவை,
குளியாப்பிட்டிய.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net

# சமாதான முயற்சிகளுக்கு உயிரூட்டும் நோக்கில்

## அமைச்சர் மொறகொட - அன்ரன் பாலசிங்கம் ஒஸ்லோவில் சந்திப்பு!

சமாதான முயற்சிகளுக்கு மீண்டும் உயிரூட்டும் நோக்கத்துடன் அமைச்சர் மிலிந்த மொறகொட, அன்ரன் பாலசிங்கத்தை நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியிருக்கிறார்.

இந்தச் சந்திப்பு இடம்பெறுவதற்கு ஒரு நாள் முன்பாகவே வடக்கிற்கும், கிழக்கிற்கும் இடையிலான கடல் போக்குவரத்திற்கான கடற் பாதை தொடர்பில் இரு தரப்பினரும் உடன்பாட்டிற்கு வந்தனர்.

இரண்டாவது தடவையாக அமைச்சர் மொறகொட பாலசிங்கத்தைச் சந்திக்கிறார். இம்முறை தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகள் குறித்துப் பல விடயங்கள் முடிவு செய்யப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

செப்டம்பரில் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படும் பேச்சுவார்த்தைகளின் போது என்ன விடயங்கள் பேசப்பட வேண்டும் என்பதிலும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இன்னமும் பூர்த்தி செய்யப்படாத விடயங்கள் பற்றியும் இந்தச் சந்திப்பின் போது ஆராயப்பட்டது.

புலிகள் மீது இலங்கையில் விதிக்கப்பட்டிருக்கும் தடையை நீக்குவது பற்றி அன்ரன் பாலசிங்கம் வலியுறுத்தியதாகவும், அரச தரப்பில் அதற்குச் சாதகமான பதில் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

உள்நாட்டில் ஐக்கிய தேசியக் கட்சி அரசு எதிர்நோக்கியுள்ள அரசியல் நெருக்கடி பற்றியும், இதனால் சமாதானப் பேச்சுக்களில் முட்டுக்கட்டைகள் தோன்றுமா என்பது தொடர்பாகவும் இரு தரப்பிலும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

அமைச்சர் மிலிந்த மொறகொடவுடன் சமாதானச் செயலகத்தின் தலைவர் பேர்னாட் குணதிலகவும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தார்.

## ஜனாதிபதியுடன் பேசுவதற்குப் பிரதமருக்கு அனுமதி மறுப்பு!

அரசாங்கத்திற்கும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள பிணக்குகள் தொடர்பாக ஆராய்வதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்திக்கப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேரம் ஒதுக்கித் தருமாறு கேட்டபோது, பிரதமருக்குச் சாதகமான பதில் கிடைக்கவில்லை என அலரிமாளிகை வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

பிரதமரின் வாசஸ்தலத்திலிருந்து ஜனாதிபதி மாளிகைக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது இரண்டு தடவைகள் சாதகமற்ற பதில்கள் கூறப்பட்டிருக்கின்றன.

மூன்றாவது முறை பிரதமரே நேரடியாகத் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது, ஜனாதிபதி கலந்துரையாடல் ஒன்றில் பங்குபற்றுவதால் தற்போது அவருடன் பேச முடியாது எனப் பிரதமருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வலி. கிழக்கு பிரதேச சபைத் தலைவர் யாழ் நீதிமன்றில் முறைப்பாடு

சட்டரீதியாகத் தனக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட கைத் துப்பாக்கியைக் கைப்பற்றிய இரகசியப் பொலிஸார் அந்தத் துப்பாக்கி குறித்து தவறான இலக்கங்களைக் கொண்ட பற்றுச் சீட்டொன்றை வழங்கியதாகவும், ஊடகங்களில் பிழையான பிரசாரங்கள் இடம்பெறக் காரணமாய் இருந்ததாகவும் வலிகாமம் பிரதேச சபைத் தலைவர் பூ. குணசிங்கம் யாழ் நீதிமன்றில் முறைப்பாடு செய்துள்ளார்.

பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலை தொடர்பாக விசாரணை செய்து வரும் இரகசியப் பொலிஸார் கடந்த 9 ம் திகதி யாழ்ப்பாணத்தில் ஈ.பி.டி.பி. அலுவலகம் ஒன்றைச் சோதனையிட்ட போது பூ. குணசிங்கத்தின் கைத் துப்பாக்கியைக் கைப்பற்றினர். அது 7.62 சீன கைத் துப்பாக்கியாகும். அதன் தொடரிலக்கம் எச்.கே.401266 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. துப்பாக்கியைப் பெற்றுக்கொண்ட இரகசியப் பொலிஸார் தொடரிலக்கத்தைச் சரியாகக் குறிப்பிட்டபோதும் துப்பாக்கியின் ரகத்தை 9 மி.மி. பிஸ்டல் என்றே பதியப்பட்டுள்ளதாக அறியப்பட்டிருக்கிறது. இதனால் வேண்டுமென்றே இரகசியப் பொலிஸார் துப்பாக்கியின் ரகத்தைப் பிழையாகக் குறிப்பிட்டு இந்தத் தகவலை ஊடகங்களுக்கு வழங்கியதன் மூலம் தவறான செய்தி ஒன்றைப் பரப்பக் காரணமாக இருந்துள்ளார்கள் என பூ. குணசிங்கம் நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

இரகசியப் பொலிஸார் கைப்பற்றிச் சென்ற துப்பாக்கி, பிரதேச சபைத் தலைவர் என்ற அடிப்படையில் தனக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்டதொன்று எனவும் அதனை நீதிமன்றத்திற்கு வரவழைத்துப் பரிசோதிக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

## மீள ஒப்படைப்பு

கடந்த ஜூலை 17 ம் திகதி சேருவில பகுதியில் புலிகளால் கடத்திச் செல்லப்பட்ட முஸ்லிம்களுக்குச் சொந்தமான ஒன்பது மாட்டு வண்டிகளை விடுவிப்பதற்காக அவற்றின் சொந்தக்காரர்களால் வழங்கப்பட்ட 27 ஆயிரம் ரூபா பணத்தைப் புலிகள் மீள ஒப்படைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புலிகளின் பிரதேசத் தலைவரான ராஜேஸ் என்பவரால் இந்தப் பணம் திருகோணமலை பள்ளிவாசலில் வைத்து மீள ஒப்படைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

கிழக்கில் முஸ்லிம்களுடன் நல்லுறவை பேணும் முன்னோடி நடவடிக்கையாகவே இதனைச் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிள்ளைகளை மீட்டுத் தருமாறு தாய்மார் வேண்டுகோள்!

## ஐ.சி.ஆர்.சி விபரிப்பு!

“போராடுவதற்குப் பலவந்தமாகச் சேர்த்துக் கொள்ளப் பட்ட தமது பிள்ளைகளை மீட்டுக் கொள்ளும் நோக்கத்துடன் தாய்மார் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியை நாடுகின்றனர்”.

இவ்வாறு ஐ.சி.ஆர்.சி. வெளியிட்டுள்ள அதன் ஜூலை மாத செய்தி மடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. “யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்கள்” என்ற அதன் அறிக்கையில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளதாவது, யுத்தத்தின் பாதிப்புகளுக்கு எளிதில் இலக்காகும் விசேட பிரிவினர் என்ற வகையில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்கள் பற்றிய ஆய்வுகளை ஐ.சி.ஆர்.சி. கடந்த 4 ஆண்டுகளில் மேற்கொண்டது.

“யுத்தம் நிலவும் வேறு பல நாடுகளிலுள்ள பெண்களைப் போலவே, இலங்கையில் வாழும் பெண்களும் கடந்த 20 ஆண்டுகால உள்நாட்டு யுத்தத்தினால் அளப்பரிய துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். தமிழர் பெரும்பான்மையாக வாழும் வடக்கு கிழக்கில் மட்டுமன்றி சிங்களவர் பெரும்பான்மையாக வாழும் தென்னிலங்கையிலும் யுத்தத்தின் பாதிப்புகளுக்கு இலக்காகிய ஏராளமான பெண்கள் ஐ.சி.ஆர்.சி.யின் உதவியை நாடுகின்றனர்.

அவர்களில் பலர் யுத்தத்தின் காரணமாகக் காணாமற் போனவர்களின் மனைவிமார், தாய்மார்,குடும்பத் தலைவனைப் பறிகொடுத்த விதவைகள் இன்னும் பலர் இடம் பெயர்ந்து வாழும் வறிய குடும்பத்தைச் சேர்ந்த பெண்களாகும்.

அமைதிக் காலத்தில் கூட பாரபட்சமாக நடாத்தப்படும் பெண்கள், யுத்த காலத்தில் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டு வறுமைக்கும், துன்பங்களுக்கும் முகங்கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.” என்று விபரித்துச் செல்கிறது ஐ.சி.ஆர்.சி.யின் செய்தி மடல்.

## பிலிப்பைன்ஸ் போல் இங்கு சாத்தியமாகுமா?

பிலிப்பைன்ஸில் இடம்பெற்றது போன்று மக்கள் புரட்சி ஒன்றின் மூலமேனும் ஜனாதிபதியைப் பதவி கவிழ்க்கும் திட்டம் ஆரம்பத்தில் அரசாங்கத்திடம் இருந்ததாகவும், அது சாத்தியப்படாது என்று கருதியதால் பின்னர் கைவிடப்பட்டதாகவும் ஐக்கிய தேசிய முன்னணியின் உயர்மட்டத் தலைவர் ஒருவர் கூறியிருக்கிறார்.

பிலிப்பைன்ஸில் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருந்த ஜோசப் எஸ்ராடாவை உப ஜனாதிபதியாகப் பதவி வகித்த குளோரியா அரோயோ மக்களை வீதியில் இறக்கித் தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்களை நடாத்தி, ஜனாதிபதி மாளிகையைச் சுற்றி வளைத்ததன் மூலம் கடந்த ஆண்டு பதவி கவிழ்த்தார். அந்த வழி முறையை இங்கும் கையாண்டு பார்க்க அரசு கருதியதாகத் தெரிகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மிகவும் நெருக்கமான ஊடக ஆலோசகர் உபுல் ஜோசப் பெர்னான்டோ அவரது சமீபத்திய கட்டுரைகள் பலவற்றில் பிலிப்பைன்ஸ் மக்கள் சக்திப் போராட்டம் நடைபெற்ற விதத்தை விளக்கி அதற்கு மக்களைத் தூண்டும் விதத்திலான கருத்துக்களைப் பரப்பிவருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தேர்தல் நடாத்தக் கோரியமைக்காக ஹகீமைச் சாடுகின்றன தமிழ்க் கட்சிகள்

தேர்தல் நடாத்தக் கோரியமைக்காக ஹகீமைச் சாடுகின்றன தமிழ்க் கட்சிகள்

ஒத்திவைக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கின் உள்ளூராட்சித் தேர்தல்களை எதிர்வரும் செப்டம்பர் மாதம் 25 ம் திகதியில் நடாத்தாது விட்டால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்றப் பலம் என்னவென்பதை நிரூபிக்கப் போவதாக அந்தக் கட்சியின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹகீம் தெரிவித்துள்ளார்.

ஒலுவில் என்னுமிடத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றும் போது இந்தக் கருத்தை வெளியிட்ட ஹகீம் எக்காரணம் கொண்டும் தேர்தலைப் பின்போட அனுமதிக்கப் போவதில்லை எனத் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்.

ரவூப் ஹகீம் இவ்வாறு கூறியிருந்தது தொடர்பாகக் கருத்து வெளியிட்டிருக்கும் தமிழ்க் கட்சித் தலைவர்கள் இது சமாதானத்தைக் குழப்பும் செயலெனச் சாடியுள்ளனர்.

இன்றைய சமாதான சூழ்நிலையில் திட்டமிட்டபடி செப்டம்பர் மாதம் 25 ம் திகதியில் தேர்தலை நடாத்துவதால் நன்மை எதுவும் ஏற்படாது, மாறாகத் தீமையே விளையும் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் இரா. சம்பந்தன் கூறியிருக்கிறார்.

வடக்கு கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடாத்தப்பட வேண்டும் எனக் கோருவது தற்போதைய சமாதான சூழ்நிலையை விரும்பாத தீய சக்திகளின் செயல் எனத் தமிழ்க் கட்சித் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

## முஸ்லிம்கள் என்ன செய்ய வேண்டும்? 'வழிகாட்டுகிறார்' பிரதியமைச்சர்

முஸ்லிம்கள் இலங்கை இராணுவத்தில் சேர்ந்து முஸ்லிம் சமூகத்தின் பாதுகாப்பை உறுதிசெய்து கொள்வது சிறந்தது என்று பிரதியமைச்சர் பஷீர் சேகுதாவூத் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ரவூப் ஹகீம் தலைமையில் ஏறாவூரில் கடந்த வாரம் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய பஷீர் சேகுதாவூத் முஸ்லிம்களின் பாதுகாப்புக்குப் புலிகள் உத்தரவாதமளிக்க வேண்டும் அல்லது முஸ்லிம்களின் பாதுகாப்புக் குறித்து அச்சம் நிலவும் இத்தருணத்தில் அவர்கள் இலங்கை இராணுவத்தில் சேர வேண்டும் என்று பிரதியமைச்சர் கூறியிருக்கிறார்.

இராணுவத்தில் கடுமையான ஆள் பற்றாக்குறை நிலவுவதையும் அவர் சுட்டிக்காட்டினார். எவ்வித நிபந்தனையுமில்லாமல் வடக்கு கிழக்கின் இடைக்கால நிர்வாகத்தைப் புலிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்று இதற்கு முன்னர் பஷீர் சேகுதாவூத் கூறிவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பள்ளிவாசல் நிர்மாணத்தைத் தடுக்குமாறு பிரதமரிடம் வேண்டுகோள்

கண்டி நகரில் நிர்மாணிக்கப்பட்டு வரும் முஸ்லிம் பள்ளிவாசலின் கோபுரத்தை தலதா மாளிகையை விட உயரத்திற்குக் கட்டுவதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்குமாறு அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் சங்கைக்குரிய உடுகம ஸ்ரீ புத்தரகித்த தேரர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் வினயமாகக் கேட்டுள்ளார்.

கடந்த ஞாயிறன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தேரரை கண்டி தலதா மாளிகையில் சந்தித்த சமயம், நகரில் நிர்மாணிக்கப்பட்டுவரும் பள்ளிவாசலின் கோபுரத்தை தலதாமாளிகையை விட உயர்த்திக் கட்டும் திட்டம் குறித்துத் தனக்கு அறியக் கிடைத்திருப்பதாகக் குறிப்பிட்ட தேரர், அதனைத் தடுக்கப் பிரதமர் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

தலதாமாளிகையை விட உயரத்திற்கு முஸ்லிம் பள்ளிவாசல் கோபுரம் நிர்மாணிக்கப்படுவது ஏற்புடையதல்ல எனக் கூறிய பிரதமர் விக்கிரமசிங்க இது குறித்துக் கவனம் செலுத்துவதாகக் குறிப்பிட்டார்.

## அனைத்து சமூகத்தினரும் ஒன்றாக வாழலாம்! குடாநாட்டு மக்கள் நம்பிக்கை!

இலங்கையின் அனைத்து சமூகங்களையும் சேர்ந்த மக்கள் ஒன்றாக வாழ முடியும் எனத் தாம் நம்புவதாக யாழ் குடாநாட்டின் 72 சதவீதமான மக்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

'சோஷல் இன்டிகேட்' என்ற அமைப்பு தற்போதைய சமாதான சூழ்நிலை தொடர்பாகக் குடாநாட்டு மக்கள் மத்தியில் நடாத்திய ஆய்வின் பிரகாரம், “அனைத்து சமூகத்தினரும் ஒன்றாக வாழ முடியும் என்று நீங்கள் கருதுகிறீர்களா?” என ஆய்வு நிறுவனத்தினால் கேட்கப்பட்ட கேள்விக்கு “ஒருபோதும் இல்லை” எனப் பதிலளித்தவர்கள் 5 சதவீதமான மக்கள் மாத்திரமேயாகும்.

சமாதானப் பேச்சுவார்த்தை மூலமே இலங்கையின் யுத்தத்தை முடிவிற்குக் கொண்டுவந்து அமைதியை நிலைநாட்டலாம் என 89.3 சதவீதமானவர்கள் நம்புகின்றனர்.

ஏனைய சமூகங்களிலிருந்து பெரிதும் தனிமைப்படுத்தப்பட்டு, யுத்தத்திற்கு மத்தியில் வாழ்க்கைக்கு முகம் கொடுத்த போதிலும் பெருமளவு மக்கள் அனைத்து சமூகங்களும் ஒன்றாக வாழ்வது சாத்தியம் என நம்புவது வரவேற்கத்தக்க விடயம் எனச் சமூக ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

# முரசம்

## பேச்சுவார்த்தையும் அரசியல் குழப்பமும்

*அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.*

கானல் நீரைப்போல் கிட்டக் கிட்டச் செல்ல எட்ட எட்டச் சென்றுகொண்டேயிருக்கிறது சமாதானப் பேச்சுவார்த்தைகள்.

கடந்த மே மாதம் தொடங்கியிருக்க வேண்டிய பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து பின் தள்ளப்பட்டு இப்போது செப்டெம்பரில்தான் நிகழும் என்று கூறப்படுகிறது. அப்போதாவது நிகழுமா என்பது மக்களின் ஆதங்கமாகியுள்ளது. இத்தகைய பின்போடல்களுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை பூரணமாக அமுல்படுத்தாமையே காரணம் என்று கூறப்படுகிறது. ஆனால் இதற்கிடையில் கிழக்கில் எதிர்பாராதவாறு முஸ்லிம் கலவரமொன்றும் நிகழ்ந்தேறியுள்ளது.

மேலும் புலிகளின் மீதான தடையை நீக்காதவிடத்து புலிகள் பேச்சுவார்த்தைக்கு முன்வர மாட்டார்களென்ற நிலைமையும் காணப்படுகிறது. இவை ஒருபுறமிருக்க, இப்போது பேச்சுவார்த்தை தாமதங்களுக்கு அரசியல் குழப்பங்களை அரசாங்கம் காரணம் காட்ட முற்படுகிறது. அரசியல் குழப்பங்கள் நீடித்தால் பேச்சுவார்த்தை தாமதமாகும் என்று அமைச்சர் மிலிந்த மொரகொட கூறியிருக்கிறார்.

உண்மையில் இது எதிர்காலத்திலும் பேச்சுவார்தைகள் தாமதிக்கக் கூடும் என்பதற்கான அறிகுறியைத்தான் வெளிப்படுத்துகிறதேயன்றி இதுவரை தாமதித்ததற்கான காரணத்தைத் தெளிவுபடுத்துவதாக இல்லை. தாமதங்கள் ஆரோக்கியமானவை என்ற ஒரு சாட்டுப் போக்கையும் கூறுகிறார்கள்.

ஆனால் எமது கடந்த கால பேச்சுவார்த்தை வரலாறுகளில் தாமதங்கள் நம்பிக்கையீனங்களுக்கும், முறிவுகளுக்கும் தான் வழிவகுத்துள்ளதென்பதே உண்மை. தாமதித்ததால் எவற்றை ஈட்டிக்கொண்டோமென்பது கேள்விக்குரியது.

புதிய ஒரு அரசியல் குழப்பத்துக்குள் இச் சமாதானப் பேச்சுக்களையும் இழுத்துச் செல்வதைத்தான் இறுதியில் சாதித்துள்ளனர். இப்போது பேச்சுவார்த்தைகள் பற்றிய முனைப்பைவிட ஆளும் கட்சிக்கும் எதிர்க் கட்சிக்குமிடையிலான பிணக்கே பிரதான பிரச்சினையாக இவர்களால் கருதப்படுகிறது.

இந்தப் புதிய பிணக்குக்குக் காரணமும் தாமதமே. பதவியேற்ற சூட்டோடு சூடாக, யுத்த நிறுத்தம், புரிந்துணர்வு ஒப்பந்தங்களை நிறைவேற்றிய வேகத்தில் பேச்சுவார்த்தைகளையும் நடத்தியிருந்தால் ஜனாதிபதியின் கரங்களுக்கு பாராளுமன்றமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் செல்வது பற்றிய கலவையின்றி நேர காலத்துடன் ஒரு தீர்வை ஆராய்ந்திருக்கலாம்.

இப்போது தோன்றியுள்ள அரசியல் குழப்பத்தின் மத்தியில் அரசாங்கம் எப்படிப் பேச்சுவார்த்தைகளுக்குச் சென்று புலிகளுக்கு தமது தரப்பிலான உறுதியான உத்தரவாதங்களை வழங்க முடியும் என்ற கேள்வி எழுந்துள்ளது. அதேவேளை அடுத்த தேர்தலுக்குச் செல்ல நேரிடின் இதுவரை ஈட்டப்பட்ட யுத்த நிறுத்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பன என்னாகும் என்ற கேள்வியும் தோன்றியுள்ளது.

அரசாங்கமே இதுகுறித்து தமிழ் மக்கள் மத்தியில் எழுந்துள்ள கவலைக்கு பொறுப்பு வாய்ந்த பதிலளிக்கக் கடமைப்பட்டுள்ளது.

■ ■

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# தாக்குப் பிடிப்பாரா ரணில்?

நரன்

அரசியல் குழப்பங்கள் இன்னும் ஓய்ந்த பாடில்லை.

தானே கிண்டிய குழிக்குள் தானே விழுந்து இப்போது வெளிவரத் திணறிக்கொண்டிருக்கிறது ஐக்கிய தேசியக் கட்சி.

அவசியமின்றி தான் ஆட்சியைக் கலைத்துத் தேர்தலுக்குப் போகப் போவதான ஒரு அரசியல் குழப்பத்தை ஏற்படுத்தி விட்டு இப்போது அதன் நெருக்கடியில் சிக்கிக்கொண்டிருக்கிறது.

அதுமட்டுமன்றி தனது ஆட்சியைக் கலைக்க பொதுஜன ஐக்கிய முன்னணி சதி செய்வதாக ஒரு விடயத்தைத் கூறி அதை தனது அரசியல் வெடிகுண்டாக்க முனைந்து பயனற்றுப் போனது.

இதன் மூலம் சோர்ந்து போயிருந்த பொ.ஐ.மு.வை உசுப்பி விடத்தான் வழி வகுத்தது.

பாராளுமன்ற வழிமுறையில் பெரும்பான்மையைக் கைப்பற்றி ஆட்சியமைப்பது ஒன்றும் சதியல்ல, நாம் விரைவில் ஆட்சியமைப்போமென பொ.ஐ.மு. பேச்சாளர் கலாநிதி சரத் அமுனுகம சவால் விட்டிருந்தார். மக்கள் மத்தியில் இவ்வாறான ஒன்றைச் சதியென நம்பப்பண்ணவும் ஐ.தே.க.வால் முடியாமல் போனது.

இதேவேளை ஆட்சியைக் கலைப்பது குறித்து அது மூன்று நிபந்தனைகளை முன்வைத்து அவற்றை ஜனாதிபதி ஏற்காவிடில் ஆட்சியைக் கலைத்து பொதுத் தேர்தலுக்குச் செல்வதைத் தவிர தமக்கு வேறு வழியில்லையெனத் தெரிவித்திருந்தது.

அந் நிபந்தனைகளாக ஜனாதிபதி தனது பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்தைக் கைவிட்டு அவ் உரிமையைப் பாராளுமன்றத்திடம் விட வேண்டுமென்றும், ஜனாதிபதிக்குரிய நிறைவேற்று அதிகாரங்களைக் கைவிட்டு அவற்றைப் பாராளுமன்றத்தின் நிறைவேற்றுக் குழுவுக்கு வழங்க வேண்டுமென்றும், பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சிக் கட்டுப்பாட்டை மீறி மனசாட்சிப்படி வாக்களிக்கும் பிரேரணைக்கு இணங்க வேண்டுமென்றும் தனது மூன்று நிபந்தனைகளை முன்வைத்தது.

ஆனால், இவற்றை ஜனாதிபதி ஏற்க வேண்டுமென்பதற்கு எவ்வித கடப்பாடும் உடையவரல்ல.

அவர் இவற்றுக்கு உடன்படாவிட்டால்- உடன்பட மாட்டாரென்பது ஐ.தே.க. வுக்குத் தெரிந்த விடயமே - அடுத்து ஐ.தே.க.வின் நிலையென்ன?

அடுத்த காலை முன்னோக்கி வைப்பதா? பின்னோக்கி வைப்பதா? என்பதுதான் கேள்வி.

முன்னோக்கி வைப்பதென்றால் என்ன? தான் கூறியது போல் பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தலுக்குச் செல்ல வேண்டும்.

ஆனால் அப்படிச் செய்யவும் ஐ.தே.க. அரசாங்கத்தால் முடியாது.

அங்குதான் அவர்கள் மீண்டும் ஒருதடவை தாமே தமது மூக்கை உடைத்துக் கொள்கிறார்கள்.

அரசாங்கத்துக்கோ, பிரதமருக்கோ, தனது பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் அரசியல் சட்டப்படி இல்லை.

ஜனாதிபதிக்கே அந்த அதிகாரம் உண்டு.

பிரதமரோ, பாராளுமன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களோ பாராளுமன்றத்தைக் கலைக்கும்படி பாராளுமன்றத்தில் தீர்மானமொன்றை நிறைவேற்றினாலும் அத் தீர்மானத்தின் மீது முடிவெடுப்பவர் ஜனாதிபதியே.

ஜனாதிபதி விரும்பினால் அத் தீர்மானத்தை ஏற்றுப் பாராளுமன்றத்தைக் கலைக்கலாம், அல்லது அதை ஏற்காது கலைக்காது விடவும் செய்யலாம்.

இந் நிலையில் அவருக்கு வேறு சில மார்க்கங்களும் உண்டு.

வேறு கட்சிகளை ஆட்சியமைக்கக் கோரலாம். அல்லது பாராளுமன்றத்தைச் சிறிது காலம் ஒத்திப் போடலாம்.

இவ்வாறான நிலையில் பாராளுமன்றத்தைக் கலைக்கும் தீர்மானமொன்றை நிறைவேற்றுவது ஐ.தே.மு. விற்குப் பாதகமாகவும் போய் விடலாம்.

இது முக்கிய அமைச்சுப் பொறுப்புகளை, - பாதுகாப்பு, நிதி போன்றவற்றை ஜனாதிபதி மீளப் பொறுப்பேற்க வழிகோலி விடலாம்.

அதேவேளை ஐ.தே.க. சதியெனத் தெரிவித்ததுபோல் ஐ.தே.க.வின் சிலரைச் சேர்த்துக்கொண்டு பொ.ஐ.மு. ஆட்சியமைத்துக் கொள்ளவும் சந்தர்ப்பம் உண்டு.

அவ் ஆட்சிக்கு சிலவேளை ஐ.தே.க. பாராளுமன்றப் பிரமுகரொருவரையே பிரதமராக்கி விடக்கூடிய சாமர்த்தியத்தை பொ.ஐ.மு. பெற்றிருக்குமானால் ஐ.தே.க. பெருத்த அடியொன்றைப் பெற்றுக்கொள்ள நேரிடும்.

தேர்தலுக்குச் செல்லாமலே, ஆட்சியைக் கபளீகரம் செய்துவிடக்கூடிய வழி பொ.ஐ.மு.வுக்கு உண்டு.

ரணில் பாராளுமன்றத்தைக் கலைக்க முற்பட்டால் அவரால் தனது அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பிலிருந்து விலகத் தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதிக்கு அறிவிக்க மட்டுமே செய்யலாமேயன்றி தானாக அரசாங்கத்தைக் கலைக்க முடியாது.

ஏன் ரணில் ஆட்சிக் கலைப்பைக் கோருகிறார் என்பது இப்போது சிந்திக்கப்பட வேண்டிய கேள்வி.

இலங்கையின் எரியும் பிரச்சினையான இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் செயற்பாட்டில் புலிகளுடன் யுத்த நிறுத்தத்தையும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் செய்துள்ள அதேவேளை மிக விரைவில் தாய்லாந்தில் அரசியல் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ள வேளையில் இப்படி ஆட்சியைக் கலைப்பதற்கான முடிவொன்றை எடுப்பது பொறுப்புவாய்ந்ததும் விவேகமானதுமான செயலா என்ற கேள்வி அக்கறை மிக்க யாவருக்கும் எழும்.

ஆனால் இதில் இனப்பிரச்சினைத் தீர்வு பற்றிய பொறுப்புணர்வைவிடவும் தமது ஆட்சியின் எதிர்காலம் பற்றிய சிந்தனைதான் எம் நாட்டு ஆட்சியாளர்களுக்கு இருந்து வருவது துரதிஷ்டம்தான் என்றாலும் அதுதான் இயற்கையென நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியை நடத்துவதற்கு ஜனாதிபதி இதுவரை பாரிய தடைகள் எதையும் போட்டதாகச் சொல்வதற்கில்லை.

ஆனால் அவர்களுக்கிருக்கும் ஒரே பயம் என்னவென்றால் பாராளுமன்றம் இயங்கத் தொடங்கி ஒரு வருடகாலத்தின் பின் அதைக் கலைக்கக்கூடிய அதிகாரத்தை ஜனாதிபதி அரசியலமைப்புச் சட்டம் வாயிலாகப் பெற்றுக்கொள்வார் என்பதுதான்.

அவ்வாறு அவர் கலைக்கும் நிலை ஏற்படுமுன்னர் தாமாகவே அதைக் கலைத்துக் கொண்டால் ஜனாதிபதியால் அச்சுறுத்தலாக உள்ளதென்ற குற்றச்சாட்டுடன் தேர்தலுக்குச் செல்லலாம்.

அதேவேளை ஐ.தே.க. கடந்த பொதுத் தேர்தலிலும் பின்னர் உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் தொடந்து வெற்றியீட்டியுள்ள நிலையில் இப்போதே தேர்தலைச் சந்திப்பது தமக்குச் சாதகமாயிருக்குமெனவும் அவர்கள் கருதலாம்.

ஆனால் இன்னும் நாட்செல்லச் செல்ல அரசாங்கத்தின் மீதான அதிருப்திகள் அதிகரிக்கலாம்.

ஒருபுறம் வரிச் சுமை, பொருட்களின் விலையேற்றம் என்பன அதிகரிக்கின்ற அதேவேளை, வெளிநாட்டு உதவிகள் பற்றிய எதிர்பார்ப்புகள் திருப்தியடையக்கூடியளவு கைகூடவில்லை.

உதவி வழங்கும் நாடுகள் நிரந்தர சமாதானம் ஏற்பட்ட பிறகு, சமாதானத் திட்டமேதும் நடைமுறைப் படுத்தப்பட்ட பின்னர்தான் தாம் முழு அளவில் உதவ முடியுமெனக்கூறி, முன்னைய உதவிகள் பலவும் அர்த்தமற்றதாகிப் போன உதாரணங்களைச் சுட்டிக் காட்டிவிட்டுச் சென்றுள்ளன.

இந் நிலையில் அரசாங்கம் அமெரிக்கா, இந்தியா போன்ற ஒரு சில நெருங்கிய கரங்களிலேயே தஞ்சம் புகவேண்டியதாக ஆகியுள்ளது.

ரணில் அண்மையில் அமெரிக்காவுக்கு விஜயம் செய்து பொருளாதார, வர்த்தக ஒத்துழைப்புகள் பற்றிப் பேசியதையொட்டி ஒருசில உடன்பாடுகள் காணப்பட்டனவேதவிர அவையும் நாட்டின் நிலைவரத்தை ஈடுகட்டக்கூடிய பெருத்த உதவிகளாக அமையவில்லை.

வர்த்தகத் துறையில் திறக்கப்படுவதற்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட கதவுகள் வர்த்தகர்களுக்கு சில புதிய வாய்ப்புகளைக் கொடுக்கலாமேயன்றி பொதுமக்களுக்கு எந்தளவுதூரம் பயனுள்ளதென்று சொல்வதற்கில்லை.

மாறாக, முழுமையாகச் தெரியப்படாத இவ் உடன்படிக்கைகளில் இலங்கையின் வளங்கள், வசதிகள், நிலப்பரப்புகள், கடற் பரப்புகள், வான்பரப்புகள் என்பன எவ்வளவு தூரம் வெளிநாடுகளின் குறிப்பாக அமெரிக்காவின் பாவனைக்கு வழங்கப்படப்போகின்றன என்ற அச்சமும் இங்குள்ளது.

அத்துடன், அரசாங்க சேவைகள், கூட்டுறவுச் சேவைகள், பொதுநலச் சேவைகள், வங்கிச் சேவைகள், தொடர்புடகச் சேவைகள் என்பனவற்றைத் தனியார் மயப்படுத்தும்படியான அழுத்தங்களை உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றவை எவ்வளவுக்குப் பிரயோகித்திருக்கின்றன, இவற்றுக்கு இலங்கை கட்டுப்பட நேருமா என்பனவும் இலங்கையில் நெடுங்காலப் போராட்டங்கள் மூலம் ஈட்டப்பட்ட தொழிற்சங்க உரிமைகளுக்கு ஆபத்து நேருமா என்பதும் அச்சுறுத்தலாக இருக்கின்றன.

இந் நிலையில்தான் அரசாங்கம் இம் மாதம் தொடர்ச்சியாகப் பாராளுமன்றக் கூட்டங்களை நடத்தி 36 மசோதாக்களை அவசர அவசரமாக நிறைவேற்ற முனைந்துள்ளது.

எனவே இவற்றின் விளைவுகள் வெளிவரத் தொடங்குகையில் அரசாங்கத்துக்கு பலத்த எதிர்ப்புகள் தென்பகுதியில் தோன்றலாம்.

இப் பொருளாதார நெருக்கடி பற்றிய அபாயம் நெருங்கி வருகையில், மறுபுறம் பேச்சுவார்த்தை நெருக்கடியும் தலைதூக்கும் சாத்தியங்கள் தோன்றி வருகின்றன.

புலிகளுடனான தாய்லாந்துப் பேச்சுவார்த்தையானது கடந்த மே மாதம் முதல் தொடர்ந்து பிற்போடப்பட்டு இப்போது செப்டம்பரில் நடத்த உத்தேசித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் அதில் என்ன பேசப்படவுள்ளதென்பதில் மாற்றுக் கருத்துகள் எழுந்துள்ளன.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமும் அவரது எதிர்த் தரப்பாக இருந்துவரும் பேரியல் அஷ்ரப் பின் தேசிய ஐக்கிய முன்னணியும்கூட தாய்லாந்துப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களுக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்படவேண்டுமென அரசாங்கத்தை வலியுறுத்துகின்றன.

இது, அரசாங்கம் விரும்பினாலும் புலிகளும் உடன்படவேண்டிய விடயம்.

முஸ்லிம் காங்கிரஸ் இன்றைய ஐக்கிய தேசிய முன்னணி கூட்டரசாங்கத்தின் ஒரு பிரதான பாத்திரத்தை வகித்து வரும் கட்சியாகும்.

மறுபுறம் ஜனாதிபதி, புலிகளுடனான பேச்சுவார்த்தையை உடன் தொடங்க வேண்டும், அப்போதுதான் உண்மை நிலை தெரியும், அதேவேளை இனப் பிரச்சினை தீர்வு தொடர்பான அடிப்படை விடயங்கள் அங்கு பேசப்படவேண்டுமென வலியுறுத்தி வருகிறார்.

அரசியல் தீர்வு பற்றிய உடன்பாடின்றி இடைக்கால நிர்வாக சபை வழங்குவதை அவர் எதிர்த்து வருகிறார்.

அதேவேளை தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகளின் போது புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தீர்த்துக்கொள்ளப் படாத விடயங்களைப் பேசித் தீர்த்துக்கொள்ளலாமென ரணில் தெரிவித்துள்ளார்.

ஆனால் புலிகளோ, இடைக்கால நிர்வாக சபை வழங்கப்படுமா இல்லையா என்பதை அறுதியும் இறுதியுமாகத் தெரிந்துகொண்டே மேற்கொண்டு எதைப்பற்றியும் பேசலாமெனவும், புரிந்துணர்வு ஒப்பந்தம் பற்றிய விடயங்கள் யாவற்றையும் பேச்சுவார்த்தைக்குச் செல்லுமுன்னரே நிறைவு செய்துவிட வேண்டுமெனவும் வன்னியிலிருந்து திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்கள்.

ரணில் அமெரிக்கா சென்றபோது உடன் சென்ற அமைச்சர் மிலிந்த மொரகொட லண்டன் சென்று புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் நடத்திய பேச்சுவார்த்தையில் தாய்லாந்துப் பேச்சின் போது புரிந்துணர்வு உடன்படிக்கை பற்றிய விடயங்களும் நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் அண்மையில் தமிழ்க் கூட்டமைப்பினருடனான புலிகளின் சந்திப்பில் மேற்படி மாறுபட்ட கருத்தினைத் தெரிவித்திருந்தனர்.

மீண்டும் அமைச்சர் மிலிந்த மொரகொடவும் பிரதமரின் செயலாளர் பிறட்மன் வீரக்கோனும் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துள்ள போதிலும் அவர்களின் சந்திப்பின் விபரங்கள் இக் கட்டுரை எழுதப்படும் வரை தெரிய வரவில்லை.

எவ்வாறாயினும் தாய்லாந்துப் பேச்சுவார்த்தை புலிகள் - அரசாங்கம் - முஸ்லிம் காங்கிரஸ்- ஜனாதிபதி என்ற சதுரங்க ஆட்டமாக மாறப்போவது புலப்படுகிறது.

எப்படித்தான் சொல்லிக் கொண்டாலும் தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகள் என்பது புலிகள் உடன்படாது விடும்வரை வெற்றியடைய முடியாது.

இதில் இடைக்கால நிர்வாகம் என்பது பிரதான விடயம். ஆனால் புலிகள் ஏற்கக்கூடிய வகையில் இடைக்கால நிர்வாகத்தை அரசாங்கத்தால் வழங்க முடியுமா என்பதே கேள்வி.

ஆனால் அரசாங்கத்திடம் இடைக்கால நிர்வாகத்தை வழங்கக்கூடிய அதிகாரம் இல்லை. - அது ஜனாதிபதியிடமே உள்ளது.

எனவே ஜனாதிபதி ஏற்காத பட்சத்தில் அரசாங்கத்திடம் புலிகளின் கோரிக்கைக்குப் பதிலில்லை.

எனவே பேச்சுவார்த்தையிலும் ஒரு சிக்கல் நிலை தோன்றும் சாத்தியங்கள் உள்ளது.

எனவேதான் இச் சிக்கல்களில் மூழ்குமுன்னரே அரசாங்கத்தைக் கலைத்துக்கொண்டால், புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் தாம் இனப்பிரச்சினையைத் தீர்க்கவே முயன்றோம், ஜனாதிபதியே தடையாக உள்ளார், அதனால் தமக்கு மூன்றில் இரண்டு பங்கு ஆசனங்களைப் பெற அமோக ஆதரவு தந்து ஜனாதிபதியை நீக்க உதவும்படி கோரமுடியும்.

ஆனால் புலிகள் இவ்வாறு யுத்த நிறுத்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம் என்றெல்லாம் வந்துவிட்டு பேச்சுவார்த்தையில் ஒரு முற்றைக் காணாமல் அரசாங்கம் கைகழுவிச் செல்வதை எவ்வவுதூரம் வரவேற்குமென்பது கேள்விக்குறியே.

அதேவேளை சிங்கள மக்களுக்கு ஜனாதிபதியின் அதிகாரங்களால் தம்மால் பாராளுமன்றம் நடத்த முடியவில்லையெனவும் பிரசாரம் செய்யமுடியும்.

ஆயினும், ஜனாதிபதியால் மட்டுமேதான் பாராளுமன்றத்தைக் கலைக்க முடியும் என்ற நிலை வெளித் தெரிந்ததும் ஐ.தே.க. தான் முன்வைத்த காலை பின் வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அதனால் ஜனாதிபதியுடன் அவரின் அதிகாரங்களைக் குறைக்குமுகமான பேச்சுவார்த்தைகளை நடத்த ஐ.தே.க. முனைந்தது.

ஆனால் இதிலும் ஜனாதிபதி மாற்றுத் தந்திரோபாயமொன்றைப் பிரயோகித்து அவர்களின் எண்ணத்தில் மண்தூவிவிட்டார்.

ஐ.தே.க. ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பது பற்றிக் கோர, அவரோ, நிறைவேற்று ஜனாதிபதி முறையை முற்றாக ஒழிக்கத் தான் தயார் என்று கூறுகிறார்.

ஐ.தே.க. வைவிட அவர் மேலே சென்றுவிட்டதாகத் தோன்றினாலும் இதிலுள்ள ராஜதந்திரத்தைத் தான் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி முறையை ஒழிப்பதானால் அரசியல் யாப்பை மாற்றியமைக்க வேண்டும்.

அப்படி மாற்றியமைக்க வெளிக்கிட்டால் அதில் முஸ்லிம்கள், மலையகத் தமிழர் உள்ளடங்கலாக மொத்த இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றியும் உள்ளடக்க வேண்டுமென்ற சர்ச்சைகள் வெளிக் கிளம்பும்.

இதற்கு ஜனாதிபதியன்றி, அரசாங்கமே முகம் கொடுக்க நேரிடும்.

அதேவேளை இவை பற்றிய பூர்வாங்கப் பேச்சுவார்த்தைகளிலேயே காலம் கழிந்து ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைக்கக் கூடிய அதிகாரம் அவரது கைக்கு வந்து சேர்ந்துவிடும்.

ஜனாதிபதி இப்படிக் கூறுவது அவருக்கும் ஒரு வகையில் சாதகமானதே.

இரண்டு தடவை ஜனாதிபதிப் பதவியேறிய சந்திரிகாவுக்கு அடுத்த தடவை அப் பதவியை வகிக்க முடியாது.

எனவே நாட்டின் உயர் பதவியை மற்றொரு பீடத்துக்கு மாற்றிக் கொண்டால் அவரால் அரசியல் தலைமையை தொடர்ந்தும் தக்க வைக்க முடியும்.

இல்லையேல் ஓய்வு பெறவேண்டியவராகிவிடுவார்.

ஒரு கல்லில் இரண்டு மாங்காய் என்ற விதத்தில் ஜனாதிபதியால் வீசப்பட்ட இந்தக் கருத்துக்கு ஐ.தே.க. சரியாகப் பதிலளிக்க முடியாத நிலையில் உள்ளது.

அவர்கள் ஜனாதிபதிப் பதவியை ஒழிக்க வேண்டாம், அதிகாரங்களை மட்டும் குறைத்தால் போதும் என்று சொல்லிக்கொண்டு நிற்கிறார்கள்.

இதற்கு அடுத்து என்ன செய்யப் போகிறார்கள் என்பதுதில்தான் அவர்களின் அரசியல் சாணக்கியம் புலப்படும்.

அரசாங்கத்தின் ஓராண்டு நிறைவுக்கான காலம்- ஜனாதிபதியின் கையில் அதைக் கலைக்கும் அதிகாரம் வந்து சேரும் தினம் டிசம்பர் 5, நெருங்கிக் கொண்டிருக்கிறது. ■

# நடக்கும் என்பார் நடக்காது நடக்காதென்பார் நடந்துவிடும்

தாய்லாந்தில் இடைக்கால நிர்வாகத்தைப் பற்றி மட்டுமே பேச முடியும். புரிந்துணர்வு உடன்படிக்கை பற்றியோ அல்லது மூலாதாரமான விடயங்களைப் பற்றியோ பேச முடியாது எனப் புலிகள் தெரிவித்துள்ளதாக அறியப்படுகிறது.

இதன் காரணமாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான இறுதிச் சந்தர்ப்பம் எனச் சொல்லப்பட்ட தற்போதைய முயற்சிகள் சிதறடிக்கப்பட்டு விடுமோ என்ற ஐயம் எழுந்துள்ளது நியாயமே.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் படைகள் பொது இடங்கள், ஆலயங்கள், பாடசாலைகளில் இருந்து வெளியேறுவது முற்றுமுழுதாக நிகழவில்லை என்ற குற்றச்சாட்டும் புலிகள் தரப்பால் முன்வைக்கப்படுகிறது. அத்தோடு வெளியேறிய இடங்களில் இருந்து 1000 மீற்றர் அல்லது 500 மீற்றரில் அதே முகாம்கள் நிறுவப்படுகின்றன. இவையெல்லாம் அதிருப்தியைத் தோற்றுவித்துள்ளன.

தமிழர் கூட்டமைப்பைச் சேர்ந்த திருமலை பா.உ. சம்பந்தனின் தலைமையில் பிரதமருடனும், பாதுகாப்பு உயர் அதிகாரிகளுடனும் நடாத்திய பேச்சுவார்த்தையில் வலிகாமம் வடக்கில் இருந்து இடம் பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றம் வலியுறுத்தப்பட்டது. ஆனால் எல்லா இடங்களிலும் அவ்வாறு செய்வதற்குச் சாத்தியம் இல்லையெனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் எடுத்துரைக்கப்பட்டது. அது அதியுயர் பாதுகாப்பு வலயம் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டது.

நாங்கள் உங்களிடம் பிச்சை கேட்க வரவில்லை. மக்கள் மீள் குடியேறுவதற்கு இத்தகைய தடைகள் இருக்கக் கூடாது. பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படும் என்ற பயம் அர்த்த மற்றது. யுத்தம் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதானால் இரு தரப்பும் பதினைந்து நாட்களுக்கு முன் அறிவிக்க வேண்டும் என்று புரிந்துணர்வு உடன்படிக்கையில் கூறப்பட்டு இருக்கிறது. மக்கள் தமது சொந்த இடங்களில் குடியேறுவதற்கு இத்தகைய காரணங்கள் செல்லுபடியற்றவை என்று சம்பந்தனால் தெரிவிக்கப்பட்டது.

இது விடயம் பேசப்பட்டது ஆகஸ்ட் 2ம் திகதி. ஆகஸ்ட் 3ம் திகதி தமிழ் கூட்டமைப்பு பா.உ.க்கள் வன்னியில் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் எஞ்சிய விவகாரங்களைத் தாய்லாந்தில் பேசித் தீர்க்கலாம் எனப் பிரதமர் தெரிவித்திருந்தார்.

பிரதமரின் கூற்றுக்குப் பதிலாகவே இடைக்கால நிர்வாகம் என்பதைத் தவிர வேறு எதைப் பற்றியும் தாய்லாந்தில் பேச முடியாது என்று புலிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்டன் பாலசிங்கம்-மிலிந்த மொறகொட பேச்சுவார்த்தையிலும் இந்த விடயங்கள்தான் பேசப்பட்டுள்ளன போல் தெரிகிறது.

'மண்ணை கொள் மற்றதொன்று மற' என்பது போல் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னான்டோ தனிநாட்டைத் தவிர வேறு எதைப் பற்றியும் பேசலாம் எனப் புதுடில்லியில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார். கூடவே அடுத்த மாதம் தாய்லாந்தில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவித்திருந்தார். ஆனால் இந்தக் கூற்றுக்களை எல்லாம் நிராகரிக்கும் விதத்தில் புரிந்துணர்வு உடன்படிக்கை முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் அதற்குப் பின்பே நேரடிப் பேச்சுவார்த்தை, அதுவும் இடைக்கால நிர்வாகம் என்பதைப் பற்றி மட்டுமே, எனத் தெரிவித்துள்ளனர்.

> **பிரதமாரின் கூற்றுக்குப் பதிலாகவே "இடைக்கால நிர்வாகம் என்பதைத் தவிர வேறு எதைப் பற்றியும் தாய்லாந்தில் பேச முடியாது" என்று புலிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இதனால் பேச்சுவார்த்தைக்கான திகதியை நிர்ணயிப்பதென்ற நிலைக்குச் செல்லாமல் தற்போதைய நிலைமையை நீடித்துச் செல்லலாம் என்ற நிலைப்பாட்டை அரசும் எடுத்துள்ளதாகத் தெரிய வருகிறது.

ஏற்கனவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க "பேச்சுவார்த்தைக்கான திகதியை நிர்ணயிப்பது தற்போதைக்கு அவசியமில்லை. புரிந்துணர்வு நிலையை மேம்பாடடையச் செய்வதே முக்கியம்" எனவும் தெரிவித்திருந்தார்.

இதற்கிடையே "முஸ்லீம் காங்கிரஸின் அனுசரணை இல்லாமல் அல்லது முஸ்லீம்களைப் புறக்கணித்து தாய்லாந்தில் பேச்சுவார்த்தை நடத்த முடியாது" என்று முஸ்லீம் காங்கிரஸ் பகிரங்கமாகவே வலியுறுத்தியுள்ளது. "அரசு பொருளாதார ஸ்திர நிலையைப் பெறுவதற்காக முஸ்லீம் மக்களின் நலன்களை அடகு வைக்க முடியாது" என முஸ்லீம் காங்கிரஸ் தலைவரான அமைச்சர் ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை முஸ்லீம் மக்கள் வாழும் பகுதிகளில் படைநிலைகள், பொலிஸ் நிலையங்கள் அகற்றப்படுவதை அவர்கள் திட்டவட்டமாக ஆட்சேபித்துள்ளார்கள்.

புலிகளின் கையில் ஈழம் வழங்கப்பட்டு விட்டது. அவர்கள் நீதிமன்றம், பொலிஸ் நிலையம், வங்கிகளை நடத்துகிறார்கள், இலங்கையின் இறைமை பாரதூரமான அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருக்கிறது என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி எதிரணியினரால் ஐக்கிய தேசிய முன்னணி அரசின் மீது குற்றஞ் சுமத்தப்படுகிறது. படையினர் பாதுகாப்பற்ற நிராதரவான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

மகா சங்கங்களும் கிட்டத்தட்ட இதே நிலைப்பாட்டில்தான் இருக்கின்றன.

**தாகூர்**

சர்வதேச சமூகம் இலங்கையில் அமைதித் தீர்வைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளில் தனது பரிபூரண ஆதரவை வழங்கத் தயாராக இருக்கும் சூழ்நிலையில் பிரதமர் ரணிலின் சமாதான முன்னெடுப்புக்கள் பெரிதும் பாராட்டப்படுகின்றன என்பதனையும் மறுப்பதற்கில்லை.

ஆனால் எமது அண்டை மண்டலத்தில் ஆறு கோடி தமிழர்கள் வாழும் தமிழகத்தில் புலிகளின் ஆதரவாளர்கள் மீது 'பொடா' பாயும் என்பதே பிரதான நிலைப்பாடாக இருக்கிறது. தமிழக மக்களின் மௌனமும் சம்மதம் என்பது போல்தான் இருக்கிறது.

இதற்கிடையே இந்திய அரசியலில் நாரதர் எனக் கூறப்படும் சுப்பிரமணிய சுவாமி அவர்கள் பாலசிங்கம் தரித்துச் செல்வதற்கு மாலைதீவு அனுமதி அளிப்பதை ஆட்சேபித்துள்ளார்.

ராஜீவ்காந்தியைப் படுகொலை செய்த பயங்கரவாதிகளைத் தனது நாட்டினூடாகச் செல்வதற்கு எவ்வாறு மாலைதீவு அனுமதி அளிக்கும் என்பதே சுப்பிரமணியசுவாமி அவர்களின் கேள்வியாகும்.

போதாக்குறைக்கு மாலைதீவில் தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் உதவியுடன் நடத்தப்பட்ட சதிப்புரட்சியின் போது ஆட்சியாளர்களுக்கு இந்தியா கைகொடுத்து உதவியதையும் ஞாபகமூட்டியுள்ளார்.

இந்த நிலைமைகள் ரணிலுடன் நல்லுறவைப் பேணும் புதுடில்லிக்கும் சங்கடத்தை ஏற்படுத்தும் விடயமாகும்.

இவையெல்லாம் தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகளைத் தொலைதூரத்திற்கு இழுத்துச் செல்லலாம்.

இதற்கிடையே ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்படல் வேண்டும், அதற்கு அவர்கள் உடன்பட வேண்டும், என்று ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்துகிறது.

தமது தலைக்கு மேல் கத்தி தொங்கும் நிலையில் ஆட்சி நடத்த முடியாதென அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி, சகல அதிகாரமும் கொண்ட ஜனாதிபதி முறை நீக்கப்பட வேண்டும் என்கிறார். அதற்காக அரசியலமைப்பில் முற்று முழுதான மாற்றத்தை அவர் வலியுறுத்துகிறார். அவருடைய இரண்டு பதவிக் காலமும் காலாவதியாகும் நிலையில் அவர் இதனை வலியுறுத்துகிறார். ஆனால் ஜனாதிபதியின் சிம்மாசனத்தில் தானும் சில வருடங்கள் உட்கார வேண்டும் என்று பிரதமர் ரணிலும் சிந்திக்கிறார்.

இரு தலைவர்களின் நலன்களும் இங்கு மோதுகின்றன. விசேட அதிகாரம் கொண்ட பிரதமர் பற்றியும் பேசப்படுகிறது. அப்படியொரு முறை இஸ்ரேலில் இருப்பதாகப் பிரதமர் தெரிவித்துள்ளார். இங்கு பிரதமர் பாராளுமன்றத்தில் பிரசன்னமாக இருப்பதால் ஜனாதிபதிமுறை போன்ற பிரச்சினைகள் ஏற்படாது என ஐ.தே.க. வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

தெற்கில் அதிகாரப் போட்டி தீவிரமடைகிறது. இத்தகைய நிலையில் தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகள் தொலைதூரக் கனவாகிவிடும் சாத்தியங்களையும் மறுப்பதற்கில்லை.

---

**அண்டை மண்டலத்திலிருந்து**

# பட்டினிச் சாவில் கைத்தறி நெசவாளர்கள்

**கானகன்**

தமிழ்நாட்டில் கைத்தறி நெசவாளர்கள் பட்டினிச் சாவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள். அவர்களின் துயரத்திற்கு என்ன காரணம்? அதற்கான நிரந்தரத் தீர்வு என்ன? என்பதைப் பற்றித் துளி கூடச் சிந்திக்கத் தயாராக இல்லாத ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும் பசியால் வாடும் நெசவாளர்கள் பெயரில் சண்டை போட்டுவருகிறார்கள்.

தமிழ் நாட்டில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக அதிக மக்களுக்கு வேலை வாய்ப்புத் தருவது கைத்தறித் தொழில்தான். இந்தத் தொழிலை நம்பித் தமிழ்நாட்டில் பல இலட்சம் நெசவாளர் குடும்பங்கள் உள்ளன. அதிக வேலைவாய்ப்புத் தந்த கைத்தறித்தொழிலைக் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக மாறி மாறி ஆட்சிக்கு வந்த மத்திய, மாநில அரசுகள் பாதுகாக்கத் தவறியதால் கைத்தறித் தொழில் இன்று மிகவும் நலிந்து நெசவாளர்கள் பட்டினிச் சாவுக்குச் சென்று கொண்டுள்ளனர்.

ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியிலுள்ள நெசவாளர்கள் பட்டினிச் சாவில் வாடுவது கண்டு அங்குள்ள சிலரால் கஞ்சித் தொட்டிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இது பத்திரிகைகளில் பிரபலமானது.

தி.மு.க. தலைவர் கருணாநிதி, பாதிக்கப்பட்டுள்ள நெசவாளர்களுக்குக் கஞ்சித் தொட்டி திறக்கத் தமது கட்சிக்காரர்களுக்கு உத்தரவிட்டார். இதைத் தொடர்ந்து தி.மு.க ஜெயலலிதாவின் சொந்தத் தொகுதியான ஆண்டிப்பட்டியிலேயே கஞ்சித் தொட்டியைத் திறந்து மக்களுக்கு வழங்கிப் பிரபலப்படுத்தியது. எங்கெல்லாம் தி.மு.க.வினர் கஞ்சித் தொட்டி திறக்கிறார்களோ அங்கெல்லாம் அவர்களுக்கு எதிராக அ.தி.மு.க. வினர் முட்டை, பிரியாணி போன்றவற்றை வழங்கத் தொடங்கினர்.

திருத்தணி அருகே அம்மையார் குப்பம் என்ற ஊரில் கஞ்சித் தொட்டியைத் திறக்கப் போவதாகக் கருணாநிதி அறிவித்தார். அதற்கான ஏற்பாடுகளைத் தடல்புடலாக மேற்கொண்டு கருணாநிதியின் வருகைக்காகத் தி.மு.க.வினர் காத்திருந்தனர். ஆனால் அதே பகுதியில் கைத்தறி நெசவாளர்களுக்கு முட்டை, பிரியாணி வழங்கப் போவதாக அ.தி.மு.க.வினர் அறிவித்தவுடன் கருணாநிதி பின்வாங்கி விட்டார்.

கைத்தறி நெசவாளர் துயர் துடைக்க உடனடி அறிவிப்பாக முதலமைச்சர் ஜெயலலிதா, தேங்கிக் கிடக்கும் பலகோடி மதிப்புள்ள சேலைகளையும், வேட்டிகளையும் தமிழக அரசு கொள்முதல் செய்து ஏழை மக்களுக்கு மானிய விலையில் 'ரேசன்' கடைகள் மூலம் வழங்குவதாக அறிவித்தார். தற்போது அது நடைமுறையில் உள்ளது. இதன்படி சேலை ரூ.40க்கும் வேட்டி ரூ.30 க்கும் தமிழக அரசால் நடத்தப்படும் 'ரேசன்' கடைகளில் கொடுக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் தமிழக அரசிற்கு ரூ. 480 கோடி ரூபாய் மானிய செலவு ஏற்பட்டுள்ளது.

ஆனபோதிலும் கைத்தறி நெசவாளர்களின் பிரச்சனையை பசியிலாக்க விரும்பிய தி.மு.க. அமைதி அடைந்துவிடவில்லை. மதுரையில் தி.மு.க. வினர் ஆகஸ்டு 9 ஆம் தேதி நெசவாளர்களுக்குக் கஞ்சி வழங்கத் தடல்புடலாக ஏற்பாடு செய்து, சென்னையில் இருக்கும் ஸ்டாலினை அழைத்தனர். உள்ளூர்த் தலைவர்களான மதுரை மேயர், சே. ராமச்சந்திரன் முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர் பி.டி. ஆர். பழனிவேல் ராஜன் ஆகியோரும் வந்தனர். மதுரை செல்லூர் 60 அடிச்சாலையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்ச்சி பலத்த கலவரத்தில் முடிந்தது.

முன்னதாக இந்நிகழ்ச்சிக்கு அ.தி.மு.க.வினர் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆனால் தி.மு.க. வினர் பொலிஸாரிடம் அனுமதி பெற்று நிகழ்ச்சியை ஆரம்பித்தனர். உடனே அ.தி.மு.க.வினர் ரகளையில் ஈடுபட்டு சாலைமறியல் செய்தனர். தி.மு.க.வினரும்,அ.தி.மு.க.வினரும் நேருக்கு நேர் மோதும் சூழ்நிலை ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து தி.மு.க. வினர் மீது பொலிஸார் தடியடிப் பிரயோகம் செய்து மதுரை மேயர், பி.டி. ஆர் பழனிவேல் ராஜன் உட்பட 100 தி.மு.க. வினரைக் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

உண்மையில் பட்டினியில் வாடும் நெசவாளர்கள் தங்களுக்குக் கஞ்சியோ, பிரியாணியோ கேட்கவில்லை. நிரந்தர வேலை வாய்ப்பு மற்றும் ஊதியத்தையே கேட்கிறார்கள். கஞ்சி, முட்டை, பிரியாணி விநியோகமும் தங்களை அவமானப்படுத்துவதாகவே நெசவாளர்கள் கருதுகிறார்கள்.

இப்போதும் கைத்தறித் துணிகளுக்கு வெளிநாடுகளில் மவுசு இல்லாமல் இல்லை. ஸ்வீடன் நாடு மட்டுமே ரூ.1500 கோடி கைத்தறித் துணிகளை ஏற்றுக் கொள்கிறது. சென்னையிலுள்ள கூட்டுறவு சங்கங்கள் ரூ.125 கோடிக்கு ஆண்டுதோறும் ஸ்வீடனுக்கு ஏற்றுமதி செய்கிறது. ஸ்வீடனைப் போல் பல மேலை நாடுகளும் தமிழ்நாட்டில் இருந்து கைத்தறித் துணிகளைத் தருவித்துக் கொண்டிருந்தன. ஆனால் மத்திய அரசின் ஜவுளிக் கொள்கை காரணமாக அவ்வப்போது பஞ்சு விலையும், நூல் விலையும் தாறுமாறாக ஏறியது. அத்துடன் கைத்தறிக்கென ஒதுக்கப்பட்டிருந்த 22 ரகங்களில் சிலவற்றை விசைத் தறிக்கு மாற்றியது அரசு. இதனால் கைத்தறித் தொழில் நலிவடைந்தது.

கைத்தறியின் பெயரால் சில வெளிநாடுகளுக்கு விசைத் தறித் துணிகள் அனுப்பப்பட்டதாலும் வெளிநாட்டு ஆர்டர்கள் குறைந்தன. மேற்கூறிய காரணங்களைச் சரி செய்வது பற்றி ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் சிந்திக்காமல் தங்களுக்குள் சண்டை போட்டுக் கொண்டு நெசவாளர்களை மேலும் துயரத்திற்கு ஆளாக்குகின்றனர்.

தி.மு.க., அ.தி.மு.க. என, இரண்டு கட்சிகளுமே தொடர்ந்து தமிழ்நாட்டை மாறி, மாறி ஆட்சி செய்து வருகின்றனர். நெசவாளர்களின் இந்தத் துயர நிலைமைகளுக்கு இரு கட்சிகளும் ஆட்சியின் போது கடைப்பிடித்து வந்த அணுகுமுறைகளே காரணம். இதற்காக இவர்கள் தங்களுக்குள் வருத்தப்படவில்லையென்றாலும் பிரச்சனையைத் திசை திருப்பும் காரியங்களைச் செய்யாமலிருந்தாலே போதுமானது. ■

# NAVEEN CERAMIC

தரமான
☛ Wall Tiles, ☛ Floor Tiles
மற்றும் குளியலறை உபகரணங்களை
*Spain, Italy, Thailand, Malaysia, India, Indonesia* போன்ற நாடுகளில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்து விநியோகிப்பவர்கள்



**Naveen Ceramic** No.307, George R.De Silva Mawatta, Kotahena, Colombo-13. Sri Lanka. Tel : 345197-8

**எமது புதிய காட்சியறை**
184-A, Havelock Road, Colombo-05.
Tel :01-507334

500ற்கும் மேற்பட்ட அழகிய, பல வர்ண, வடிவங்கள் உங்கள் தெரிவுக்காக எம்மிடம் உண்டு.

---

## விதுஜா ஏசியன் சொப்

**VIDUJA ASIAN SHOP**

WAAG HAUS PASSGE-8
3011 BERN (1 STOCK)
SWISS.
T.P.:- 031-3113510, 031-9928267, 079-2158405

இலங்கை இந்திய உணவுப் பொருட்கள் சிறுவர், சிறுமிகள், பெரியவர்களுக்கான வண்ண வண்ண ஆடைகள், தொலைபேசி அட்டைகள், பழைய புதிய விடியோ பிரதிகள் வாடகை சகல விதமான புகைப் படங்கள் எடுக்கவும் இன்றே நாடுங்கள்.
விதுஜா ஏசியன் சொப்

---

## யார் இந்த தேவதை?

என்று உங்களை வியக்க வேண்டுமா? தமிழ் பேசும் மங்கையருக்கு ஒரு அரிய வாய்ப்பு உங்களை அழகு படுத்துவதற்கான அனைத்துச் சிகிச்சைகளையும் எம்மிடம் பெற்றுக் கொள்வதுடன் அழகுக் கலை கற்கை நெறியையும் (நேரடி/ தபால்) தையற்கலை யோகாசனப் பயிற்சி நெறிகளையும் எம்மிடம் பயின்று பயனடையலாம்.

**Special Offer**
only For August 1st to 30th
**25%**



Facial, Bleaching, EyeBrow Shaping, Waxshing, Threading, Henna Treatment, Manicure, Pedicure, Hair Sraighting, Hair Perning, Hair Coloring, Hair fiting, Dandruff Treatment, Oil Massage, Condition Massage, Ect.
Acadamy of Beauty Culture & Center for Beauty Care.

**BEAUTY WORLD**
No. 90 St. Benedict's Mw. Kotahena, Colombo-13.
Tel: 345697, *E-mail: beauty world @ email.com*

---

# விளம்பரப் பகுதி



**Wedding PHOTOGRAPHER**
27/23A, Madampitiya Road, Colombo - 15.
Hotline: 077 321345, Tele: 527933
Your Satisfaction Is My Success
Stills Vinoth

---

## மலையாள மாந்திரீகம்



பாரம்பரை பாரம்பரையாக 39 வருடகால தன்னிகரற்ற சேவையாற்றும் மலையாள மாந்திரீக தெய்வீக சக்தியால் எண்ணியது எண்ணியவாறு மின்சார வேகம் போல நடைபெறுவது திண்ணம். அதற்கெடுத்துக்காட்டாக, மக்களின் வெற்றியின் பலனாக எமக்களித்த சான்றிதழ்களை நேரில் கண்டறிய வாருங்கள்!



**சுவிஸ் அன்பரின் "கணவன்/மனைவி பிணக்கு தீரல் மடல்"**
"மனித தெய்வமாகிய ஐயாவுக்கு, ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையாலும் தங்களது ஆசீர்வாதத்தாலும் சின்னாபின்னமான எமது குடும்பத்தை 7000 KM க்கு அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்."

**சுவிஸ் அன்பரின் மடல் "ஸ்ரீ துர்க்கையம்மனின் சக்தியால் பேசும் மழலை"**
"மனித தெய்வமே! உங்கள் தெய்வீக சக்தியால் பேசாத எம் 3 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்த வெள்ளத்தில் முழ்கவைத்த உங்களுக்கு எமது கோடானு கோடி நன்றிகள்."

**ஜெர்மன் அன்பரின் மடல், "மகளின் திக்குவாய் குணமாகியது"**
"அன்புத் தெய்வமாகிய ஐயாவுக்கு, பிறவியிலிருந்து திக்குவாயாக இருந்த எனது 9 வயது மகளை திக்குவாயிலிருந்து குணமாக்கிய உங்களுக்கு ஆனந்தக் கண்ணீரால் நன்றி கூறுகிறோம்!"

**லண்டன் அன்பரின் மடல், "எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்"**
"பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை, மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்!"

**கொழும்பு அன்பரின் மடல், "39 வயதில் அதிசயத் திருமணம்"**
"பெருமதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, எமது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம், உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடானுகோடி நன்றிகள்!"

**குருணாகல் அன்பரின் மடல், "நெடுநாளாக தடைப்பட்ட திருமணம் 16 நாளில் வெற்றி"**
"தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா, எனது சகோதரிக்கு திருமணம் தடைப்பட்ட வண்ணம் இருந்ததால், உங்களிடம் பரிகார நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமண நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டோம்."

**பிரான்ஸ் அன்பரின் மடல், "குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி"**
"அன்புக்கும் மதிப்பிற்குமுரிய ஐயா, வெளிநாடு செல்லமுடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தை கைகூட வைத்து என்னைப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்."

**ஹட்டன் அன்பரின் மடல், "தீராத் தலைவலி தீர்ந்துவிட்டது"**
"மதிப்பிற்குரிய ஐயாவுக்கு, நெடுநாளாக எனக்கிருந்த தீராத் தலைவலியைக் குணமாக்கி என்னை பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்."

**இத்தாலி அன்பரின் மடல், "சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி"**
"வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் பிரிய நேர்ந்த நாம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால் தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்."

**பதுளை அன்பரின் மடல், "போதை அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டவர்"**
"அன்புக்குரிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதைப்பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்துக்கு புது ஒளியேற்றினீர்கள். நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்"

**கனடா அன்பரின் மடல், "ஜாதகத்தில் கூறியது பலிதம்"**
"மரியாதைக்குரிய ஐயா, உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறியாதிருந்த எனக்கு, இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் எனக்கூறியது பலித்தது கண்டு ஆச் சரியமும் சந்தோசமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள் சேவை தொடரட்டும்."

**நீர்கொழும்பு அன்பரின் மடல், "புத்தி பேதலித்திருந்தவர் என்ன கூறுகிறார்"**
"மாட்சிமை பொருந்திய ஐயா, சூனியத்தின் பிடியில் சிக்குண்டு புத்திபேதலித்து பலரது ஏளனத்துக்கும் அவமரியாதைக்கும் உள்ளான என்னை பரிபூரண குணமாக்கி மீண்டும் மனிதனாக இயல்பாக வாழச் செய்தமைக்கு கண்ணீரால் என்றும் நன்றி கூறுகிறேன் ஐயா!"

**யாழ்ப்பாண அன்பரின் மடல், "அதிசய அக்னி குண்டல பூஜை"**
"மதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதந்தோறும் விசேஷமாக நடைபெறும் அக்னிகுண்டல பூஜையின் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகிறோம் ஐயா,"

**கொழும்பு அன்பரின் மடல், "அச்சொட்டான கைரேகை பலன்"**
"மதிப்பிற்குரிய சாமிகங்காதரனுக்கு, எனது கைரேகையின் பலனைக் கொண்டு தெளிவான முறையில் கடந்த கால, நிகழ் கால, எதிர் கால பலன்களை கூறி என்னை ஆச்சரியப்பட வைத்ததுக்கு நன்றி. உங்களது சேவை தொடரட்டும்."

**டென்மார்க் அன்பரின் மடல், "அதிசயிக்கத்தக்க முடி வளர்ச்சி"**
"அன்புள்ளம் கொண்ட ஐயா! தலையில் முடியுதிர்வதைத் தடுத்து நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழிகாட்டியமைக்கு என்றென்றும் தங்களுக்கும் துர்க்கையம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்."

**இனியென்ன உங்கள் குறை?, திருமணம் நடக்கவில்லையென்ற அங்கலாய்ப்பா?**
**வெளிநாட்டு பிரயாணத்தடையா?, காதலில் தோல்விகண்டு விட்டீர்களா?**
**இன்னும் சகலவற்றுக்கும் உள்நாட்டவர்களும் வெளிநாட்டவர்களும் தொடர்பு கொள்ளலாம்.**

**குறிப்பு : இங்கு தீமையான வேலைக்கு இடமில்லை.**

39 வருட மாந்திரீக துறையில் நிலையான சேவை புரியும் உலக மாந்திரீக சக்கரவர்த்தி கௌரவ பேராசிரியர் கருணாகர பூசணம் சொல்லின் செல்வன் டாக்டர் பீ.கே. சாமி (J.D.G.A.N)JP

**உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி**
Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika Uchchada Peedam.

**கொழும்பில்**
No.162, Kotahena Street, Mayfield Road, Colombo 13, Sri Lanka.

**நுவரெலியாவில்**
33, Daily Fair Complex, Kandy Road, Nuwara-Eliya. 052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 342463
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-342463, 431137,47065- Fax: 344831
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.

---

## DIPLOMA IN MASS MEDIA

**தபால் மூலம் ஊடக டிப்ளோமா பயிற்சி நெறி**

வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை மற்றும் வெகுஜன ஊடகங்கள் பற்றிய கற்கையும் — காலம் 6 மாதம்

**இறுதியில் கலையக பயிற்சியும்- பரீட்சை முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**
**M.M.I.C மாணவர்கட்கு சலுகைகள் உண்டு**

**நீங்களும் ஒலிபரப்பாளராகுங்கள்**
இலங்கை வெகுஜன ஊடக நிறுவனம் (Regd: W/A-38058)

**ஒலிபரப்பாளர் பயிற்சி நெறி** — காலம் 3 மாதம்

- அறிவிப்பு
- தயாரிப்பு
- தொடர்பாடல்
- நிகழ்ச்சி அமைப்பு
- செய்திவாசிப்பு
- செய்திஅறிக்கை தயாரிப்பு
- நேர்காணல்
- நேர்முக வர்ணனை
- மேடை நிகழ்ச்சி தொகுப்பு

உலகளாவிய ரீதியில் புகழ் பெற்ற அனுபவமிக்க ஒலிபரப்பாளர்கள் மூலம் உங்களுக்கு கற்றுத்தரப்படும்.
சுயவிலாசமிடப்பட்டு ரூ 4. 50 சத முத்திரை ஒட்டிய தபாலுறையை அனுப்பவும்
**Tel: 074 512830 Mobil: 077 - 316 258**

**M.M.I.C**
Mass Media Institute of Ceylon
2nd Floor, "Colombo Plaza", 50, Galle Road, Colombo - 06.

---

## உங்களுக்காக!

தமிழ், சிங்கள, ஆங்கில பத்திரிகைகள் வானொலி தொலைக்காட்சிகளில் பிறந்தநாள் வாழ்த்து, மரணஅறிவித்தல் சகலவிதமான விளம்பரங்களை பிரசுரிக்கவும், சிதைவுற்ற படங்களை புதுப்பிக்கவும், இந்தியாவில் இருந்து இறக்குமதியான புத்தம்புது டிசைன்களைக் கொண்ட Visiting கார்டுகளை பெற்றுக்கொள்ளவும் அனைத்து விதமான பிறிண்டிங் தேவைகளுக்கும் இப்போது வெள்ளவத்தையில் உங்கள் உற்ற நண்பன் Tel: 074 512830 Mobil: 077 - 316 258

**S.K. Ads & Prints**
2/11,"Colombo Plaza" 50, Galle Road, Wellawatta

---

## Town Recruitment ManPower

***வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிலையம்***
வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பெற விரும்பும் முஸ்லிம், முஸ்லிம் அல்லாத பெண்களுக்கு வேலை வாய்ப்பு!

**சகல வசதிகளும் இலவசம்**

மத்திய கிழக்கில் மூன்று இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்புப் பெற்றுத்தரும் அரசின் திட்டத்தில் நாமும் இணைவோம். முஸ்லிம் முஸ்லிம் அல்லாத பணிப்பெண்களுக்கு விசேட சந்தர்ப்பம் பாஸ்போட் வசதி, அரசாங்கக் கொடுப்பனவு, மருத்துவச் செலவு, பிரயாண டிக்கெட் அனைத்தும் இலவசம்.

**சவுதி அரேபியா**
- வீட்டுப் பணிப்பெண்கள் (முஸ்லிம், முஸ்லிம் அல்லாத) சம்பளம் 450 SR
- வீட்டுச் சாரதி ( முஸ்லிம், முஸ்லிம் அல்லாத) சம்பளம் 600SR
- வீட்டுப் பணியாள் ( ஜோடி/ ஆண், பெண்) சம்பளம் 1050SR

(தற்போது சவூதியில் இலங்கைத் தூதரகம் அமைக்கப்பட்டுள்ளதால், பயணம் நேரடியாக ஒரு வாரத்தில் பயணம் வெளிநாடு செல்வதற்கு முன் நீங்கள் தொழில் புரியப்போகும் இடம், விலாசம், உட்பட சகல தகவல்களையும் முன் கூட்டியே இலங்கையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**குவைட்**
- வீட்டுப் பணிப்பெண்கள் (முஸ்லிம்/முஸ்லிம் அல்லாத). சம்பளம் K.D 40
- சாரதிகள் சம்பளம் K.D 60
(மத்திய கிழக்கு சாரதி அனுமதிப் பத்திரம் உள்ளவர்)
(பயணம் 21 நாட்களில்)

**ஐக்கிய அரபு இமிரேட்ஸ், டுபாய்**
- வீட்டுப் பணிப் பெண்கள் (முஸ்லிம், முஸ்லிம் அல்லாத)
(பயணம் 21 நாட்களில்) சம்பளம் Diram 450

**ஜோர்தான்**
- வீட்டுப் பணிப்பெண்கள் (முஸ்லிம் முஸ்லிம் அல்லாத) சம்பளம் US 125

**பஹ்ரேய்ன்**
- வீட்டுப் பணிப் பெண்கள் (வயது 18-40 வரை) சம்பளம் B.D. 45

**டோஹா கட்டார்**
- வீட்டுப் பணிப்பெண்கள் (வயது 30-40) சம்பளம் Q.R 450

டுபாய், சாஜா, பஹ்ரேய்ன் போன்ற பல நாடுகளில் பிரதான ஆடைத் தொழிற்சாலைகளில் கீழ்வரும் வேலை வாய்ப்புகள்
- சாஜாவில் தொழில் புரிவதற்கு ஜீகி மெஷின் இயக்குபவர்கள் (பெண்கள்)
- அயன் செய்பவர்கள்.
- உதவியாளர்கள்(பெண்கள்) பயணம் 28 நாட்களில், நேர்முகப் பரீட்சை நாள்தோறும் காரியாலயத்தில் நடைபெறும்.

பாஸ்போட், பாஸ்போட் அளவு 3 புகைப்படம், போஸ்ட் காட் அளவு 2 புகைப்படத்துடன் கீழ்க் காணும் முகவரிக்கு வாருங்கள்.
தொடர்புகளுக்கு:- அனுமதி இல:-AL/1819/02/2002

**38 - 2/1 Symonds Road, Maradana, Colombo-10.**
Tel- 074-720545 Fax- 074-721046

---

## வெள்ளவத்தை

(கொழும்பு தெற்கு)

***Eric Rajapakse*** Opticians

நீங்கள் அடுத்த முறை மூக்குக்கண்ணாடி அல்லது கண்டாக்ட் லென்ஸ் வாங்கும்போது மூக்குக்கண்ணாடி தயாரிப்பில் விற்பன்னர்களும் கண்டாக்ட் லென்ஸ் தயாரிப்பில் கைதேர்ந்தவர்களுமான எம்மை நாடுங்கள்.

இல.539, காலி வீதி, வெள்ளவத்தை.
(ரொக்ஸி பெற்றோல் நிலையத்திற்கு எதிரில்)
தொலைபேசி: 01-362971,553871

பிரதி வியாழக்கிழமைகளில் முன் அனுமதியுடன் கண் வைத்திய நிபுணர்களைச் சந்திக்கலாம்

---

## Roopam *Textile*

புதிதாய் இறக்குமதி செய்யப்பட்ட திருமணப் புடவைகள், சல்வார்கமீஸ், பிளவுஸ் துணிகள், பெண்களுக்கான தைத்த ஆடைகள், ஆண்களுக்கான தைத்த ஆடைகள் மற்றும் சிறுவர் ஆடைகளுக்கு,

**Roopam *Textile***
507, காலி வீதி, வெள்ளவத்தை.
Tel : 074-513172
நேரில் பார்வையிட்டு நம்பிக்கை கொள்ளுங்கள்.

---

## உதவி தேவை



கொழும்பு-13, கொட்டாஞ்சேனை இலக்கம் 27/4, 14வது ஒழுங்கையில் வசிக்கும் எம். ஆர். எம். சஹீல் என்பவர் கடுமையான இருதய நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறார். அவருக்கு வைத்தியர்களினால் சிபாரிசு செய்யப்பட்டிருக்கும் அவரது சத்திரச்சிகிச்சையை மேற்கொள்வதற்காகச் சுமார் 3 இலட்சம் ரூபா தேவைப்படுகிறது. போதிய வருமானமின்றித் தவிக்கும் இந்நபர் தனது மருத்துவ சிகிச்சைக்காத் தனவந் தர்களிதும், பரோபகாரிகளினதும் பேருதவியை நாடி நிற்கின்றார். இவருக்கு உதவி விரும்புவோர், தேசிய சேமிப்பு வங்கியின் தலைமையகத்தில் உள்ள இவரது கணக்கிற்குப் பணம் அனுப்ப முடியும்.
கணக்கு இலக்கம்: (N.S.B.) 1-0001-05-07091

---

## காண்டம்

உங்கள் வாழ்க்கையை சந்தோஷமாக்குங்கள். காண்டம் என்னும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலாபலனை தெளிவாக அறிந்து எல்லாப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு வழிகண்டு கடவுள் அருளால் நன்மை பெறுங்கள். நேரில் வரவும். வெளி நாட்டில் உள்ளவர்களும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S.Mani**
142-2/4, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
சந்தைக்கு எதிர்ப்பக்கமாக Tel: 074-519754

---



## அஸ்மா நோய்க்கு வைத்தியம்

அஸ்மா, வீசிங், தொய்வு, இழுப்பு, இளைப்பு, மாய்ச்சல், மூச்சுத்தட்டல், மூச்சடைப்பு, நெஞ்சுச்சளி, மண்டைச்சளி, கக்கல், இருமல், தடிமன், மூக்கால் நீர் வடிதல், மூக்கடைப்பு, நாசி அரிப்பு, மூக்கரிப்பு, தும்மல், மூக்கினுள் சவ்வு வளர்தல், கண்கடி, கண்ணரிப்பு, தலைவலி, பீனிசம் போன்ற குணங்களுக்கு நிரந்தர சுகம் பெற அஸ்மா சிகிச்சை நிபுணர் டொக்டர் சுராஜ் சோமசுந்தரம் அவர்களை இல. 25 சில்வெஸ்டர் வீதி, கல்கிசை (மவுண்ட்லெவினியா)(கொழும்பு) எனும் இடத்தில் பழைய நோயாளர்களும், முன் அனுமதி பெற்ற புதிய நோயாளர்களும் தினமும் மாலையில் 4.00மணி முதல் 7.00மணி வரையும், செவ்வாய், வியாழன், சனி கிழமை நாட்களில் காலையில் 9.00மணி முதல் 12.00மணி வரையும் சந்தித்து சிகிச்சை பெறலாம். புதிதாக வரும் நோயாளர்கள் மேற்கூறிய நாட்களிலும் நேரங்களிலும் தொலைபேசி இலக்கம் 074-201582 மூலம் தொடர்பு கொண்டு உங்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும் நாளையும், நேரத்தையும் முன் அனுமதி பெற்றே (பதிவு செய்து) வரவேண்டும்.

# அலசுவது-இராஜதந்திரி

# இருதலைக் கொள்ளி எறும்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

இலங்கை அரசியல் எத்திசையில் சென்று கொண்டிருக்கின்றதென்பதே தற்போது முக்கிய கேள்வியாக இருக்கின்றது.

கடந்த எட்டு மாதகால பாராளுமன்ற ஆட்சியை ஸ்திரப்படுத்த முடியாத நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய முன்னணி விளங்குகின்றது.

மறுபுறத்தே ஜனாதிபதி சந்திரிகாவின் பொதுஜன ஐக்கிய முன்னணி நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கும் வல்லமையுடன் நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டதாக, பிரதமர் ரணில் தரப்புக்குப் 'பயங்காட்டி' வருவதாக இருக்கின்றது.

இவ்விரு பிரதான கட்சிகள் தவிர வடக்கு-கிழக்கில் புலிகள் அமைப்ப, தனது கோரிக்கைகள், நிலைப்பாடுகளை முதன்மைப்படுத்திச் சமரச நடவடிக்கைகள் குறித்த விடயங்களை அணுகி வருகின்றது.

இந் நிலையில் ஒரு புறம் ஜனாதிபதி சந்திரிகாவின் நிறைவேற்று அதிகாரத்தின் அழுத்தங்களையும், மறுபுறம் புலிகளது நிலைப்பாடுகளையும் சமாளிக்க வேண்டிய இருதலைக் கொள்ளி எறும்பின் நிலையிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இருப்பதை அவதானிக்க முடிகின்றது.



இலங்கையைப் பொறுத்தவரை பெயரளவில் மட்டுமே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய முன்னணி பாராளுமன்றத்தில் ஆளுங்கட்சியாக இருக்கின்றது.

ஆனால் உண்மை நிலைவரம் என்னவெனில், பொதுஜன ஐக்கிய முன்னணி நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியைக் கொண்டிருப்பதன் மூலம் அதுவும் ஓர் ஆளுங்கட்சியாகவே இருக்கின்றது.

வடக்கு-கிழக்கில் புலிகளும் தமது நிர்வாக நடவடிக்கைகளைப் படிப்படியாக விஸ்தரித்து, அரசியல் ரீதியான ஆளுமையை ஏற்படுத்தி வருகின்றனர்.

இந் நிலையில் மூன்று விதமான பரிபாலனத்துக்குட்பட்ட நிலையில் முழு நாடும் இருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

மறைந்த ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவினால் 1978 ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட அரசியலமைப்பின் பிரகாரம் உருவானதே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையாகும்.

பாராளுமன்ற ஆட்சியைப் புறந்தள்ளி மிகப் பலம் பொருந்திய நிலையைக் கொண்டதாகவே 1978 ம் ஆண்டில் அறிமுகமான நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை நிலவுகின்றது.

இந்த ஆட்சி முறையை அறிமுகப்படுத்திய காலஞ்சென்ற ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன கூட, தமக்குள்ள நிறைவேற்று அதிகாரம் பற்றி ஒரு தடவை "ஓர் ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் மாற்றத் தம்மால் முடியாதே தவிர ஏனைய அனைத்தையும் தம்மால் சாதிக்க முடியும்" எனக் குறிப்பிட்டிருந்தார்.

எனவே ஜனாதிபதி சந்திரிகாவிடமுள்ள அதிகாரங்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பாராளுமன்ற ஆட்சிக்கு அழுத்தங்களையும், அச்சுறுத்தல்களையும் கொடுக்கக் கூடியவையாக இருக்கின்றதென்பதையே அவதானிக்க முடிகின்றது.

1978 ம் ஆண்டு அமுலுக்கு வந்த நிறைவேற்று அதிகார ஆட்சி 1994 ம் ஆண்டுவரை ஐக்கிய தேசியக் கட்சியிடமே இருந்தது. இந்த ஆட்சி முறை வடக்கு-கிழக்கில் தமிழ் மக்களுக்குச் சிம்ம சொப்பனமாக இருந்த அதேசமயம், தென்னிலங்கையில் எதிர்க்கட்சிகள் அனைத்தையுமே அடக்கி வைப்பதாகவும் இருந்தது.

இதன் காரணமாகவே ஜனாதிபதி சந்திரிகா நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவிக்கு முதல் தடவையாகப் போட்டியிட்டபோது, அப் பதவியை இல்லாமல் செய்வதே தமது முக்கிய பணியாக இருக்குமெனக் குறிப்பிட்டிருந்தார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியைப் போல நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை மிகக் கடுமையாகவே விமர்சித்த கட்சி வேறெதுவும் இல்லை எனக்குறிப்பிடலாம்.

ஆனால், தற்போது ஒரு தடவை அல்ல இரு தடவைகள் நிறைவேற்று அதிகார ஆட்சியைத் தனதாக்கியதுடன், அந்த ஆட்சியின் பலாபலன்களை முற்று முழுதாக அனுபவித்து வருபவராகவே ஜனாதிபதி சந்திரிகா இருக்கின்றார். கூடவே ஐக்கிய தேசியக் கட்சியினால் உருவாக்கப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி மூலமாக அக் கட்சிக்கே அழுத்தங்களைக் கொடுக்கும் விதத்திலும் ஜனாதிபதி சந்திரிகா செயற்பட்டு வருகின்றார்.

இந் நிலையில் பாரளுமன்ற ஆட்சியை ஒரு கட்சியும், ஜனாதிபதி ஆட்சியை மற்றொரு கட்சியும் கொண்டிருக்கும் தற்போதைய அரசியல் சூழலில், கடந்த சுமார் 25 வருடகாலமாக இருந்து வருகின்ற அரசியலமைப்பு அர்த்தமற்றதாகவும், குழப்பகரமான நிலைமையை ஏற்படுத்துவதாகவுமே இருக்கின்றது.

கடந்த வாரங்களில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு மீளவும் ஒரு பொதுத்தேர்தல் விரைவில் நடத்தப்படலாம் என்ற எதிர்பார்ப்பு வலுப்பெற்றிருந்தது.

கடந்த டிசம்பர் மாதம் இடம்பெற்ற பொதுத் தேர்தலையடுத்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி பாராளுமன்ற ஆட்சியைக் கைப்பற்றியது. தற்போது எட்டு மாதங்களைக் கடந்த நிலையில் இனப்பிரச்சினைத் தீர்வு குறித்த சமாச்சாரமே முக்கியமானதாக இருக்கின்றது.

கடந்த காலங்களில் ஜனாதிபதி ஆட்சியும், பாராளுமன்ற ஆட்சியும் தனியொரு கட்சியிடமே இருந்தது. இதன் காரணமாக வடக்கு-கிழக்குப் பிரச்சினையைத் தமது மனம்போன போக்கிலேயே ஆட்சியதிகாரங்களுக்கு வந்த அரசியல் கட்சிகள் அணுகியிருந்தன.

ஆனால் தற்போது ஒரு வித்தியாசமான அரசியல் சூழலே நாட்டில் நிலவுகின்றது. ஜனாதிபதி ஆட்சி ஒரு கட்சியிடமும், பாராளுமன்ற ஆட்சி மற்றொரு கட்சியிடமும் இருக்கின்றன. இந் நிலையில் ஜனாதிபதி ஆட்சி அதிகாரத்தை கொண்டுள்ள பொதுஜன ஐக்கிய முன்னணியும், பாராளுமன்ற ஆட்சியிலிருக்கும் ஐக்கிய தேசிய முன்னணியும், தமது பலப்பரீட்சைக்குரிய விடயமாக வடக்கு-கிழக்குப் பிரச்சினையைக் கையாளுவதையே அவதானிக்க முடிகின்றது.

இவ்விடயத்தில் இந்த இரு பிரதான கட்சிகளுடன் ஏனைய அரசியல் கட்சிகளும் அணி சேர்ந்தவையாகவிருக்கின்றன.

இதன் காரணமாக தென்னிலங்கையில் ஓர் உறுதியான அரசாங்கம் காணப்படுகின்றதா? என்ற கேள்வி ஒருபுறமிருக்க, தென்னிலங்கையின் தற்போதைய களேபர நிலையில் இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகள் உரிய பயனைத் தருமா? என்பதே மற்றொரு கேள்வியாக இருக்கின்றது.

இதேவேளை புலிகளைப் பொறுத்தவரை அரசியல் ரீதியாக ஒரு பலம் மிக்க நிலையைக் கொண்டிருக்கக் கூடிய வாய்ப்புக்கள் அவர்களிடத்தே அதிகமாக இருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

கடந்த காலங்களில் தென்னிலங்கையின் அரசியல் நிலைவரம் புலிகளுக்குப் பாதகமானதாகவே இருந்தது. ஆனால் தற்போது முற்று முழுதாகப் புலிகளின் அரசியல் நிலைப்பாடுகளைப் பலப்படுத்தக் கூடிய ஒரு சூழலையே தென்னிலங்கையில் உள்ள அரசியல் சூழ்நிலை உருவாக்கி விட்டுள்ளதாக இருக்கின்றது.

இன்றைய அரசியல் நெருக்கடியில் ஜனாதிபதி சந்திரிகாவும், பிரதமர் ரணிலும் இனப்பிரச்சனைத் தீர்வு, புலிகளுடனான பேச்சுவார்த்தை என்பவை பற்றி நிறையவே தெரிவிக்கலாம்.

ஆனால் இரு தரப்புமே புலிகளுடனான அரசியல் உறவு குறித்த விடயத்தில் மிகவும் மனந்திறந்த நிலையில் நடந்து கொள்ளாதிருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

கடந்த பெப்ரவரி மாதம் பிரதமர் ரணிலுக்கும், புலிகள் தலைவர் பிரபாகரனுக்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானது முதல் ரணில் அரசு தனது அரசியல் நகர்வுகளை மிக அவதானமாகவே மேற்கொண்டு வருகின்றது.

புலிகள் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கலாமென்ற அச்சம் ஒரு புறமிருக்க, அவர்களது கோரிக்கைகளுக்குத் தாராளமாகவே விட்டுக்கொடுப்பதன் மூலம், தென்னிலங்கையில் எதிர்ப்பலைகளைச் சந்திக்க நேரிடும் என்ற பீதியும் ரணில் தரப்பிடம் காணப்படுகின்றது.


அதேசமயம் ஜனாதிபதி சந்திரிகா புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவேண்டும் என அடிக்கடி கூறி வருகிறார்.

ஆனால் தற்போது புலிகளுடன் சமரச முயற்சிகளில் குதித்துள்ள பிரதமர் ரணிலின் அரசாங்கம் எத்தகைய கோணத்தில், எவ்விதமாகப் புலிகளை அணுகுகின்றது என்பதிலே ஜனாதிபதி சந்திரிகாவும், அவரைச் சார்ந்தோரும் மிக விழிப்பாகவே இருக்கின்றனர்.

புலிகள் மீதான தடையை அகற்றுதல், மற்றும் வடக்கு-கிழக்கிலுள்ள பொது இடங்களிலிருந்து படையினரை விலக்குதல், புலிகள் கோரிவரும் இடைக்கால நிர்வாகம் போன்ற விடயங்களைத் தமக்குரிய முக்கிய துருப்புச் சீட்டுக்களாகவே பொதுஜன ஐக்கிய முன்னணியும், அதனோடு அணி சேர்ந்துள்ள ஏனைய அரசியல் கட்சிகளும் கொண்டுள்ளன.

இந் நிலையில் தம்மை ஒரு 'கனவான்' அரசியல்வாதியாகக் காண்பிக்க முயலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தற்போதைய அரசியல் சூழலில் இருதலைக் கொள்ளி எறும்பாக மாறியிருப்பதையே அவதானிக்க முடிகின்றது. ●

## அதிரடி அய்யாத்துரை



பனைச் சபை யாழில வீடுதி நடத்திறது நல்ல விஷயம்தான். ஆனால் அதில அட்டகாசம் புரியிறது அமைச்சற்ர தம்பியா இருக்கிறதுதான் கெட்ட விஷயம் கண்டியளோ. கிட்டடியில நடந்த வர்த்தக கண்காட்சிக்கு முழு வீடுதியையும் சாப்பாட்டோட சேத்து 5 நாளுக்கு புக்பண்ணிக் கொண்டு போன பிறிமா நிறுவனத்தார் நல்லா மாட்டுப் பட்டிருக்கினம். அமைச்சற்ர தம்பியார் தன்ர ஆக்களைக் கொணந்து இருத்தி இவையின்ர சாப்பாட்டை பரிமாறி மகிழ்ந்தாராம். பிறிமாக்காரர் பட்டினி! போதாக் குறைக்கு கண்காட்சி சாமான்களும் களவுபோக, ஒருமாதிரி எடுத்தவரைக் கண்டு பிடிச்சுக் கேட்டால், தம்பியார் குறுக்கால பூந்து அவை புலிகளின்ர ஆக்கள், இது களப் பேசாமல் விட்டிடவேணுமெண்டு மிரட்டலாம். கேட்பார் உளரோ! எல்லாம் மகேசன் கையில!

தாய்லாந்துப் பேச்சுவார்த்தையில ஜனாதிபதி இனப்பிரச்சினை தீர்வின்ர அடிப்படை விஷயங்களைப் (கோர் இஷு) பத்திப் பேச வேணுமெண்டிறா. ரணில் புரிந் துணர்வு ஒப்பந்தத்தின்ர மீதி விஷயங்கள அங்கபோய்ப் பேசலாமெண்டிறார். புலிகள் என்ன நினைக்கினமெண்டு யோசிக்காமல் மனம்போன போக்கில பேசினம். தாய்லாந்தில, கோர் இஷு பற்றியோ, புரிந்துணர்வு ஒப்பந்தம் பற்றியோ எந்தக் கதையும் பேசிறதில்லை. புரிந்துணர்வு ஒப்பந்த விஷயமெல்லாத்தயும் பேசப் போக முந்தியே முடிச்சுப் போட வேணும். அங்கபோய் இடைக்கால நிர்வாகம் பற்றித்தான் பேச்சு. அதைத் தருகினமா இல்லையா எண்டதுக்கு முடிவு கண்டிட்டுத்தான் மற்றதெல்லாம் எண்டு இப்ப புலிகள் வன்னியில சொல்லியிருக்கினம். இதுக்கு மேல தாங்களும் குழம்பி சனத்தையும் குழப்பிறத விட்டிட்டு ஆகிற காரியத்தப் பாக்கிறது நல்லதெல்லோ?

பொலிஸ் திணைக்களத்துக்குள்ள மேலிடத்து அடிபுடி முத்திப்போய் டீவி வழியவெல்லாம் வழிஞ்சோடுது. பொலிஸ் திணைக்களத்த மக்கள் நம்ப ஏலாத அளவு ஊழலும், அதிகார துஷ்பிரயோகமும் மலிஞ்சுபோயிருக்கொண்டும், தேர்தலில வன்முறை, மோசடி மோசமா நடந்த இடங்களில கடமையச் செய்யாத பொலிஸாருக்கு பொலிஸ் பொறுப்பதிகாரிகளே தட்டிக்குடுக்கினமெண்டும் சரமாரியான குற்றச்சாட்டு காதைத் துளைக்குது. அமைச்சரை வேற இந்த அடிபுடிக்குள்ள இழுத்து விட்டாச்சு. இப்ப பொலிஸ் திணைக்களத்தை ஒழுங்காக்கிற நடவடிக்கைகளவிட பொலிஸ் குழறுபடிகள வெளியில சொல்லுறதுக்கு எதிரான நடவடிக்கைகளப் பற்றித்தான் அரசாங்கமும் யோசிக்குது. எதில முடியப் போகுதோ? கொஞ்ச ஊமைகளப் பிடிச்சு பொலிஸ் அதிகாரிகளாக்கிவிட்டால் பெட்டர்!

லேட்டா வந்தாலும் லேட்டஸ்ட்டா வருவேனெண்டு இப்ப அடிக்கடி ஒரு ரஜனிப்பாணி வசனத்தை தனியார் வானொலிகளில கேக்கக்க எங்கட ஜனாதிபதியின்ர முகத்தை ஞாபப்படுத்திவிடுது. லேட்டஸ்ட் லேட்டொண்டச் சொல்லுறன். அஸ்கிரிய பீடத் தலைவர்களச் சந்திக்கிறதா அப்பொயின்ட்மென்ட் குடுத்த ஜனாதிபதி லேட்டாப் போனதால அதை ரத்துச்செய்ய நேர்ந்திட்டுதாம். நேரத்தைச் செம்மையாக்க வேணுமெண்டு இலங்கையின்ர நேரத்தையே மாத்தினவ தான்மட்டும் நேரத்துக்கு காரியம் செய்ய இன்னும் பழகிக்கொள்ளவே இல்லை. நேரம் யாருக்காகவும் காத்திருக்காது. ஜனாதிபதிக்காகவும்தான்!

எங்கட ஸ்போட்ஸ்ஸுக்கு என்ன நடந்தது? ஆசிய விளையாட்டுப் போட்டியில இலங்கையின்ர பெயர் எட்டப் போய் எட்டாமிடத்துக்கும் பின்னால போய்க்கொண்டிருக்குது. கலியாணவீட்டுப் பாயாசத்துக்குள்ள கசுக்கொட்டை அம்பிடிறமாதிரி எப்பவோ ஒருக்கால் இலங்கை வீரற்ர பெயர் எனவுன்ஸ்மன்டில கேக்குது. கிரிக்கட்டப்போல ஸ்போட்ஸுக்கயும் அரசியல் புகுந்து விளையாடிப்போட்டுதோவெண்டு யோசிக்க வேண்டிக் கிடக்குது.

மட்டக்களப்புப் பத்திரிகையொண்டு பத்தி எரிஞ்சிருக்கு. தானே தனக்குத் தீமூட்டித் தற்கொலை செய்யிற வீரக்தி நிலை இன்னும் பத்திரிகைக்கு வரயில்லையெண்டு நம்பிறன். அதுசரி, எங்கட சக பத்திரிகைகள் ஒண்டும் இதுபற்றி கண்டிக்க வேண்டாம், ஒரு அனுதாபந்தன்னும் சொல்ல வேண்டாமோ? என்ன நடந்தது, ஏது நடந்தது, ஏன் நடந்ததெண்டுகூட ஒரு துண்டுச் செய்திகூட வராமல் போன மர்மம் என்னவோ? எள்ளைக் கண்டாலும் எடுத்து வைச்சுக் கட்டுரையாய் எழுதித் தள்ளி விருதுகள் வாங்கின எங்கட கிழக்குமாகாணக் கட்டுரைக்காரருக்கு, அதே பத்திரிகையில எழுதிக் குவிச்சவைக்கு அந்தப் பத்திரிகைக்கு என்ன நேர்ந்ததெண்டு ஒரு வரிகூட எழுத ஏலாதபடி கை சுழுக்கிப்போட்டுதாமோ? பத்திரிகை அலுவலகத்துக்கு அடிக்கடி ஏறி இறங்கிற அரசியல் வாதிகள் இப்ப அந்தப் பக்கமே காணோமாம். ஒரு சின்னக் கவிதைதான் ஞாபகம் வருது.

*அடுத்தவனுக்கு அது நேர்ந்த போது நான் ஏனென்றும் கேட்கவில்லை.*
*எனக்கு நடந்தபோது ஏனென்று கேட்க எவரும் இருக்கவில்லை!* ■

# ஆயிரம் பேர் பார்த்திருக்க உடன் கட்டை ஏறி உயிர்விட்ட 60 வயதுப் பெண்ணின் கதை!

**நூ**ற்றாண்டு காலத்திற்கு முன்பு இருந்தது என சிறுபிள்ளைகளுக்குக் கதை சொல்லி வந்த உடன் கட்டை ஏறும் சமாச்சாரம் இந்த 21 ம் நூற்றாண்டிலும் நடக்கிறது என்றதும் சற்று அதிர்ச்சியாகத்தான் இருக்கிறது.



அண்மையில் இந்தியாவில் 60 வயதுப் பெண் ஒருவர் தனது கணவரின் சிதையில் பாய்ந்து உயிர்விட்டதன் மூலம் உடன்கட்டைச் சம்பிரதாயத்திற்கு மீண்டும் உயிர் கொடுத்திருக்கிறார்.

சர்வதேச செய்தி நிறுவனங்களின் அறிக்கைகளின்படி அந்தச் சம்பவம் குறித்து அறியவரும் விஷயம் இதுதான். இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலத்தின் மன்னா மாவட்டத்தில் உள்ள பின்தங்கிய கிராமம் அது. அங்கு வாழ்ந்த குத்துபாய் என்ற பெண்ணின் கணவர் மரணமாகிவிட்டார். அவரது இறுதிக் கிரியையின்போது குத்துபாய் தீயில் குதித்து உடன்கட்டை ஏறப்போவதாகக் காலையிலேயே ஊர் முழுக்கச் செய்தி பரவி விட்டது. இந்தத் தகவல் பொலிஸ் நிலையத்திற்கும் எட்டிவிட்டது. நடக்கப் போகும் அனர்த்தத்தைத் தடுக்க இரண்டு பொலிஸார் மயானத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

அவர்கள் அங்கு செல்லும் போது குத்துபாய் உடன்கட்டை ஏறுவதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. மயானத்தில் சுமார் 1000 பேர் வரையில் ஊர் மக்கள் திரண்டிருந்தார்கள். குத்துபாய் உடன்கட்டை ஏறத் தயார் நிலையில் இருந்தார். அவரைத் தடுக்க முயன்ற பொலிஸார் ஊர் மக்களால் தாக்கப்பட்டுள்ளனர். அதனால் நடப்பதை வேடிக்கை பார்ப்பதைத் தவிர பொலிஸாரினால் வேறொன்றும் செய்ய முடியாமல் போனது. சில நிமிடங்களில் குத்துபாய் தனது கணவர் எரியூட்டப்பட்ட சிதைக்குள் குதித்தார். பெரிதாக ஆரவாரம் எதுவும் இன்றி அவரது உயிர் அடங்கிப் போனது. ஒரு 60 வயதுப் பெண் உயிருடன் எரிவதைச் சுற்றி நின்றவர்கள் பக்திப் பரவசத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

சிறிது நேரத்தின் பின்னர் குத்துபாயைத் தமது தெய்வ மாதாவாக வழிபடத் தயாரான போது இந்த உடன்கட்டை ஏறும் கொடுமையை முன்னின்று நடத்திய பலர் அங்கு வந்த விசேட பொலிஸ் குழுவினால் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களுள் குத்துபாயின் இரண்டு மகன்மாரும் அடங்குவார்கள் என்பதுதான் கொடுமையிலும் கொடுமை. இவர்கள் அனைவர் மீதும் கொலைக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. குத்துபாய் முற்றிலும் சுய விருப்பத்தின் பேரில் உடன்கட்டை ஏறினாரா? அல்லது அவரை அவ்வாறு செய்வதற்கு ஊர் மக்கள் தூண்டினார்களா? என்பது குறித்துப் பொலிஸாருக்குள் குழப்பம் நிலவுகிறது. எவ்வாறிருந்தாலும் மிகவும் பிற்போக்குத்தனமான இந்தச் சம்பவம் இந்தியாவில் பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

1987 ம் ஆண்டு ராஜஸ்தானில் ரூப் கன்வார் என்ற 18 வயதுப் பெண் ஒருவர் தனது கணவர் இறந்த போது கணவரின் தந்தை மற்றும் கணவரின் குடும்பத்தினரது வற்புறுத்தலின் பேரில் உடன்கட்டை ஏறினார். இவரது மரணத்தின் பின்னர் அவரை உடன்கட்டை ஏறத் தூண்டியவர்கள் கைது செய்யப்பட்டுக் கொலைக் குற்றம் சாட்டப்பட்டது. ஆனால் 1996 ம் ஆண்டு இவர்கள் விடுதலையானார்கள். எனினும் இத்தகையவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று இந்திய ஊடகங்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றன.

சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் இந்தியாவை ஆண்ட ராஜ் புத்ர மன்னர் பரம்பரையின் காலத்திலேயே இந்த உடன்கட்டை ஏறும் வழக்கம் இருந்ததாகக் கூறப்படுகின்றது. தமது கணவன்மார் போரில் கொல்லப்பட்டால், எதிரிப் படைகளிடம் சிக்காமல் கெளரவமாக உயிர்விடும் நோக்கிலும், அரச இரகசியங்களைக் காக்கவும் ராஜ்புத்திர மன்னர்களின் மனைவிமார் சிலர் உடன்கட்டை ஏறி மரணித்ததாகக் கூறப்படுகின்றது.

ஆனால் பிற்பட்ட காலத்தில் அதிதீவிர இந்து அடிப்படை வாதிகள் இதனை ஒரு சடங்காக நடைமுறைப் படுத்த முயற்சித்தனர். 1829ம் ஆண்டு பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இந்தியாவை ஆண்ட போது உடன் கட்டை ஏறுவதைத் தடை செய்ததுடன் அவ்வாறான முயற்சிகளில் ஈடுபடுபவர்கள் மீது கடுமையான தண்டனைகளை வழங்கும் சட்டங்களையும் செய்தனர். ஆனால் பின்தங்கிய கிராமங்களில் அந்த சகல சட்டங்களையும் மீறி இந்தக் கொடுமை இன்னும் நடந்து வருவதையே குத்துபாயின் சம்பவம் காட்டுகிறது என்கிறார்கள் ஆய்வாளர்கள். ■

# நெட்டிலிருந்து

## ஒசாமா பின் லேடன் குதிரையில் தப்பிச் சென்றார்

### அவருக்கு 'வழிகாட்டியவர்' தகவல்



**ஒ**சாமா பின் லேடன் எங்கே இருக்கிறார் என்ற மர்மம் இன்னும் துலங்கவில்லை. ஆனால் அவர் அமெரிக்கத் தாக்குதலில் அகப்பட்டு உயிரிழக்கவில்லை என்பதை மட்டும் பலரும் உறுதியாக நம்புகின்றனர்.


பின் லேடன் கடந்த குளிர்காலத்தின்போது ஆப்கனிலிருந்து 28 தளபதிகளுடன் குதிரை மூலம் தப்பிச் சென்றார் என்று தலிபான் முன்னாள் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். தற்போது அவர் வழிகாட்டியாகச் செயற்பட்டு வருகிறார்.

"ஆப்கனில் கடந்த குளிர்காலத்தில் பனி படர்ந்திருந்த தோரா போரா மலைப் பகுதியிலிருந்து பின் லேடன் குதிரையில் ஏறி அமெரிக்க ராணுவத்தின் பார்வையில் தென்படாமல் ஷாகி கோட் மலைக் குகைக்குத் தப்பிச் சென்றார். நம்பிக்கைக்குரிய அவருடைய தளபதிகள் 28 பேர் உடன் சென்றனர். நான் அவர்களுக்கு வழி காட்டியாகச் செயற்பட்டேன். கடும் பனிப்பொழிவுக்கு இடையில் இரவு நேரத்தில் மட்டுமே இப் பயணம் நடைபெற்றது.

நாங்கள் அடிக்கடி குதிரைகளில் இருந்து இறங்கிக் களைப்பாறிச் சென்றோம். ஆனால் குதிரைப் பயணத்தில் நிபுணரான பின் லேடன் ஒரிரு முறை மட்டுமே குதிரையிலிருந்து இறங்கி ஒய்வெடுத்தார்."

இவ்வாறு இந்தப் பேட்டியில் தலிபான் முன்னாள் அதிகாரி தெரிவித்துள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் ஷாகி கோட் பகுதியில் பின்லேடனைப் பார்த்ததாகத் தலிபான் வீரர் அலி முகமது என்பவரும் தகவல் தெரிவித்துள்ளார். இந்த விபரத்தை யு.எஸ்.ஸின் 'நியூஸ்வீக்' பத்திரிகை வெளியிட்டுள்ளது. ■



பட உதவி: நெட் பிரியன்

'நெட்டிலிருந்து' பகுதிக்கான தகவல்களை முரசின் ஈ-மெயில் முகவரி மூலமாக அனுப்பி வைக்கலாம்.
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net

# பார்த்த ஞாபகம் இல்லையோ...? 12



டி. எஸ். பாலையா மற்றும் எம். என்.நம்பியார் ஆகியோரைப் போல் வில்லன் நடிகராகத் திரையில் தோன்றி இரசிகர்களின் 'வெறுப்பை'ச் சம்பாதித்தவர் பி.எஸ். வீரப்பா. அவருடைய ஆணவமும், அட்டகாசம் நிறைந்த சிரிப்பு அடிவயிற்றில் புளியைக் கரைக்கும். ஆனால், சொந்த வாழ்க்கையில் மிகவும் உத்தமராக வாழ்ந்தவர்.

வீரப்பா, ஐம்பதாம் ஆண்டுகளின் பிற்கூறில் திரைப்படத்தயாரிப்பில் இறங்கினார். அவர் தயாரித்த வெற்றிப் படைப்புக்களில் ஒன்றான 'வீரக்கனல்' படத்தில் கதாநாயகியாக அஞ்சலிதேவி இப்படித் தோன்றுகின்றார். ■



அமெரிக்காவில் காலத்திற்குக் காலம் வழங்கப்படும் அதியுயர் 'ஒஸ்கார்' விருது பெறுவதற்காக இந்தியாவிலிருந்து 1969 ம் ஆண்டு அனுப்பப்பட்ட முதலாவதும் ஒரே படமுமான 'தெய்வமகன்' படத்தில் வரும் முக்கியமான கட்டம் இது.

சிவாஜி கணேசன் இப் படத்தில் இரு வேடங்களில் தோன்றுகிறார். தந்தையும் மகனுமாக வரும் சிவாஜிக்குக் கன்னத்தில் பருமனான மச்சம் ஒன்றிருக்கிறது. தந்தையைப் போலவே தனயனுக்கும் இந்த மச்சம் இருப்பதால் தந்தை மகனின் முகத்தில் விழிக்கவே மறுக்கிறார். இதனால் மகனாகத் தோன்றும் சிவாஜி படும் வேதனைகளை வெளிப்படுத்திப் பார்ப்போரின் நெஞ்சை உருக்கி எடுக்கிறார்.

மகனுடைய காதலியாக இன்று தமிழ் நாட்டின் முதல்வர் ஜெயலலிதா தோன்றுகிறார். இப்படத்தை ஏ.சி.திருலோகச்சந்தர் இயக்கினார். ●



ஜெமினி அதிபர் எஸ்.எஸ். வாசன் 'சம்சாரம்' என்ற பெயரில் ஒரு படத்தைத் தயாரித்தார். இதில் கதாநாயகனாக ஒரு புதுமுகத்தை அறிமுகப்படுத்தினார். மூக்கும் முழியும் என்பார்களே, அதற்கு ஏற்றாற்போல் திரைப்படத்திற்கேற்ற அத்தனை அம்சங்களையும் கொண்ட ஸ்ரீராம் என்பவரே அந்தக் கதாநாயகன்.

'வாழ வைத்தவள்', 'மர்ம வீரன்' போன்ற சில படங்களில் தோன்றிய ஸ்ரீராமுக்குப் படத்தயாரிப்பாளராக வேண்டும் என்ற ஆசை வந்துவிட்டது. இறுதியில் ஆழமறியாமல் காலை விட்ட கதையாக முடிந்தது. எடுத்த எடுப்பிலேயே சிவாஜி, சரோஜாதேவி போன்ற அப்போதைய படங்களில் 'பிஸி'யாக இருந்தவர்களை வைத்து ராஜா-ராணி கதையொன்றைப் படமாக்கத் திட்டமிட்டார். இதனால், ஸ்ரீராமின் கனவு கனவாகவே முடிந்தது.

தோல்வியில் முடிந்த அவருடைய முயற்சியைக் கைவிடாமல், எம்.ஜி.ஆர். அவர்களைப் போட்டுப் படமெடுக்கத் திட்டமிட்டார். அதுவும் பலனளிக்கவில்லை. திரையுலகைவிட்டே ஒதுங்கிக்கொண்டார்.

1956,57களில் கொழும்பு நகரில் நடைபெற்ற ஒரு விழாவில் மேடையில் தோன்றுவதற்காக ஸ்ரீராமும், சந்திரபாபுவும், முதல்வர் ஜெயலலிதாவின் தாயார் சந்தியாவும் வந்திருந்தனர். மேடையின் பின்புறம் ஸ்ரீராமும், சந்திரபாபுவும் தமாஷாக இருந்தபோது எடுக்கப்பட்ட படம் இது.

# அடுத்த இலக்கு



ஈராக் மீது மீண்டும் போர் தொடுக்க அமெரிக்கா தயாராகிவருகிறது. சதாம் ஹுசைனைப் பதவிலிருந்து விலக்குவதற்குத் தன்னாலான சகல முயற்சிகளையும் எடுத்த அமெரிக்கா, இறுதியாக பாக்தாத் தலைநகரைத் தாக்கி ஈராக்கின் அரச நிர்வாகத்தைச் சீர்குலைத்துச் சதாம் ஹுசைனைப் பதவி கவிழ்க்கும் முடிவோடு இருக்கிறது. வழமைபோல் அமெரிக்காவின் எந்தத் தாக்குதலையும் எதிர்த்துப் போராடப்போவதாக சதாம் சபதமிட்டுள்ளார்.

சமீபத்தில் நிகழ்ந்த சதாமின் பிறந்தநினக் கொண்டாட்டங்களுக்காகத் தயார் செய்யப்பட்ட ஈராக்கின் பஸாரா நகரின் நுழைவாயிலின் தோற்றம் கொண்ட அன்பளிப்பொன்றைச் சதாம் ஹுசைன் பார்வையிடுகின்றார். தனது பிறந்தநாளன்று நாட்டு மக்களுக்கு உரையாற்றிய சதாம், அமெரிக்காவைக் கடுமையாகச் சாடினார்.



# தலையுடைப்பு



லண்டன் கில்டால் கலைக்கூடத்தில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் மார்க்கிரட் தட்சரின் உருவச் சிலையின் தலையை ஆத்திரமடைந்த பார்வையாளர் ஒருவர் இரும்புக் கம்பியால் அடித்து உடைத்துவிட்டார். இதன் பின் சில காலம் அவ்விடத்திலிருந்து அகற்றப்பட்ட அச் சிலை தற்போது திருத்தியமைக்கப்பட்டு மீண்டும் அதேயிடத்தில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. சரிசெய்யப்பட்ட தனது உருவச் சிலையை மார்க்கிரட் தட்சர் பார்வையிடுகிறார்.

பிரிட்டிஷ் சட்டதிட்டத்தின்படி ஒரு முக்கியஸ்தர் இறந்து 5 வருடங்கள் கடந்த பின்னரே அவரது சிலையை, ஏனைய பிரபலங்களின் சிலைகளுடன் நிறுத்திப் பார்வைக்காக வைக்க முடியும்.


தகவல் பெட்டி

# ஏமாற்றம்

இந்தப் பாலஸ்தீன மணப்பெண்ணின் முகத்திலும், அவரது உறவினர்கள் முகத்திலும் மகிழ்ச்சியைக் காணவே முடியவில்லை.

16 வயதான ஜாலா அபூ அஜாமியாவின் திரு மணநாளன்று அவரது குடியிருப்புப் பகுதிக்குள் திடீரெனப் புகுந்த இஸ்ரேலியப் படைகள் ஒவ்வொரு வீடாக புல்டோசர் கொண்டு அழித்ததில் அஜாமியாவின் மணமேடையும் சிதைந்துபோனது. இதற்கு முன்னர் மூன்று தடவைகள் இந்தப் பெண்ணின் திரு மணம் திடீர் திடீரென்று நின்றுபோனது.

திரு மணத்திற்கான வேளை நெருங்கும் போதெல்லாம் இஸ்ரேல் இராணுவம் ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்ததனால் மூன்று முறையும் அஜாமியாவின் திரு மணத்தில் தடையேற்பட்டது. நான்காவது தடவையாகவும் மணப்பெண்ணாக அலங்கரித்து ஏமாற்றமடைந்த இவர், "நான் மரணிக்க வேண்டும்..." என்று அழுது புலம்பினார். இந்தப் பெண்ணின் குடியிருப்புப் பகுதியில் ஊடரங்கு உத்தரவைப் பிறப்பித்துவிட்டு இஸ்ரேலியப் படைகள் காவலில் ஈடுபடுவதையும், கவலை தோய்ந்த முகத்துடன் மணப்பெண்ணைப் பாதுகாப்பான இடத்திற்கு உறவினர்கள் அழைத்துச் செல்வதையுமே படத்தில் காண்கிறீர்கள்.



# சிம்ரன் அதிகம் பொய் சொல்வாராம்

சிம்ரனுக்கு இதுவரை கால்ஷீட் சொதப்பல் நடிகை என்ற பெயர்தான் இருந்து வந்தது. இப்போது பொய் சொல்லும் நடிகை என்ற பெயரும் வந்து சேர்ந்திருக்கிறது. 'பஞ்சதந்திரம்' படத்தில் நடித்ததற்கு இதுவரை சம்பளம் வாங்கவில்லை. ஆனால், "எப்படி வாங்குவது என்பது எனக்குத் தெரியும்" என்று சமீபத்தில் திருவாய் மலர்ந்தருளினார். கொதித்துப் போன படத் தயாரிப்பாளர், "நடிகையின் சம்பளம் போக, குடும்ப உறுப்பினர்களுக்குச் செலவழித்த தொகையே கால் கோடியைத் தாண்டிவிட்டது. இந்தக் கணக்கை எப்படி வசூல் செய்வது என்று எனக்கும் தெரியும்" என்று எதிர் சவால் விட்டிருக்கிறார். இந்த விஷயம் குறித்து நடிகையின் பிரியத்துக்குரிய நாயகன் வாயே திறக்க மறுப்பது ஏனோ?

## ரம்பாவின் ஆசை

ரம்பா, பார்க்கும் டைரக்டர்களிடம் எல்லாம் தன் ஆசையை வெளிப்படுத்தத் தவறுவதில்லை! என்னவாம்? சென்னை பேட்டை ரௌடியாக நடித்துக் கலக்க வேண்டும் என்பதே இவரின் விபரீத ஆசை.

லுங்கி மடித்துக் கட்டும் போஸில் தொடையழகியை நினைத்தாலே மயக்கம் வரவில்லை?

## ஹீரோயின்களிடையே லடாய்

'விசில்' படத்தில் இரண்டு நாயகிகளாக 'துள்ளுவதோ இளமை' ஹீரோயின் ஷெரீனும், காயத்ரி ரகுராமும் நடித்து வருகிறார்கள். ஷூட்டிங் ஸ்பாட்டில் இரண்டு நடிகைகளுக்கும் இடையே உரசல் அதிகமாகி வருகிறதாம். இருவரும் டைரக்டரிடம் தனக்கே அதிக சீன்கள் வைக்க வேண்டும் என்று செல்லமாகச் சிணுங்குகிறார்களாம். ஒரு பெண் சிணுங்கினாலே டைரக்டர் தாங்கமாட்டார். இரண்டு பேர் என்றால்...?





ஸ்ரீகாந்த்-சினேகா

# அரசியலா? ஆன்மீகமா?
# ரஜனியின் எதிர்காலத் திட்டம் என்ன?

'பாபா'வும் ரஜனியின் அடுத்த கட்டம் என்ன என்ற கேள்விக்குத் தெளிவான பதிலைத் தரவில்லை. அவர் ஆன்மீகவாதியாவாரா? அரசியல்வாதியாவாரா? இன்னும் விடை தெரியாத கேள்வியிது.

ரஜனிகாந்த் 3 ஆண்டுகளுக்குப் பிறகு நடித்து 'பாபா' வெளியாவதால் அவரது ரசிகர்கள் மிகவும் உணர்ச்சிப் பிழம்பாகக் காணப்படுகின்றனர். அடுத்து ரஜனி அரசியலுக்கு வருவது உறுதி என்று உற்சாகமாகக் கூறி வருகின்றனர்.

ஆனாலும் அரசியலை விட ஆன்மீகத்தில்தான் ரஜனிக்கு ஆர்வம் அதிகம் என்று கூறப்படுகிறது. எனவே, அவர் அரசியலில் புகுந்து புயலைக் கிளப்புவாரா? அல்லது ஆன்மீகத்தில் நுழைவாரா? என்பது அவரைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. இவ்வளவு ஏன்? அவரே கூட இவ் விஷயத்தில் இன்னும் முடிவெடுக்கத் திணறுகிறார் என்பதுதான் நிதர்சன உண்மை.

தெலுங்கு ஆடியோ கேசட் விழாவில் பேசிய சூப்பர் ஸ்டார், என்.டி.ஆர், எம்.ஜி.ஆர், அமிதாப், சிரஞ்சீவி எல்லாம் 'மாஸ் லீடர்கள்' என்று குறிப்பிட்டார். அரசியலில் பெரும் சக்தியாகத் திகழ்ந்த முதல் இருவரும் திரையுலகில் இருந்து வந்து முதல்வர் ஆனவர்கள். அவர்கள் பெயரை ரஜனி குறிப்பிட்டது தன்னையும் சூசகமாக அறிவிப்பதற்குத்தான் என்றும் கூறப்படுகிறது.

தற்போது 'பாபா'வின் பஞ்ச் வசனமே "லேட்டா வந்தாலும் லேட்டஸ்டா வருவேன்" என்பதுதான். இது அரசியலைக் குறிவைத்தே எழுதப்பட்டதாகக் கருதப்படுகிறது. இந்நிலையில் 'பாபா' ரஜனியின் கடைசிப் படம் என்றும் அதன்பிறகு அரசியல்தான் என்றும் சில தெலுங்குப் பத்திரிகைகளில் செய்தி வெளிவந்துள்ளது.

சிங்கப்பூர், மலேசியா கலைநிகழ்ச்சிகளில் கூட அரசியலுக்கு வரும் வாய்ப்புள்ளதாக ரஜனி மறைமுகமாகத் தெரிவித்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

"இன்றைய சூழ்நிலையில் நடிகனாக இருப்பதை விட ஆன்மீகத்தில் இருப்பது கடினம்தான். எனினும் 'சேலஞ்ச்' எனக்குப் பிடிக்கும். ஆகவே, ஆன்மீகத்தில்தான் எனக்கு நாட்டம்" என்று ஒரு நேயரின் கேள்விக்குப் பதில் அளித்த ரஜனிகாந்த், மற்றொரு கேள்விக்கு, "கடவுள் என்னை அமைதி நோக்கிப் போகச் சொல்கிறார். அது அரசியலாகக் கூட இருக்கலாம். எல்லாம் கடவுள் சித்தம்தான்" என்றும் குறிப்பிடத் தவறவில்லை.

இதனிடையே, ரஜனி ஆன்மீகத்தில் ஈடுபடுவார் என்று ஒரு புறம் தகவல்கள் கூறுகின்றன. ராகவேந்திரரின் பக்தரான ரஜனிகாந்த் அவரது 100வது படமான 'ஸ்ரீ ராகவேந்திரா'வில் நடித்த பிறகு துறவு வாழ்க்கையில் ஈடுபட்டு இமயமலைக்குக் கிளம்புவதாக 15 வருடங்களுக்கு முன்பு கூறினார். அப்போது நடிகர் கமலஹாசன் உள்ளிட்ட நெருங்கிய நண்பர்கள் தலையிட்டு அவரது முடிவை மாற்றிவிட்டனர்.

இச் சூழ்நிலையில் 'பாபா' படத்தில் வரும் பாடல் ஒன்று அரசியலில் சர்ச்சையைக் கிளப்பியது. 'ராஜ்ஜியமா இமயமா' எனத்

## 'ஜோ' வழியில்

நடிகை த்ரிஷா சம்பள விஷயத்தில் ஜோ நடிகையின் கொள்கையைப் பின்பற்றுகிறாராம். சமீபத்தில் ஒரு கம்பெனியில் நடிக்க ஒப்புக் கொண்ட போது கேட்ட சம்பளம் தயாரிப்பாளரையே கிறுகிறுக்க வைத்து விட்டதாம். இத்தனைக்கும் நடிப்பு விஷயத்தில் எல்.கே.ஜி. நிலையில்தான் இருக்கிறார் நடிகை.

# மினி சினி

★ 'ரமணா' படத்திற்கு அடுத்தபடியாக ஜீ.வி.பிலிம்ஸுக்கு கால்ஷீட் கொடுத்துள்ளார் விஜயகாந்த். இந்தப் படத்தை பி.வாசு இயக்கப் போகிறாராம். படத்துல எத்தனை ஃபைட்டுன்னு முடிவு பண்ணிட்டீங்களா?

★ 'தீனா' படத்தில் மீசை இல்லாமல் நடித்த அஜீத், இப்போது மீண்டும் மீசையை மழித்திருக்கிறார். 'வில்லன்' படத்துக்காகத்தான் இந்தக் கெட்டப்.

★ 'ரன்' படம் இம் மாதம் வெளியாக இருந்தது. ஏகப்பட்ட படங்கள் ரிலீஸாவதினால் 'ரன்'னை வெளியிடும் எண்ணத்தை மாற்றிக் கொண்டார் ஏ.எம். ரத்னம்! எப்பதான் ரிலீஸ்? ஆகஸ்ட் கடைசி வாரம் என்று கேள்வி!

★ மாதவன் நடிக்கும் அடுத்த படத்திற்கு 'கன்னச் சிரிப்பழகா' என்று டைட்டில் வைத்துள்ளார்கள்.

★ ஆளவந்தானில் கமலுடன் சேர்ந்து நடித்த டி.வி. நடிகர் ரியாஸ்கான் 'வித்தகன்' என்ற படத்தில் முழு நீள ஹீரோவாக நடிக்கிறார்.

★ கமல் ஸ்டைலில் வித்தியாசமான பாணியில் ஒரு படம் எடுக்க நாசர் திட்டமிட்டு வருகிறாராம். இதற்காக மேக்கப் டெஸ்ட் எல்லாம் கூட பார்த்தாகி விட்டதாம்.

★ பானுப்பிரியா கர்ப்பமாக இருக்கிறார். இப்போது இருப்பது கணவருடன் அமெரிக்காவில் கலிபோர்னியாவில். 6 மாத கர்ப்பமாம்.



ரஜினி (படம்: பாபா)

## கிரண் கொடுத்த 'அடி'

'ஜெமினி' பட நாயகி மும்பைவாசிதான் என்றாலும் சென்னை அவருக்குப் புதுசு அல்ல. ஆரம்ப காலத்தில் பட வாய்ப்புக் கேட்டுப் பல கம்பெனிகளில் அவர் ஏறி இறங்கியிருக்கிறார். தன் போட்டோ ஆல்பங்களைக் கொடுத்து விட்டுக் காத்திருந்திருக்கிறார். அப்போது அவரை சாமர்த்தியமாகப் பயன்படுத்திக் கொண்டவர் வில்லத்தை நடிகர். அப்புறம் அவரைக் கண்டுகொள்ளவேயில்லையாம். இப்போது மீண்டும் அந்த மும்பை நடிகையை நாடிப் போயிருக்கிறார். அவரை "நீங்க யாரு? உங்களை நான் பார்த்ததேயில்லையே?" என்று சூப்பராக அவமானப்படுத்தித் திருப்பியனுப்பி விட்டாராம்.

## கண்டிஷன் போடும் ரதி

'கும்மாளம்' ரதி நடித்த ஒரு படம்தான் (எங்கே எனது கவிதை) வெளியாகியிருக்கிறது. அதற்குள் கதாநாயகன்களுக்குக் கண்டிஷன் போடும் அளவுக்குத் தேறிவிட்டார். 'சொல்ல மறந்த கதை'யில் நடித்துக் கொண்டிருந்த ரதிக்கு கதைப்படி ஒரு குளியல் சீன் வைத்திருந்தார்கள். பாத்ரூமில் ரதி குளித்துக் கொண்டிருக்கும் போது கணவனாக நடிக்கும் சேரன் முகத்துக்கு மட்டும் சோப்புப் போடுவது போல் ஹீரோயின் நினைத்துப் பார்க்கும் காட்சி. இந்தக் காட்சியில் சேரனுடன் நடிக்க மாட்டேன் என்று முரண்டு பிடித்திருக்கிறார். "நீங்க என்னை படு கவர்ச்சியாகக் காட்டி என் கேரக்டருக்கே களங்கம் கற்பிச்சிடுவீங்க. நான் அவர் கூட நடிக்க மாட்டேன்" என்று மறுத்து விட்டாராம்.

டென்ஷனான இயக்குநர், "கிராமருக்கும் ஆபாசத்துக்கும் வித்தியாசம் தெரியாத நடிகைகளையெல்லாம் படத்துல சேர்த்தது நான் செஞ்ச தப்புய்யா!" என்று புலம்புகிறாராம்.



சிலம்பரசன்-சார்மி

# சினி விசிட்

## விவேக்கிற்கு அட்வைஸ்

"ரொம்ப ஓவராக யாரையும் கிண்டல் செய்து காமடி பண்ணாதீர்கள்" என்று விவேக்கிடம் முக்கியஸ்தர் ஒருவர் சமீபத்தில் அறிவுரை செய்தாராம். அதனால் தனது 'சமூகத் திட்டு களை'க் குறைத்துக் கொள்ள விவேக் முடிவு செய்துள்ளாராம்.

## ...டை' ...யர்த்தும் ...தம்தாஜ்

...ரு காலத்தில் மும் ... அதிக சம்பளம் கேட்ட ... அவருக்குப் போட்டி ... தம்தாஜ் என்ற புதுமுகம் ...ர்ச்சிக் களத்தில் இறக்கி ...பட்டார். ஆனால் இவ ... இப்போது சம்பள விஷ ...த்தில் தன்கையில் இருக் ... விரல்களையெல்லாம் ...டபடி நீட்டுகிறாராம். ...வுப் பாடகன்', 'பௌஸ்' ...ிய இரண்டு படங்களி ... எவ்வளவு கவர்ச்சி ...ட முடியுமோ அவ் ...வையும் காட்டி ஆட் ... போட்டுள்ளார் ...ர்ச்சி காட்டினால் ...லம் தள்ள முடியும் ...னால், அது எவ்வ ... நாளைக்கு நீடிக் ... அம்மணி!



ராஜஸ்ரீ

## சொந்தக் குரலில் பேசிய தேவயானி

தேவயானி, 2 ஆண்டுகளுக்கு 'குவா குவா' சமாசாரத்தை ஒத்தி வைத்திருக்கிறாராம். அவரது மாமியார் இன்னும் இட்லிக் கடை வைத்துத்தான் வாழ்க்கையை நடத்தி வருகிறாராம். 'குருவம்மா' படத்தில் சொந்தக் குரலில் பேசியிருக்கிறார் தேவயானி.

ரொம்பக் கஷ்டப்பட்டு மெட்ராஸ் பாஷை பேசினாராம்.

## மீரா ஜாஸ்மினின் காதல் மயக்கம்

கேரளத்து ஜோதிகா எனப்படும் மீரா ஜாஸ்மின், மலையாள இயக்குநர் ஒருவரின் காதல் வலையில் சிக்கி அதிலிருந்து மீள முடியாமல் தவிக்கிறாராம். தமிழில் 'ரன்', 'பாலா' ஷூட்டிங்கில் நடித்துக் கொண்டிருக்கும் அவரை, அடிக்கடி அவர் நேசத்துக்குரியவரின் செல்போன் டிஸ்டர்ப் பண்ணுகிறதாம். போனைக் காதில் வைத்தால் நேரம் போவதே தெரியாமல் பேச்சு நீண்டு கொண்டே போகிறது. நடிகை நடிக்க வேண்டிய காட்சிக்காகக் காத்துக் கிடக்கும் டைரக்டர், "நடிப்புத் திறமையோடு வருகிறார்களோ இல்லையோ, காதலோடு கோலிவுட்டுக்கு வந்துடுறாங்கய்யா" என்று புலம்பித் தள்ளுகிறார்.



ரஜினி (படம்: பாபா)

## ராதா 'அந்த மாதிரி' நடிகையா....?

'கேம்', 'சுந்தரா டிராவல்ஸ்' ஆகிய படங்களில் நடித்து வரும் ஹீரோயின் ராதா பலான படங்களில் நடித்தவர் என்று இவரைப் பற்றி கோலிவுட்டில் செய்தி வெளியானதைத் தொடர்ந்து ரொம்ப அப்செட் ஆகிவிட்டாராம். 'பலான' படங்களில் நடிக்கவே இல்லை என்று சத்தியம் செய்து கண்ணீர் சிந்துகிறார் நடிகை. "படப்பிடிப்பில் நான் உண்டு என் வேலை உண்டு என்று இருப்பேன். இது பிடிக்காத சிலர் வேண்டுமென்றே என்னைப் பற்றி வதந்தி பரப்பிவிட்டார்கள். அமைதியாக இருந்தால் 'தலைக்கனம் பிடித்தவள்' என்கிறார்கள். கொஞ்சம் ஃப்ரீயாகப் பழகினால் உஷார் பார்ட்டி என்கிறார்கள். நான் என்னதான் பண்றது" என்று நெருங்கிய தோழிகளிடம் உருகுகிறாராம்.

## அர்ஜுன் ...ஜாலாவுக்காக ...டச்சக் கட்ட ...சிபார்சு

ஏழுமலையில் ...வோடு ஜோடி ...ர்ந்த கஜாலா ...கு ஹெல்ப் ...ன் மற்றும் ...மண்ட் லைனாக ...ந்து வருகி ... அர்ஜுன் பல ...டங்களுக்குச் ...ரிசு செய்தும் ...ஜாலாவை யாரும் ...டுகொள்வதாக ...லை. பொறுமை இழந்த அர்ஜுன் அடுத்து தான் நடிக்கும் 'சர்வாதிகாரி' படத்தில் ஜோடியாக்கிக் கொண்டு விட்டார். தற்கொலை விவகாரத்தில் தக்க சமயத்தில் வந்து உதவிய அர்ஜுனுக்கு நன்றிக் கடனாக இருக்கட்டும் என நடிகையும் சம்மதம் தெரிவித்து விட்டாராம். எப்படியோ கஜாலா மேட்டர் உஜாலா போல் வெளுக்காமல் இருந்தால் சரி.

முகப்பில்

விக்ரம் சினேகா

படம்: கிங்

## காதோடு சொல்லுகிறோம்

சீயான் பெயர் கொண்ட வட இந்தியத் தயாரிப்பாளருக்கு அவரது படத்தில் நடிக்கும் மூன்றெழுத்து நடிகையின் மீது லேசாய் ஒரு இது. தன் ஆசையைத் தயங்கித் தயங்கிச் சொல்ல, உடன்பட்ட நடிகை, அவருடன் சிங்கப்பூருக்கு உல்லாசப் பயணம் சென்று திரும்பி இருக்கிறார்.

மன்னர் ஆளும் படத்தின் தயாரிப்பாளர் நொந்து நூலாகி விட்டாராம். காரணம் அரசனான இயக்குநரும், படத்தின் ஹீரோவும் கூட்டணி போட்டு படத்தின் பட்ஜெட்டை எகிற வைத்து விட்டார்களாம். இவர்கள் பெயர் வாங்க என் பணத்தை விரயமாக்குவதா என்று கொதித்துப் போன தயாரிப்பாளர், கவுன்ஸிலின் கதவைத் தட்டியிருக்கிறார்.

மலேசியா மற்றும் சிங்கப்பூர் கலை நிகழ்ச்சியில் பல நடிகைகள் மிக உற்சாகமாகத் திரிந்தார்கள், எல்லாம் உற்சாக பானங்களின் மகிமைதான்.

## சைலண்டாகிவிட்ட ஜோதிகா

ஷூட்டிங் ஸ்பாட்டில் கலகலவென அரட்டையடிக்கும் ஜோதிகா கடந்த சில நாட்களாக கப்சிப் என அமைதியாக இருக்கிறார். யார் என்ன மந்திரம் ஓதினார்களோ தெரியவில்லை, கடுமையான மௌன விரதம் மேற்கொண்டு வருகிறார். மௌன விரதம் இருப்பது நல்லதுதானே என்று நினைக்கிறீர்களா? ஜோ மேற்கொண்டிருப்பது அந்த விரதம் இல்லை. ஸ்பாட்டில் தன்னுடன் இணைந்து நடிப்பவர்கள், சக டெக்னீஷியன்கள், பத்திரிகையாளர்களிடம் சகஜமாகப் பேசுவதை வேண்டுமென்றே தவிர்த்து வருகிறார். திடீரென்று அவர் ஏன் இப்படி மாறினார் என்பதுதான் யாருக்கும் புரியாத சஸ்பென்ஸ்!

...டங்கும் பாடலில் "பகுத்தறிவாளியின் நெஞ்சிலே பூத்ததென்ன ஆத்திகம் திருமகன் வருகிறான் நெற்றியிலே ...றுநீறு பூசி தினம் தினம் அதிசயம் அதிசயம் பெரியார்தான் ஆனதென்ன ராஜாஜி" என்ற வரிகள் பெரியாரை ...ப்படுத்துவதாகக் கூறி திராவிடக் கழகம் வழக்குத் தொடுத்தது. குறிப்பிட்ட வரிகளை நீக்குவதாக ரஜனி அறிவித்தபின் ...கு வாபஸ் பெறப்பட்டது. அத்துடன் இப் பிரச்சனை முடிவுக்கு வந்தது.

'அருணாச்சலம்' படத்தில், ரஜனி தனிக்கட்சி துவக்கி அரசியலில் குதிப்பதாக நடித்தார்.

'பாபா' படத்தின் மூலம் அனைத்து வகையிலும் இதுவரை எந்தத் தமிழ் படமும் எட்டாத தொகையை லோட்டஸ் இன் ...டேஷனல் லாபம் ஈட்டியுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்தப் பணத்தைக் ...ண்டு ரஜனி அரசியலில் இறங்குவார் என்று ஒரு சில பத்திரிகைகள் ...லகளைப் பரப்ப, அரசியல்வாதிகள் கலக்கத்தில் உள்ளனர்.


...திரையுலகிலிருந்து விலகும்போது சரித்திரப் புகழுடன் விலக ரஜனி ...புவதாகவும், 'பாபா' அந்தச் சாதனையைத் தற்போதே எட்டிவிட்டதால், ...அரசியல் களத்தில் தடம் பதிக்க ரஜனி ஆயத்த வேலைகளை ஆரம்பித்து ...டாரா?' என்ற கேள்வி கோடிக்கணக்கான ரசிகர்களிடையே பர...பாகப் பேசப்படுகிறது.

இதனிடையே அவரது இணையத் தளத்தில் கூறப்பட்டுள்ள விபரமும் ஆர்வத்தைக் கிளப்பியுள்ளது.

ஒரு நாள் இரவு ரஜனி வீட்டில் படுத்திருந்தபோது அவரது கண்களில் திடீரென ஒரு பிரகாசமும், அவரது குரலில் ஒரு குழைவும் ஏற்பட்டதுடன் அப்போது ஏதோவொரு இனம்புரியாத தெய்வீக உணர்வு ஏற்பட்டதாம். அச்சூழ்நிலையில் அவருக்குப் புதுப்படம் குறித்து அறிவிப்பு வெளியிடுவதற்கு யோசனை தோன்றியதாம். இதையடுத்து, காளிகாம்பாள் கோயிலுக்குச் சென்று வணங்கிய ரஜனி உடனடியாக பாபா பற்றிய அறிவிப்பை வெளியிட்டார்.

இவ்வாறு அந்த 'ஸ்குடியோ ரஜனி' என்ற இணையத்தில் கூறப்பட்டுள்ளது. 'பாபா' படத்தின் வசனங்களும் பாடல் வரிகளும் அவர் அரசியலுக்கு வருவது போல் ஒரு எதிர்பார்ப்பு இருந்தாலும், கிளைமாக்ஸில் ரஜனி இமயமலை செல்வதாகக் காட்சி அமைக்கப்பட்டுள்ளது. அவரது ஆன்மீக ஈடுபாட்டை உணர்த்துவதாகவும் உள்ளது. எனினும், படத்தின் வெற்றியைப் பொறுத்தும் ரசிகர்களின் வேண்டுகோளுக்கும் இணங்க தொடர்ந்து கலைச்சேவை செய்வாரா? அல்லது அரசியலில் குதிப்பாரா? இல்லை, தனக்கு மிகவும் பிடித்த ஆன்மீகத்தில் நாட்டம் கொள்வாரா?





முரளி-ராதா (படம்: சுந்தரா டிராவல்ஸ்)

## கோவை சரளா வடிவேலு மோதல்

கோவை சரளாவும், வடிவேலுவும் பேசிக் கொள்வதில்லை என்பது பழைய சேதி. கொஞ்ச நாளைக்கு முன் இருவரும் 'கெட்ட' வார்த்தைகளால் திட்டி சண்டை போட்டுக் கொண்டார்கள் என்பது ரொம்ப லேட்டஸ்ட் செய்தி. 'என் மனவானில்' படத்தில் பெண் வேடம் பூண்டதோடு மட்டுமல்லாமல், கூனியாகவும் நடித்துக் கலக்கியுள்ளார் வடிவேலு.

# தேன் கிண்ணம்

## அடிமைகள்

குமர் உள்ளவர்கள் வாங்கலாம்
கொல்லையில் கட்டிப் போடலாம்
விருப்பம் போல் மேய்த்துக் கொள்ளலாம்
பொம்மைகள் போல் விளையாடலாம்
தரங்களைப் பொறுத்து விலைகள்
அமையும்

ஆதனம் முடிவெடுக்கப்பட்டால்
சில சமயம் உங்கள் குமர்களின்
சீலையை துவைத்து காயவிடலாம்
எச்சில் கல்லையை கழுவிவிடலாம்
இன்னும் படுக்கையில் தினம் காலூன்ற
லாம்

வண்டிலில் பூட்டும் மாடுகளைப் போல்
பொதி சுமக்கும் கழுதைகளைப் போல்
எலும்புகள் பொறுக்கும் நாய்களைப்
போல்
உங்கள் பந்திகளை அலங்கரிப்பார்கள்
சுணை கெட்டுப்போன மாங்கொட்டைகள்.

கரும்பு சுவைக்க கூலி கேட்கும்
குலுக்குகள்
காசுவாங்கி கட்டில் சேரும்
விலைவிடலைகள்
காலம் காறி உமிழும் குப்பைகள்
வாழ்வை துவங்கு முன்னே
இருப்பையிழந்த ஊனங்கள்
வாங்கியவர்கள் ஆசையோடு பந்தாடும்
அடிமைகள்

றகுமான் ஏ. ஜமீல், மருதமுனை.

## பொறாமைதான்

உன்னோடு
கோபமாய் நடித்தாலும்
கோபிக்க என்னால்
முடியவில்லையேயடா.

கோபியர் நடுவில்
நாதமிடும் கண்ணன் போல்
உன் குறும்புத்தனத்தை
என் உள்ளம்
ரசிக்கத்தான் செய்கிறதடா.

இருந்தாலும் என்
பிடிவாதமும் அழுத்தமும்
எனை இளக விடவில்லை
நீ இப்படிச் செய்வதா? என்
உள்ளத்தில் உயர்வாய்
இருந்த நீ
ஒரு நிமிடத்தில் இறங்குவதா?

ஏனோ
எனக்கு பயமாகவே இருந்தது.

எனை விட உன்னில்
யாரும் உரிமை கொள்வரோ?
உண்மையைச் சொன்னால்
எனக்குப் பொறாமயும் கூட

ஆனால் - நீ
அன்று அந்த மர நிழலில்
கண்ஜாடையில் விடைபெற்றாயே
உயிரை கொன்றது போலாகிவிட்டதடா
ஏன் தெரியுமா?
என்னைப் போலவே நீயும்
என அறிந்ததால்

ஆம் என்
அருமை நண்பனே
எனைவிட உன்னுடன் யாரும்
நண்பராக உரிமைபாராட்டிடுவர்
என்ற பொறாமைதான்
என் குட்டி நண்பனே!

ஈழவாணி, வேப்பங்குளம்,
வவுனியா.

## புறப்படு நண்பனே

உறங்கியது போதும்
உற்ற நண்பனே
விரைந்து எழு!...!

கலியுகத்தில் எல்லாமே!
காசு மயம்தான்...

நடப்பு
நிதியாண்டில்
உன் பெயரும்
உச்சரிக்கப்பட வேண்டும்.

உன்னில் தூங்கும்
தூக்கத்தை தூர எறி
துடிப்புள்ள இளைஞனுக்கு
முதல் எதிரியே அதுதான்!

சினிமா கனவுக்குள்
உன் ஆன்மாவை
அடைத்து விடாதே!
அது
ரசிப்பதற்கு மட்டுமே...!
புசிப்பதற்கு வராது!

உன் புண்ணிய பூமியில்!
அந்நிய நாகரீகம்
தலைவிரித்தாடுகிறது.
அதை!
ஏறெடுத்தும் பாராதே...!



அமிர்தமாய் இனிக்கும்
போதை பழக்கத்தில்
புகுந்து விடாதே!
அது அத்தனையும் விஷம்
உன்னை...
மென்று தின்று விடும்!

அண்டை நாடுகளில்
அடுக்கி
வைக்கப்பட்டிருக்கும்.
வறுமைக் கோடுகள்
உன் நாட்டின்...
எல்லையில் கூட...
இருக்கக் கூடாது!

இத்தனையும் சாதிக்க
புறப்படு நண்பனே!
உன் வரவால்...
நான் எழுதும்
கவிதை வரிகளாவது...
கண்ணியப்பட்டும்!

ஹப்புத்தளையூர், மனோ
கோபாலன்.

## பேனா நண்பர்கள்

|  |  |  |
|---|---|---|
| பெயர்: எல்.திலகேஸ்வரன் | பெயர்: ஆர்.விநாயகசுந்தரம் | பெயர்: என். இல்ஹாம் |
| வயது: 18 | வயது: 20 | வயது: -- |
| முகவரி: வெளியுள்ள, லுனுவத்த. | முகவரி: நிவ்பி.எம்.டி. இல.-09 பிரதான வீதி, பலாங்கொடை. | முகவரி: 8 ஆம் குறுக்குத் தெரு, சபா மறுவா, கரம்பை, பாலாவி. |
| பொழுது போக்கு: கிரிக்கெட், பேனாநட்பு. | பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி. | பொழுது போக்கு: கிரிக்கெட், |

## பயணம்

எப்போதாரம்பித்தது
என் பயணம் என்பது
இன்னும் எனக்குத் தெரியாது
சிலர் நீ
பிறந்தபோதென்றார்கள்
விஞ்ஞானம், உன்னுருவாக்கத்துக்கான
விந்தின் தேடலின் போதென்றது
விளங்கிக் கொள்ளவோ,
விவாதிக்கவோ எனக்கிப்போது
நேரமில்லை.

பயணம் தொடர்கிறது
பாதைகள் சிரமமானவை
சிராய்ப்புக் காயங்கள் ஏராளம்
முட்டி மோதல்கள் தாராளம்
என்ன செய்ய
கைபிடித்துச் செல்ல யாருமில்லை
குற்றமில்லை
அவரவர்க்கு அவரவர் பாதை
எப்போதாவது
ஆறுதல்படுத்தும் வார்த்தைகள்

இளைப்பாறும் போதெல்லாம்
எனக்குள்ளே வெறுப்பு
ஏற்கனவே நடந்ததை நினைத்து
எத்தனையோ முறை
ஒரே மாதிரியான விழுதல்கள்
முட்டாள் நான்
புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு
வீண்விவாத விலகல்
நேரந்தவறாமை, நினைவு நல்லது
இன்னும் எத்தனையோவெல்லாம்
என் நெஞ்சோடு நின்று கொண்டது
எதையுமே செயலில் காட்ட
முடியவில்லையே என்ற ஏக்கம்

ஏக்கம், துக்கம்
ஏனிந்த வாழ்வென்ற எரிச்சல்
இதற்கப்பாலும் எனக்கேதோவோர்
பிடிமானம் வாழ்வில்
இருக்கத்தான் செய்கிறது
அது என்னத்தின் 'தேடல்'
என்பது
இன்னும் புரியவில்லை
இதுவும் நல்லதுதான்
இல்லையெனில் என்
இறுதிப்பயணம் வரை
இதே பாதையில் இப்போது போல்
முட்டி மோதிட
முடியாதல்லவா?...

தம்பலகாமம்- த. ஜீவராஜ், யாழ்
மருத்துவ பீடம்.

## நீ தந்த பரிசு

ஒரு நாளில் சாகவேண்டிய நான்
ஒவ்வொரு நாளும் செத்தபடி...

உயிரின் பசுமை
வரட்சியடைந்ததால்
உற்சாகத்தின்
உற்பத்தியிலும் ஊறு...!

நீ தந்த
மறக்க முடியாத மகுடம்
என் தலைக்கு சிலுவையாயிற்று!

வரவேற்புரையோடு
தொடங்கிய விழா
தலைமையுரைக்குப் பின்
நன்றியுரை கூட இல்லாமல்
முடிவுற்றுவிட்டது!!

புனிதமாக்கப்படுவேன் என்ற
புளகாங்கிதத்தில் நான்...
அவளோ,
மரணத்தை அள்ளி
தெளித்து விட்டாள்
மஞ்சட் தண்ணீரென்று!

எனக்குள் நடக்கும்
வாழ்வியல் போராட்டங்களின்
கண்ணீர்க் கவிதைகளை
வெளியிடும் போதும்
நீ நிராகரித்து விடுகிறாய்

வலிகளை தாங்கும்
வலிமையில்லாது
வாடி வதங்கி
பூமிப்பந்தில்- ஒரு
புள்ளியாய் என்னை
சுருக்கிக் கொண்டு
எதிர்கால எண்ணமில்லாத
என் சிறகுகளை நானே
சிறைப்படுத்தி
சிதைந்து போகிறேன்!

ஒரு நாளில் சாகவேண்டிய நான்
ஒவ்வொரு நாளும் செத்தபடி...

இனி முழுவதுமாய்
செத்து முடியும்
இறுதி நேரத்திலும்
இந்த மனிதன்
"உங்களை நான்
பிரியமாட்டேன்" என்ற
உன் சத்தியவாசகத்தை
சொல்லிப்
பார்க்கக்கூடும்!!

என். தனுசுஜன், சண்டிலிப்பாய்.

## எழுதப்படாத அழகு

சிலந்தி வலையின்
மென்மையுடன்
நிலவு இல்லாத
ஓர் இரவைப் போல
நீண்ட மெல்லிய
கோடாய்
அவள் கூந்தல்!

துண்டம் துண்டமாய்
கீறிப் போடும்
வான வில்லாய் வளைந்த
நிறங்களால்
பதப்படுத்திய
அவளின் நகம்!

உலகை மிஞ்சிய
இயற்கையின்
அழகு என்பது
துப்பட்டா
தினம்
படித்துப் பார்க்கும்
அவளின் இடை!

வழி தெரியா
சிறுவனை
தன் வழிக்கு
கொண்டு போகும்
வண்ணாத்திப் பூச்சிபோல
என்னையும்
இழுத்துப் போன
அவளின் பாதம்!

என் உயிரை
ஊசியில்
ஏற்றி வைத்திருக்கும்
அவளின்
மற்றைய அழகை எல்லாம்
எழுத்தில் கொண்டு வர
எனக்கு இஷ்டம் இல்லை!

என் விரல்களின்
தொடுகைக்காய்
பொத்தி வைத்திருக்கும்
அந்த அழகை எல்லாம்
உங்களின் நாவுகள்
மேய்ந்து போவது
நாகரீகம் அற்றது!

எனக்கும் அவளுக்கும்
இடைவெளிகள் குறைந்த
ஆடம்பரம் இல்லாத
அணைப்புகளில்
சுகம் தருவது
அந்த அழகு மட்டும்தான்!

நிப்காஸ் நிஸ்மி,
பொத்துவில்-03.

## நினைத்து, நினைத்து சிரிக்க

**வ**ங்கிக்குப் பக்கத்தில் ஒருவன் தேனீர்க்கடை நடத்தி வந்தான். ஒரு நாள் இவனைப் பார்க்க வந்த நண்பன் ஒருத்தன் இவனிடம், "நண்பா...எனக்கு அவசரமா கொஞ்சம் பணம் தேவைப்படுகிறது. நீ எனக்கு கடன் கொடுப்பாயா?" என்று கேட்டான்.

இதைக் கேட்ட அவன் கொஞ்ச நேர யோசனைக்கு அப்புறம், "நண்பனே! கடன் கொடுபதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபம் இல்லை. ஆனால், இந்தப் பக்கத்து வங்கியும் நானும் ஒரு சிறு ஒப்பந்தம் போட்டிருக்கோம். அதுதான் தயக்கமா உள்ளது" என்றான்.

"என்ன ஒப்பந்தம்?" என்றான் கடன் கேட்ட நண்பன்.

அதுக்கு தேனீர்க்கடை வச்சிருந்தவன், "அது வேறொன்றும் இல்லை. என் தொழிலை அவர்கள் செய்கிறவரை, அவர்கள் தொழிலை நான் செய்வதில்லை" என்று பதில் சொன்னானாம்.

**வி**டுதியில் தங்கிப் படிக்கிற மாணவன் ஒருவன் விடுமுறைக்குத் தன் ஊருக்குப் போனான். அப்போது இவன் தந்தை இவனிடம் சேம நலன்களை எல்லாம் விசாரித்து விட்டு கடைசியில், "மகனே! ஹாஸ்டலில் தினமும் நீ எத்தனை மணிக்கு எழுந்திருக்கிறாய்?" என்று கேட்டார்.

அதுக்கு அவன், "திறந்திருக்கும் ஜன்னலின் வழியாக சூரிய ஒளி என் முகத்தின் மீது பட்டவுடன் எழுந்து விடுவேன் தந்தையே" என்று அடக்கமாகப் பதில் சொன்னான்.

"ஓ அப்படியா... இவ்வளவு சீக்கிரமாக எழுந்து விடுவாயா?" என்று ஆச்சரியப்பட்டார் தந்தை.

"ஆமாம் தந்தையே! ஹாஸ்டலில் என் அறையின் ஜன்னல் மேற்குப் பக்கமாக உள்ளது" என்று பவ்யமாகச் சொன்னானாம் மகன்.



**பு**ருஷன் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தான். அப்போது அங்கு வந்த மனைவி அவன் தலையில் ஒரு தட்டு தட்டினாள். "ஏன் என்னை அடித்தாய்?" என்று கோபத்துடன் கேட்டான் புருஷன். "படுக்கையில் ஒரு மந்தமான ஆளாக நீ இருப்பதால்?" என்று சொன்னாள் அந்தத் துடிப்பான இளம் மனைவி.

கொஞ்ச நேரம் கழித்து டி.வி. முன்னால் உட்கார்ந்த மனைவிக்குப் பேய்த்தனமா ஓர் அறை விட்டான் புருஷன்.

"ஏன் என்னை இப்படி அடித்தாய்?" என்று மனைவி கேட்க "நான் மந்தமானவனாக இருக்கிறேன் என்பதை எப்படிக் கண்டு பிடித்தாய்? எப்படி உனக்கு வித்தியாசம் தெரிந்தது என்பதற்காகத்தான் இந்த அறை" என்று பதில் சொன்னான்.

## கவிதை நெஞ்சங்களுக்கு!

இவ்வாரச் சிறப்புக் கவிதையாக "என் மனதில் ஏற்பட்ட துயரத்தை, ஏமாற்றத்தை, பாதிப்பை, எதிர்பார்ப்பை, அரிப்பை, இயலாமையைத் தனிமையில் உட்கார்ந்து எழுதுவதன் மூலம் சற்று இளைப்பாறுகிறேன்- என்னை ஆசுவாசப்படுத்திக் கொள்கிறேன்... வேகாத வெயிலில், பன்னிரெண்டு மணிக்கு வரப்பு வெட்டிவிட்டு வெளியேறிய ஒரு விவசாயியின் உடலில் வழியும் வியர்வைத் துளி போல் என் கவிதைகள்..." என்று குறிப்பிடும் இரா. பொன்னாண்டானின் சில கவிதைகள்.

### மனிதம் இல்லா...

நரிகள் ஊளையிடும்
நடுக்காட்டில்
நான் பிறந்ததாய் என்
அன்னை சொன்னாள்
நம்பவில்லை.

புலிகள் வாழும்
புதருக்குள்
நான் வளர்ந்ததாய்
அவளே சொன்னாள்
புரியவில்லை.

கழுகுகள் வட்டமிடும்
கானகத்தில் நான்
கல்வி கற்றதாய்
மேலும் சொன்னாள்.
கருத்துப் புரியவில்லை.

அவள் சொன்ன
நரிகள் ஊளையிடும்
நடுக்காட்டுக்குப் போனேன்.
நரிகளைக் காணோம்.
நம் மனிதர்களே இருந்தார்கள்.

புலிகள் வாழ்ந்த
புதரைப் போய்ப் பார்த்தேன்
புலிகளைக் காணோம்.
புகழ் வாய்ந்தவர்களே இருந்தார்கள்.

கழுகுகள் வட்டமிட்ட
கானகத்தைப் போய்ப் பார்த்தேன்
கழுகுகளைக் காணோம்.
கற்றவர்களே இருந்தார்கள்.

அப்போதும் புரியவில்லை
அன்னையின் கூற்று.
அர்த்தம் புரிந்த போது
வயது அம்பத்திரண்டு.

அந்தக் கவிதையே என்
மகனுக்கும் சொன்னேன்
அவன் பிறந்த போது
அவனும் அப்போது திகைத்தான்.

### பங்காளி

அன்புள்ள தம்பி
சின்ன வயதில் நாம்
அப்பா வாங்கி வந்த ரொட்டிக்காகவும்
அம்மா சுட்டு வைத்த முறுக்குக்காகவும்
அழுது சண்டை போட்டிருக்கிறோம்.

பள்ளிக்குப் போன நாட்களில்
உனக்குப்
பழைய புத்தகமும்
எனக்குப் புதுப் புத்தகமும்
வாங்கிக் கொடுத்ததால்
வாய்ச்சண்டை வலுத்திருக்கிறது.

கல்லூரியில் படித்த போது
காற்சட்டை சேர்ட்டிற்காகக்
கட்டிப் புரண்டிருக்கிறோம்.

திருமணக் காலத்திலும்
தாலிச் சங்கிலி செய்வதில்
அதுவே நடந்தது.

பாகப் பிரிவினையின் போது
பலர் பார்க்க நாம்
படுமோசமாக நடந்து கொண்டோம்.

இப்போது நிலத் தகராறில்
நீ என்னைக் கொல்லப் போவதாகவும்
நான் உன்னைக் கொல்லப் போவதாகவும்
ஒருவரை ஒருவர்
மிரட்டியிருக்கிறோம்.
எப்போதாவது நாம்
சகோதரர்களாய் வாழ்ந்திருக்கிறோமா?
யோசித்துப் பார்...

### மணமகள் தேவை

அவசர வேலையாய் இருக்கிறபோது
தோளில் ஏறி
தலையைப் பிய்க்கும் மழலையின்
குழந்தைத் தனமும்,

தாமதமாய் வந்த பையனை
கையில்

## சிறப்புக் கவிதை

பிரம்பெடுத்து மிரட்டும்
டீச்சரின் கண்டிப்பும்,

மண்ணில் புரண்டு வந்த
குழந்தையை
மடியில் போட்டு
தண்ணீரில் குளிப்பாட்டும்
தாயின் பரிவும்,

பூப்பெய்திய பின் முதன்முதலில்
புதியவன் ஒருவனிடம்
பேச நேர்ந்த வெட்கமும்,

தலைவாரத் தாமதமானால்
பள்ளிக்குப் போக மறுத்து
'தாதா' எனத் தரையில் குதிக்கும்
சிறுமியின் கோபமும்,

பின்னால் வந்து கண்களைப் பொத்தித்
திறந்தபோது நிகழ்ந்த
பயமும்,

உதடுகள் நெளிந்தாலும்
முகம் சிவந்தாலும்
கண்கள் வழியே தெரியும்
அந்தப் புன்னகையும்

நிறைந்த பெண்ணாய்
இருப்பின்
விண்ணப்பிக்கவும்.

### தாத்தாவும் பேரனும்

**தாத்தா:**
என் மகன் பிறந்த போது
மிகவும் சந்தோஷப்பட்டேன்
என் பேரன் பிறந்த போது
அதைவிட சந்தோஷமாக இருந்தது
என் பேரனுக்கும் மகன் பிறந்த போது
என் சந்தோஷத்திற்கு
எல்லையே இல்லை.

**பேரன்:**
என் தந்தை இறந்த போது
அளவிலாத் துயரம் அடைந்தேன்
என் தாத்தா இறந்த போது
எதுவும் தோன்றவில்லை
என் தாத்தாவின் அப்பா
இருந்த போதே
எப்போ ஒழிவார் என்றிருந்தது.

# ஆண்-பெண் நட்பு

## மனதளவில் மட்டும் சாத்தியமா...?

'ஒரு ஆணும் ஆணும் நல்ல நட்புடன் இருக்க முடியும்... அதே போல் ஒரு பெண்ணும் பெண்ணும் நல்ல நட்புடன் இருக்க முடியும்... ஆனால் ஒரு ஆணும் பெண்ணும் உடற்கவர்ச்சியை மீறிய உண்மையான நட்புடன் இருக்கச் சாத்திமே இல்லை!' என்று வாதாடினார் ஒரு சக பத்திரிகையாளர்.

அதற்கு அவர் சொன்ன விளக்கம் இதோ...

"இறைவன், ஆணுக்குப் பெண்ணின் பேரிலும் பெண்ணுக்கு ஆணின் பேரிலும் இயற்கையாகவே ஒரு ஈர்ப்பைப் படைத்துவிட்டான். அந்த ஈர்ப்புதான் உலகை இன்று ஆட்டுவித்துக் கொண்டிருக்கிறது. அப்படி இருக்கும் போது மனதளவில் நெருங்கிப் பழகும் ஒரு பெண்ணிடம் 'வெறும் நட்பு மட்டும்தான்... உடல் ஈர்ப்பு இல்லை' என்று ஒருவன் சொல்வது ரொம்ப அபத்தம். அதனால்தான் சொல்கிறேன், உடற் கவர்ச்சியை மீறிய ஆண்-பெண் நட்புச் சாத்தியமில்லை" என்கிறார் அவர்.

அவர் சொல்வது உண்மைதானா? மற்றவர்கள் இதைப் பற்றி என்ன நினைக்கிறார்கள்?

"மேலோட்டமாகப் பார்த்தால் அவர் சொல்வது சரி என்பது போலத் தோன்றினாலும் உண்மையில் அவர் கருத்துச் சரியல்ல" என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறார் இன்னொரு மூத்த பத்திரிகையாளர்.

எப்படி?

"நட்பைப் பற்றிய எண்ணத்தையே மறுபரிசீலனை செய்ய வேண்டிய நேரம் வந்து விட்டது. முன்பெல்லாம்... உதாரணமாக எங்க பாட்டி காலத்தில் எல்லாம், அவர் தன் வீட்டுக்கு வரும் கணவரின் நண்பர்களைக் கூட 'வாங்க' என்று கூப்பிடுவதோ, அவர்கள் முகம் பார்த்துப் பேசுவதோகூடத் தவறாகக் கருதப்பட்டது. ஆனால் என் அம்மா காலத்தில் அப்பா வீட்டுக்கு வரும்வரை என் அப்பாவின் நண்பர்களுக்கு... அம்மா, டிபனோ காபியோ கொடுத்து உபசரித்தபடி அவர்களோடு சகஜமாகப் பேசிச் சிரித்துக் கொண்டிருப்பார். இன்று என் மனைவியோ, வேலை செய்யும் இடத்தில் தாமதமாகி விட்டால் தன்னுடன் வேலை செய்யும் யாராவது ஒரு ஆணின் வண்டியில் ஏறி வீட்டுக்கு வருகிறாள்.

ஒரு ஆணோடு பெண் முகம் கொடுத்துப் பேசினாலே அங்கே உடல் ஈர்ப்பு ஏற்பட்டுவிடும் என்று நம்பியது ஒரு காலம். சொல்லப்போனால் இந்தக் கருத்து கணவன்-மனைவி தவிர வேறு ஆணும் பெண்ணும் முகம் கொடுத்தே அதிகம் பேசாத நிலையிலிருந்த அந்தக் காலத்துக்கு வேண்டுமானால் சரியாக இருந்திருக்கலாம்.

ஆனால் அப்புறம் அம்மா காலத்திலேயே அந்த ஈர்ப்பு மாறி, நட்பு வந்து விட்டது!

இப்போது அம்மா காலம் போலவோ, பாட்டி காலம் போலவோ இல்லை. இன்று பல நகரங்களில் ஆணும் பெண்ணும் சேர்ந்து அலுவலகங்களில் பல மணி நேரங்கள் ஒன்றாக அமர்ந்து வேலை செய்கிறார்கள். தங்களுக்குள் 'ஜோக்' பரிமாறிக் கொள்கிறார்கள். தங்கள் கஷ்ட நஷ்டங்களைப் பரிமாறிக் கொள்கிறார்கள். ஒருவரை மற்றவர் சகஜமாகத் தங்கள் வண்டிகளில் கொண்டு வந்து வீடுகளில் விடுகிறார்கள்.

வெளியே வேலைக்குப் போகாமல் வீட்டு நிர்வாகத்தைக் கவனிக்கும் பெண்கள் கூட, கணவரின் நண்பர்கள், தோழியின் கணவர், குடும்ப நண்பர்கள், குழந்தையின் டியூஷன் மாஸ்டர், ஃபேமிலி டாக்டர் போன்ற யாராவது ஒரு சிலருடன் நட்புறவுடன்தான் பழக நேரிடுகிறது. அதற்காக எல்லாவற்றையும் உடல் ஈர்ப்பு என்று கொச்சைப் படுத்தி விடுவது சரியாகுமா?" என்று கேட்கிறார்கள் அவர்...

"பெண்கள் பெரும்பாலும் உண்மையான நட்பைத்தான் தேடுகிறார்கள். ஆனால் ஆண்கள் பெரும்பாலும் அதை உபயோகப்படுத்திக் கொள்கிறவர்களாக இருக்கிறார்கள்." என்கிறார் கல்லூரி மாணவி தீபிகா.

தனக்கு நடந்த சம்பவத்தையே சொன்னார் தீபிகா.

ஒரு பிரபல கல்லூரியில் தீபிகாவும் விஜய்யும் படித்து வந்திருக்கிறார்கள். சமீபத்தில் முடிந்த தன் அக்கா கல்யாணம் பற்றியும், அவள் மாமியார் செய்யும் கெடுபிடி பற்றியும், தன் அப்பாவின் பிடிவாதம் பற்றியும் தீபிகா விஜய்யிடம் பேச, கல்லூரி லெக்சரருக்குத் தான் வைத்த செல்லப் பெயர் பற்றியும் நண்பர்களுடன் அடித்த லூட்டி பற்றியும் விஜய் பேச... அவர்கள் நட்பு நாளொருமேனியாக வளர்ந்தது. ஒருநாள் ஒரு செமினாருக்காகத் தீபிகா, விஜய் இருவரும் கண்டிக்குச் செல்ல வேண்டியதாக இருந்தது. பஸ் பயணத்தின்போது அருகருகே அமர்ந்து சென்றார்கள். பஸ்ஸில் விஜய் அவளைத் தவறான இடத்தில் தொட்டு வித்தியாசமான தொனியில் பேச, தீபிகா அதிர்ந்தாள்... அன்றிலிருந்து தீபிகா விஜய்யிடம் முகம் கொடுத்துக்கூடப் பேசுவதில்லை.

"எங்கள் நட்பு அந்த பஸ் பயணத்தில் செத்துப் போனது" என்கிறார் தீபிகா.

"டீன்-ஏஜில் நட்பையும், உடல் கவர்ச்சியையும் நம்மால் சமப்படுத்த முடிவதில்லை. அதுதான் தீபிகாவின் நட்பு செத்துப் போனதுக்குக் காரணம்" என்கிறார் மனோதத்துவ ரீதியாக விஷயங்களை அலசும் ஒரு மூத்த பத்திரிகையாளர்.

"நம் ஊரில் குழந்தைகளை வளர்க்கும் போதே ஆண், பெண் என்று பிரித்து வளர்க்கிறோம். சிறு வயதிலிருந்து ஒன்றாய் வளர்ந்த ஆண், பெண் குழந்தைகளை ஐந்தாம் வகுப்புக்கு அப்புறம் 'ஏய்.. நீ அவனோட பேசாதடீ' 'நீயும் அவ கிட்ட பேசக் கூடாது' என்று பிரித்து வைப்பதால்தான் உறவுகள் புதிராகின்றன. புதிராக இருப்பதால்தான் பேசச் சந்தர்ப்பம் கிடைக்கும்போது அவர்களால் உடற் கவர்ச்சியைத் தவிர்க்க முடியாமல் போய்விடுகிறது.

உதாரணமாக ஜப்பானில் பெண்கள் தங்கள் பாதங்களைக் கொஞ்சம்கூட வெளியே காட்ட மாட்டார்கள். இதனாலேயே அந்த நாட்டில் பாதம்தான் பெண்களின் மிகக் கவர்ச்சியான பாகமாக இருக்கிறது. நம் நாட்டிலும் ஆண், பெண்ணைத் தனித்தனியே பொத்தி வைத்து வளர்க்கும் விதம் மாறிவிட்டாலே போதும்... நட்பில் இந்த உடற் கவர்ச்சி முழுவதுமாகப் போய்விடும்..." என்கிறார் அவர்.

## லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

# என்ன அவசரம்...?

தேனிலவு, தேனிலவு என்கிறார்களே... அப்படியென்றால் என்ன அர்த்தம் தெரியுமா?

இஸ்ரேலிய திருமணங்களில் பல நூறு வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட ஒரு சடங்குதான் தேனிலவு. திருமணம் முடிந்த பின் அன்றைய இரவில் அந்த ஆணும் பெண்ணும் நிலவைத் தனிமையில் ரசிப்பது ஒரு பழக்கமாக இருந்தது. நிலவை இரசிக்கும் அந்த இனிமையான சந்தர்ப்பத்தில் வால் கோதுமையிலிருந்து வடித்தெடுக்கப்படும் ஒருவகை புளித்த நீருடன் தேன் கலந்து கொஞ்சம் கொஞ்சமாக அருந்துவார்கள்.

தேன் கலந்த நீரை அருந்தியபடி இருவரும் சேர்ந்து நிலவை இரசிப்பதைத்தான் தேனிலவு என்று அழைத்தார்கள்.

நிலவு என்பது குளிர்ச்சியும் மனதுக்கு இதமும் மட்டுமே தரும் விசயமல்ல. முகம் பார்த்துப் பேசும்படியான அழகான, அளவான வெளிச்சம் தரும் விசயமும் கூட.

விழிகள் ஒன்றையொன்று பார்வையால் தொட்டு, பின் இதயத்தை மெல்லத் தட்டி, நினைவுகளால் நெகிழ்ந்து, அதன் பின் உடல் சிலிர்ப்பதே உன்னதமான அனுபவம்... பெரியவர்கள் தாங்கள் உணர்ந்த இந்த உண்மையை ஒவ்வொரு தம்பதிக்கும் உணர்த்தத்தான் முகம் பார்த்துப் பேசும் நிலவு நேரத்தின் தனிமையை அனுபவிக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள்!

சமீபத்தில் ஒரு திருமணத்துக்குச் செல்ல நேரிட்டது. மணமகன்-மணமகள் இருவரின் ஊரும் இருப்பது நூறு கி.மீ. தூரத்தில். திருமணம், மணமகனின் ஊரில் நடந்தது. முன்தினம் இரவு 'ரிஸப்ஷனில்' நின்று நின்று கால்கள் கெஞ்சிய அலுப்பில் நிம்மதியாகத் தூங்கக்கூட முடியவில்லை இருவருக்கும். திருமணச் சடங்குகளுக்குத் தயாராகும்படி விடியற்காலை நாலு மணிக்கே இருவரையும் எழுப்பி விட்டார்கள். மணமகளின் கண்கள் எரிச்சலில் கலங்கியிருப்பது, எதிரில் நிற்பவர்களுக்கே தெரிந்தது. மணமகனுக்கும்தான். ஹோமப் புகை. மாற்றி மாற்றிச் சடங்குகள், பெரியவர்கள் காலில் விழுந்து வணங்குதல், திருமணத்துக்குப் பின் கோயில்களுக்குப் போவது என்று முடிந்து மாலை ஐந்து மணிக்கு மணமகளின் வீட்டுக்குக் கிளம்பினார்கள் புதுமணத் தம்பதியர். இரவு மணமகனின் வீட்டிற்கு முதலிரவுக்குத் திரும்ப வந்து விட வேண்டும் என்பது திட்டம்.

காரில் உறவினர் கூட்டத்துடன் நெருக்கியடித்தபடியே இரண்டு மணி நேரப் பிரயாணம். மணமகள் வீட்டில் மறுபடி சில சடங்குகள்... பெரியவர்கள் கால்களில் விழுதல், வந்தவர்களை உபசரித்தல் என்று முடிந்து மறுபடி மணமகன் வீட்டுக்குக் கிளம்பினார்கள். மறுபடி நெருக்கியடித்து உட்கார்ந்தபடியே இரண்டு மணி நேரப் பயணம். காரில் வரும்போதே கைகால்கள் கெஞ்சியது மணமகளுக்கு. புதுப்பெண் என்பதையும் மறந்து 'ஆவ் ஆவ்' என்று ஏழெட்டுக் கொட்டாவிகள் விட்டாள். மணமகனின் வாயிலிருந்தோ குறட்டை ஒலிகள்கூடக் கிளம்பின. இரவு பத்தே முக்கால் மணிக்கு மணமகனின் வீடு வந்து சேர்ந்தது கார். அதன்பின் அவர்கள் பந்தி போட்டுச் சாப்பிட்டு முடித்து, பின் குளித்து முதலிரவுக்குத் தயாரானபோது நள்ளிரவு பன்னிரண்டு அடிக்க ஐந்து நிமிடங்களே இருந்தது.

இப்படியொரு சூழ்நிலையில் அந்த மணமகளையும், மணமகளையும் முதலிரவு அறைக்கு அனுப்பியபோது 'ஐயோ பாவம்!' என்றுதான் இருந்தது வெளியே நின்ற பலருக்கும்!

அந்தப் புதுமணத் தம்பதி இந்த இரவில் ஒருவரைப் பற்றி மற்றவர் என்ன தெரிந்து கொண்டிருப்பார்கள்? உடலளவில்தான் அவர்களுக்கு அந்த முதல் அனுபவம். எந்த வகையில் ரசிக்கத் தகுந்ததாக இருந்திருக்கும்?

தூக்கம் விழுங்கும் ராத்திரியில் வீட்டுக்கு வந்த திடீர் விருந்தாளிக்கு, இருப்பதை அவசரமாகச் சமாளித்து நாலு தோசை வார்த்துப் போடும் நம் வீட்டுச் சூழ்நிலைக்கும், இந்த அவசர முதலிரவுச் சூழலுக்கும் பெரிய வித்தியாசம் ஏதும் இல்லை!

வாழ்க்கையிலேயே மிக முக்கியமான ஒரு தருணம்... முதன் முதலாக ஒரு ஆணும் பெண்ணும் அறிமுகமாகும் ஒரு தருணம். இத்தனை அவசரமாக, இத்தனை அலுப்புகளுக்கு இடையில் இருக்கலாமா...?

'கல்யாணம் முடிஞ்சதா... சட்புட்டென்று அன்றைக்கே கோயிலுக்குப் போவது. மறுவீடு போவதென்று எல்லாத்தையும் முடிச்சுட்டு முதலிரவையும் வச்சு முடித்திடணும் என்று பல பெற்றோர்கள் படும் அவசரத்துக்கு, பாவம்... புதுசாய்த் திருமணம் செய்த அந்த தம்பதிகள்தான் பலிகடாவா?

இதுபோன்ற காரணங்களுக்காகத்தான் இந்த விஷயத்தில் நம் முன்னோர்கள் திருமணம் முடிந்து சில நாட்கள் கழித்து முதலிரவு வைப்பது என்ற அருமையான வழியைக் கடைப்பிடித்தார்கள்.

இதனால் திருமண அலுப்புடன் உறவு கொள்ளப் போகும்போது சிறு சிறு தடங்கல்களால் ஏற்படும் எரிச்சல். முதல் அனுபவமே சரியாக அமையாமல் போய்விட்டால், அதனால் ஏற்படும் தீராத கசப்புகள் என்று பல விஷயங்களைத் தவிர்க்க முடியும் அவசரத்தில் இருக்கும்போது தொட்டதற்கெல்லாம் எரிச்சல்படும் மனது அமைதியான சூழலில் அதிக பக்குவமாக இருக்கும் என்பது தெரிந்ததுதானே!

திருமணமான அன்றும் அதற்கடுத்த இரண்டொரு நாட்களும் இருவரும் நன்கு தூங்கி எழுவதால் உடல் அலுப்புக் குறையும். அதே சமயம் ஒருவர் பேரிலான ஈர்ப்பு மற்றவருக்கு இன்னும் அதிகரிக்கும். அந்த நாட்களின் பகல் நேரங்களின் தனிமையில் வெளியே சென்று வருவதன் மூலம் ஒருவரைப் பற்றி மற்றவர் முழுமையாக அறிந்துகொள்ள முடியும்.

"ஓ.. நீ மேல படிக்கணுமென்று விரும்பறியா... ரொம்ப சந்தோஷம். நானே உனக்கு இந்த சப்ஜெட்ல புத்தகம் வாங்கித் தர்றேன்" என்று தேவைகள் அறிந்து பூர்த்தி செய்ய விழைவதில் ஆரம்பித்து "அட... உங்களுக்கும் என்னை மாதிரியே பழைய பாட்டுக்கள்தான் பிடிக்குமா..!" என்று ரசனையை அறிந்து கொள்வது வரை சாத்தியப்படும். ஒருவரைப் பற்றி மற்றவர் தெரிந்து கொள்ளத்தான் அவர்கள் எப்படிப்பட்டவர்கள்... அவர்கள் திறமை என்ன என்று ஒருவருக்கு மற்றவருடைய பெறுமதி புரிகிறது. 'ஓ... இந்த கிருஷ்ணன் படம் போட்டது நீயா..!" என்று மனைவிக்குள் அப்படியொரு 'ஆட்டிஸ்ட்' ஒளிந்திருப்பதை அறிந்து கணவன் பிரமிப்பதில்-அவள் பெறுமதி புரிகிறது. இந்தத் திறமை புரிவதால் அவள் பேரிலான 'மரியாதை' என்பது ஆரம்பத்திலேயே அழகாக மனத்திற்குள் விழுகிறது.

திருமணமாகி வெள்ளி விழா கொண்டாடும் வயதில் ஒரு 'பிஸினஸ்' மனிதரைச் சமீபத்தில் சந்திக்க நேர்ந்தது.

"எம் பொண்டாட்டி பத்தியா கேட்கறீங்கள்? ஐய... அவளுக்கு ஒண்ணும் தெரியாதுங்க... சாப்பிடுவா... தூங்குவா... இடையில இந்த மூணு பிள்ளைகள் மட்டும் பெத்தா!" என்றார் அலட்சியமாக.

அவர் மனைவி-சூரியனைக் கணவனோடு ஒப்பிட்டுக் கவிதை எழுதியது பற்றியோ, எஸ், ஜானகியின் குரலில் 'நெஞ்சினிலே.. நெஞ்சினிலே...'பாடலை நெஞ்சுருகப் பாடியது பற்றியோ அவர் அறிந்திருக்கவே இல்லை. பல கணவர்கள் இன்று தங்கள் மனைவியை 'ஹூம்... இவ ஒண்ணுக்கும் லாயக்கில்லே!' என்று நொந்து கொள்வதற்கும், பல மனைவிகள் தங்கள் கணவரை 'இவரு வேஸ்ட்...!' என்று புலம்புவதற்கும் காரணம். ஒருவரின் 'பெறுமதியை' மற்றவர் சரியாகப் புரிந்து கொள்ளாததுதான்.

'ஃபர்ஸ்ட் இம்ப்ரெஷன் ஈஸ் த பெஸ்ட் இம்ப்ரெஷன்' என்று சொல்வார்கள். நீங்கள் உங்கள் துணையின் மனதில் எப்படிப்பட்டவராகப் பதிவாகிறீர்கள் என்பது மிக முக்கியமான விஷயம். அப்படிப் பதிவதற்கு இந்த முதலிரவுக்கு முந்தைய சில தினங்கள்தான் மிக உபயோகமாக இருக்கின்றன.

'பத்து மாதங்களுக்குப் பின்போ, இரண்டு வருடங்களுக்குப் பின்போ உங்கள் திறமைகளையும், நீங்கள் எப்படிப்பட்டவர் என்ற விஷயத்தையும் வெளிக்காட்டும்போது அதில் அவ்வளவு பெரிய ஆர்வம் கணவருக்கோ, மனைவிக்கோ உருவாவதில்லை. தவிர உடல் ரீதியான அனுபவம் ஏற்பட்ட பின்பு அந்த விஷயத்துக்குத் தரும் முக்கியத்துவத்தைப் பெரும்பாலும் இது போன்ற விஷயங்களுக்குத் தம்பதியர் தருவதில்லை. ஆகவே, உடல் ரீதியான அனுபவம் ஏற்படும் போதே அனைத்தையும் பேசுங்கள்...' என்கிறார்கள் மனோதத்துவ நிபுணர்கள். சரிதானே...?

அதிலும் பெண்களைப் பொறுத்தவரை முதலிரவுக்கு முன் இப்படிப்பட்ட இடைவெளி கட்டாயம் தேவை.


செல்வாஸின் சல்வார் பரிசுப் போட்டி

நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS

No. 4, Nelson Place (Near H.N.B)
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

செல்வாஸின் வாரம் ஒரு சல்வார் Af

பெயர்:..............................
முகவரி:..............................
..............................
தொழில்:..............................

உண்மை–நேர்மை–வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 24-08-2002

அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

இந்த வாரம் யாருக்கு சல்வார்?
கலஹா வாசகிக்கு அதிஷ்டம்!


இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்

து.பரிமளாதேவி
இல. 43/1, திக்கன பத்தனை, கலஹா.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.





"போற்றி தாய்" என்று தோள்கொட்டி யாடுவீர்
புகழ்ச்சி கூறுவீர் காதற் கிளிகட்கே;
நூற்றி ரண்டு மலைகளைச் சாடுவோம்
நுண்ணி டைப்பெண் ணொருத்தி பணியிலே.

சுப்பிரமணிய பாரதியார்–

## பாப்பா முரசு சிறுகதை

## கிணற்றுத் தவளைகளா?



**மு**ன்னொரு காலத்தில் ஜப்பான் நாட்டில் உள்ள ஒசாக்கா என்னும் நகரில் ஒரு தவளை இருந்தது. அந்தத் தவளைக்குப் பக்கத்து நகரான கீடோவைப் பார்க்க வேண்டும் என்று நெடு நாள் ஆசை.

அதே போல் கீடோ நகரில் வசித்த ஒரு தவளைக்கும் தனது பக்கத்து நகரான ஒசாக்காவைச் சுற்றிப் பார்க்க வெகு நாளா ஆசை. இவ்வளவு பக்கத்தில் இருந்தும் அந்த ஊரைப் பார்க்க முடியவில்லையே என்ற கவலை.

அவ்வூரில் இருந்து யாராவது வந்தாலோ... அவ்வூரைப் பற்றிய பெருமைகளை யாராவது பேசிக் கொண்டிருந்தாலோ இந்தத் தவளை ரொம்ப உஷாராகிவிடும். எத்தனை நாளைக்குத்தான் கிணற்றுத் தவளையாக இருப்பது; நாமும் ஊர் விட்டு ஊர் போய் வந்தால்தான் நம் மனம் விரிவடையும் என்று நினைத்தது.

ஒரு நாள் ஒசாக்காவை நோக்கிப் பயணத்தைத் துவங்கியது கீடோ தவளை. அதே நேரம் கீடோவை சுற்றிப் பார்க்கக் கிளம்பியது ஒசாக்காத் தவளை.

இரண்டும் இதுநாள்வரை இவ்வளவு தூரம் பயணம் செய்து பழக்கம் இல்லாததால் மிகவும் களைத்துப் போயின. இரண்டும் ஆங்காங்கே ஓய்வு எடுத்துக் கொண்டு ஊரைச் சுற்றிப் பார்க்கும் ஆசையில் எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டன.

இரண்டு ஊர்களுக்கும் நடுவில் ஒரு பெரிய மலை இருந்தது. இந்தப் பக்கம் ஒசாக்கா தவளை குதித்து குதித்து மலையேறியது. அங்குள்ள ஈரமான இடங்களில் ஓய்வு எடுப்பது அப்புறம் குதித்துக் குதித்து ஏறுவது. இப்படியாக இரண்டு தவளைகளும் மலை உச்சியை அடைந்தன. உச்சியில் ஏறியதும் ஒரு தவளையின் முகத்தை இன்னொன்று பார்த்தது.

"நீங்க யார்?"

"நானும் அதே கேட்கிறேன். நீங்க... யாரு?" என்று பேச ஆரம்பித்து இரு தவளைககளும் தங்களது கதையைச் சொல்ல. இரண்டு தவளைகளுக்கும் ஆச்சரியம் தாங்க முடியவில்லை. இரண்டும் தங்களது ஊர்களைப் பற்றிப் பெருமையாகப் பேசிக்கொண்டன. உடனே இரண்டு தவளைக்கும் ஆர்வம் அதிகரித்து, உடனேயே ஒருத்தர் ஊரை ஒருத்தர் பார்க்க வேண்டும் என்ற ஆசையில், ஒசாக்கா தவளை ஒரு உபாயம் கூறியது.

"நாம் இருவரும் ஒருவர் தோளை ஒருவர் பிடித்துக் கொண்டு மற்றவர் ஊரைப் பார்க்கலாம்". அந்த ஆலோசனை சரியெனத் தோன்றியது கீடோ தவளைக்கு!

உடனே இரண்டும் ஒருவர் தோளை ஒருவர் பிடித்துக் கொண்டு பின்னங்கால்களில் நின்றன. ஆனால் அந்தத் தவளைகள் செய்த தவறு தங்களுடைய கண்களைப் பக்கத்து ஊர் நோக்கி வைக்காமல், மூக்கை எதிர்நோக்கி வைத்துக் கொண்டு நின்றன. தவளைக்குக் கண்கள் பக்கவாட்டில் இருப்பதால் இவை இரண்டும் பார்த்தபோது அதனதன் ஊரே அவைகளுக்குத் தெரிந்தது.

"அச்சச்சோ.... எங்க ஊர் போலவே இருக்கே ஒசாக்கா," என்று கத்தியது கீடோ தவளை.

"ஆமாம்...எங்க ஊர் போலதான் இருக்கு கீடோ," என்று ஆமோதித்தது ஒசாக்கா தவளை.

"கொஞ்சம் கூட மாற்றமே இல்லையே...சே...இதைப் பார்க்கத்தான் இவ்வளவு தூரம் கஷ்டப்பட்டுப் பிரயாணம் செய்தோம்," என்று மிகவும் நொந்து கொண்டன இரண்டு தவளைகளும்.

'சரி... இனி அவங்க... அவங்க ஊருக்கே திரும்பிடலாம்' என்ற முடிவுடன் அதனதன் ஊர் நோக்கி புறப்பட்டன. தவளையார் இருவரும் அவை இரண்டும் இறக்கும்வரையிலும் இரண்டு ஊர்களும் ஒரே மாதிரி இருப்பதாகவே நம்பின. ▫

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **24.08.2002.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **458**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 455

பரிசுக்குரியவர்:
**எஸ். பரிமலா தேவி,**
நு/தமிழ் மகா வித்தியாலயம், நானுஓயா.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| **ஆர். யசோதினி,** பொன்னாவரச குளம், வவுனியா. | **ர.முகுந்தன்,** விஜயரெத்தினம் இந்து ம.க.நீர்கொழும்பு. |
| **கேக. நிகேஸ்,** சேர்ச் லேன், மட்டக்குளி. | **யோ.திவாகர்,** அரசினர் முஸ்லிம் வித்தியாலயம், நாத்தாண்டி. |
| **டிஸ்னி ஹென்றிக்,** பாத்திமாபுரம், கல்முனை. | **எஸ்.சந்தனி அகிலா,** வற்றலை. |
| **எம்.எப்.எம்.சாதிர்,** மின்ஹாஜ் முஸ்லிம் மகாவித்தியாலயம், யடவத்த. | **யோ. பிருதிவிகா,** சைவமங்கையர் வித்தியாலயம், வெள்ளத்தை. |
| **ஹிதாயா,** மாகிரி பத்தலை அப்புத்தளை. | **நிரோசியா அக்ரம்,** தமிழ் மகாவித்தியாலயம், இராகலை. |

## விடுகதைகளும் விடைகளும்

1. கோட்டைக்குள் இருந்து கொண்டு வெளியே வராதவன் கோடி உத்தரவுகள் பிறப்பிப்பான் அவன் யார்?
2. அடுக்கி வைத்த அழகுக் கோர்வை ஆட்டம் கண்டால் அழகு போச்சு அது என்ன?
3. ஆளுக்கு ஒரு அடையாளம் அதுவே இவனது பிரதானம். அவன் யார்?
4. ஆயிரம் தாண்டி கண்ணிருந்தும் பார்க்க வழியில்லை; நாலு கால் இருந்தும் நடக்க வசதியில்லை அது என்ன?
5. அண்ணன் தம்பி இருவர் பன்னிருவரைத் துரத்துவதே இவர்கள் வேலை. அது என்ன?
6. வளைக்க முடியும் ஒடிக்க முடியாது அது என்ன?
7. நெருப்பில் வெந்தவனுக்கு நீண்ட ஆயுள் அவன் யார்?
8. கறுப்பே நீ தரை இறங்குவது இனிப்பே அது என்ன?

**விடைகள்**

1. நாக்கு 2. பற்கள்
3. கைரேகை 4.நாற்கட்டில்
5.கடிகாரம்- முட்கள் 6. தலைமுடி
7. இரும்பு 8. மேகம்

## சாக்லேட் இசைத்தட்டு


**இ**ங்கிலாந்தில் ஜெர்மன் பார்முலா அடிப்படையில் ஒரு விசேஷ கிராமபோன் இசைத்தட்டு தயாரித்தார்கள். அதில் குழந்தைகளுக்கான சாக்லேட் தடவப்பட்டிருந்தது. குழந்தைகள் இசையைக் கேட்டு ரசித்த பின்னர் அந்த சாக்லேட் இசைத்தட்டை தின்கிறார்கள்.





**வி**மானக் கடத்தற்காரர்களிடம் இருந்து தப்பிக்க ஷேக்காங்கான் என்ற சிங்கப்பூர் வாசி ஒரு புதிய முறையை 1976 இல் கண்டு பிடித்தார். அதன்படி இவர் கண்டு பிடித்த உலோகக் கருவியைக் கையில் பூட்டிக் கொண்டால் விமானம் பயணம் முடியும் வரை சாப்பிடவும், தண்ணீர் குடிக்கவும் மட்டுமே கைகளைப் பயன்படுத்த முடியும். ■

**மு**தல் உலகப் போரின் போது ஆல்பர்ட் பிராட் என்ற அமெரிக்க வீரர் புதுவிதமான தோட்டா ஹெல்மெட் ஒன்றை உருவாக்கினார். இம்முறையில் ஹெல்மெட்டில் வடிவமைக்கப்பட்ட குழாய் வழியாக எதிரிகளைச் சுட முடியும். துப்பாக்கியின் விசையைக் கையால் அழுத்தி வெடிக்கிற மாதிரி, இதில் குழாய் இணைப்புடன் கூடிய தோட்டாவை இயக்கும் சக்தியை வாயால் ஊதியே சுட முடியும்.



## எலி பற்றிய தகவல்கள்



**எ**லிகள் ஜோடியாக வாழும் இடங்களில் எல்லாமே தங்களுக்கென்று ஒரு பெரிய சந்ததியை உருவாக்கி விடுகின்றன. 2 வருடத்தில் ஒரு ஜோடி எலி மட்டும் இப்படி 10 இலட்சம் எலிகளைப் பெருக்கம் செய்து விடுகிறது.

இந்தியாவில் எலிகளும், சுண்டெலிகளும் சாப்பிடும் தானியங்களைக் கொண்டே இங்கிலாந்து நாட்டுக்கும், அயர்லாந்துக்குமான உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும்.







**வ**யலில் வாழும் எலிகள் கிடைக்கும் நெற்கதிர்களைப் பூமியில் தோண்டிய வளைகளுக்குள் பத்திரப்படுத்துகின்றன. இந்த வகையில் 2 கிலோ மீற்றர் தூரம் வரை வளை தோண்டி நெற்கதிரைக் கொண்டு போகும் எலிகளும் உண்டு.

## அறிவுத் தேடல்

சென்றவாரப் புதிருக்கான விடை:



## இந்த வாரப் புதிர்




கேள்விக் குறியிட்ட இடத்தில் என்ன எண் வரவேண்டும்?

# சபிக்கப்பட்ட நிலவு

இரவு வேளைகளுக்கெல்லாம வானத்தில் விடுமுறை. மேற்குப் பக்கமாய் வெற்றிலைபோட்டுத் துப்பிவிட்டுச் சூரியன்கூடத் தூங்கக் கிளம்பிவிட்டான். ஓ... இருட்ட ஆரம்பித்திருக்கிறது. ஒவ்வொரு இரவுக்கும் அடுத்த சூரியோதயத்தில் வெளிச்சம் கிடைக்கும். ஆனால், இருண்டு கிடக்கும் இதயக் கிழக்குகள் விடியல் காண்பது எப்போது? முதுகுக்குப் பின்னால் அஸ்தமனம். முகத்திற்கு முன்னால் இருள். அவன் தன் வழக்கமான இடத்தில் சாய்வாக அமர்ந்திருந்தான். இப்போதெல்லாம் அவனது தேசத்தில் மரணத்திற்கு யாரும் வருந்துவதில்லை. காரணம், மனித உயிர்கள் இங்கே இலையுதிர் காலத்து இலைகளைப் போலத்தான் எண்ணப்படுகின்றன. அவனது பாதைகள் அவனது பாதங்களுக்குக் கீழேயே முடிவடைந்துவிட்டன. பாவம்... அந்தச் சிறுபறவையின் சிறகுகளை இந்தத் தேசம் கொள்ளிக்கட்டைகளால் அல்லவா கோதிவிட்டது. அந்தச் சின்ன மனதிற்குள் எத்தனை மௌனபூகம்பம்!

அதே ஆரவாரம். பிறந்ததிலிருந்து இன்றுவரை அவனால் அவதானிக்கமட்டுமே முடிந்த அந்த ஆரவாரம் இப்போதும் கேட்கிறது. அவனது வீட்டிற்கு முன்னாலுள்ள வெறும் வளவில் ஊர்ச் சிறுவர்கள் விளையாடுகிறார்கள். அவன் சின்ன மனது பின்னோக்கி மெல்ல நகர்ந்தது. இவற்றை நினைத்தால் அவனுக்கு அழுகை அழுகையாக வரும். ஆனால், என்ன செய்வது? நினைவுகள், நீர்ப்பாசிகள் எப்படித்தான் தள்ளினாலும் மீண்டும் மீண்டும் வந்து மாட்டிக் கொள்கின்றன.

இன்றிலிருந்து ஆறு வருடங்களுக்கு முன்பாக இருக்கலாம். அவனுக்கு வயது நான்காக இருந்திருக்க வேண்டும். இதே போலத்தான் அவன் அமர்ந்திருந்தான். இந்த ஆரவாரம் அன்றும் கேட்டது. அவர்களுடன் விளையாட அண்ணாவும் போயிருந்தான். இவனுக்கும் விளையாட ஆசைதான். "சின்னப் பிள்ளை விழுந்திடுவாய்..." என்று அம்மாதான் தடுத்திருந்தாள். 'வளர்ந்த பிறகு கட்டாயம் விளையாடலாம்' என்ற நம்பிக்கையோடும், எதிர்பார்ப்போடும் அவனும் சம்மதித்தான். அன்றிலிருந்து ஒவ்வொருநாளும் இந்தப் படியிலிருந்து வேடிக்கை பார்ப்பது அவனுக்கு வாடிக்கையாகிவிட்டது. தான் விளையாடப் போகும் நாளுக்காக நம்பிக்கையோடு காத்திருக்க ஆரம்பித்தான்.



திடீரென ஒரு நாள் அந்த ஊரே சலசலத்தது. எல்லோரும் அவசரமாய் எங்கோ புறப்பட்டு ஓடிக்கொண்டிருந்தார்கள். அன்று அந்த வளவில் விளையாடக்கூட யாரும் வரவில்லை. என்ன நடக்கிறது என்று அந்தச் சின்ன மூளைக்கு விளங்க முன்பே அவனும் குடும்பத்தோடு ஓடிக்கொண்டிருந்தான். ஆங்காங்கே வெடிச் சத்தங்கள் கேட்பதும், மனிதர்கள் விழுவதும் எழுவதுமாய் அந்த நீண்ட யாத்திரை தொடர்ந்தது. திடீரென அருகில் கேட்ட வெடிச் சத்தங்களால் எல்லோரும் நிலத்தில் படுத்துக்கொண்டார்கள். மனித அலறல்கள் மிகப் பயங்கரமாய் அவன் செவிப் பறையைத் தாக்கிச் செயலிழக்க வைத்தன.

அவன் கண்விழித்துப் பார்த்தபோது அம்மா அழுது கொண்டிருந்தாள். கூடவே அண்ணாவும் அழுது கொண்டிருந்தான். அப்பாவைத் தேடிக் களைத்து, "அப்பா எங்கேம்மா..." என்று கேட்டபோது "வந்திடுவார்" என்று அழுகையோடு பதில் வந்தது. மறுபடியும், 'அப்பா வருவார்' என்ற நம்பிக்கையோடு கூடிய எதிர்பார்ப்பை அந்தச் சின்ன உள்ளம் ஏற்றுக்கொண்டது.

மாதங்கள் சில கழிந்தன. அப்போது மீண்டும் தங்கள் வீட்டுக்கு வந்திருந்தார்கள். பழையபடி அதே ஆரவாரம் முன் வளவில் கேட்டுக் கொண்டிருந்தது. திரும்பிப் பார்த்தான். அம்மா இப்போதும் அழுது கொண்டிருந்தாள். 'அம்மா அழுகிறா, என்னெண்டு விளையாடுவது? அப்பா வந்தாப்பிறகு விளையாடலாம்' எனத் தனக்குத்தானே சமாதானம் சொல்லிக்கொண்டு படிகளில் அமர்ந்திருந்தான். எதிர்ப்புற வளவிலிருந்து அடித்த பந்து அவனது வீட்டிற்குப் பின்புறமிருந்த பற்றைக் காணிக்குள் விழுந்தது. "ஆ... பந்து" என்று எழுந்து ஓடினான். பற்றைகளைக் கடந்து பாய்ந்து உற்சாகத்தோடு ஓடினான். திடீரெனக் காதிற்குள் பெரிய சத்தம். காலுக்குள் நெருப்பு. மெல்ல கண்களுக்குள் கும்மிருட்டுப் பரவியது. "அம்மா..." அந்த அலறலோடு அவன் வாழ்வும் அஸ்தமித்துப் போனது. வலது காலின்றி ஊன்றுகோலோடு நடக்க ஆரம்பித்தான். இப்போதெல்லாம் விளையாட்டைப் பற்றி நினைக்க அவனுக்குப் பிரியமில்லை. 'விளையாடினா... மற்றக் காலும் போயிடும். விளையாடக் கூடாது' தனக்குத்தானே சொல்லிக்கொண்டான். அம்மா மட்டும் அழுதுகொண்டு சொன்னாள். "அப்பா வரேக்க உனக்குக் கால் வாங்கிக்கொண்டு வருவார்..." மீண்டும் ஒரு நம்பிக்கை அவனுக்குள் துளிர் விட்டது.

ஒருநாள் காலைப் பொழுது அண்ணா எங்கோ போகப் புறப்பட்டுக்கொண்டிருப்பது தெரிந்தது. அம்மா கண்ணீரோடு விடைகொடுத்தாள். அண்ணா அவனுக்கு மீண்டும் பல நம்பிக்கைகளையும், எதிர்பார்ப்புக்களையும் பரிசளித்துவிட்டுப் போனான். "அண்ணா வெளிநாடு போறார்..." அம்மாதான் சொன்னாள். ஏனோ அவனால் சந்தோஷப்பட முடியவில்லை.

காலங்கள் கடந்து கொண்டிருந்தன. இப்போதெல்லாம் அண்ணாவிடமிருந்து கடிதம் கூட வருவதில்லை. அம்மா இப்போதும் அழுகிறாள். அவன் மட்டும் அழுவதில்லை. 'கால் வாங்கப் போன அப்பாவும், அண்ணாவும் நிச்சயமாய் வருவார்கள்' என்று எதிர்பார்க்கிறான். ஒவ்வொரு கதவு திறக்கும் சத்தத்திற்கும் எட்டி எட்டிப் பார்க்கிறான். வீதியில் கேட்கும் குரல்களுக்கெல்லாம் உன்னிப்பாய் காது கொடுக்கிறான். தெருவோரம் நின்று தந்தையின் வயதுள்ள ஆண்களின் முகங்களில் 'அப்பாவா?' எனத் தீவிரமாய் ஆராய்கிறான். ஒவ்வொரு நாளும் விடியலிலிருந்து அஸ்தமனம்வரை இப்படித்தான் காத்திருக்கிறான். இன்றும் அதே போலத்தான் இரவு வந்துவிட்டது. குட்டிபோடும் என நினைத்துப் பிள்ளைகள் புத்தகத்தினுள் வைத்திருக்கும் மயிலிறகு மாதிரி அவன் எதிர்பார்ப்புக்களும், நம்பிக்கைகளும் அப்படியே பத்திரமாய் இருக்கிறது.

கதவு திறக்கும் சத்தம். யாரோ வருவது போன்ற பிரம்மை. "ஆ... அப்பா! அப்பாதான்!! அப்பாவேதான்!!!" ஊன்றுகோலை மறந்து எழுந்து எம்பிக் குதித்து நிலத்தில் உருண்டான். "அப்பா... அப்பா..." சிறு கைகளால் இருளைத் துளாவினான். காரிருளைத் தவிர வேறெதுவும் அங்கேயிருக்கவில்லை. "அப்பா... அப்பா" அவன் சத்தம் காற்றோடு கலந்து தேய்ந்தது. நிச்சயமாய் அப்பாவின் காதுகளில் ஒட்டிவிடும் என்ற நம்பிக்கையோடு கத்திக் கொண்டேயிருக்கிறான். அவனைப் பொறுத்தவரை அந்த வானம், தொட்டுவிடும் தூரம்தான்.

"இவள் வசந்தியின்ரை பெடியனுக்கு விசராம்..."

"இருக்காதா பின்னே? தகப்பன் செத்துப் போச்சு. வெளிநாட்டுக்குப் போன தமையனைப் பிடிச்சுக் கொண்டு போட்டாங்களாம். பெடியனுக்குக் காலுமில்லை. விசர் வராமல் என்ன செய்யும்?"வீதியில் யாரோ பேசிக்கொண்டு போனார்கள்.

இரவோடு போராடும் மெழுகுவர்த்தியின் முன் கண்மூடி அமர்ந்திருந்த வசந்திக்கு இந்தப் பேச்சு வலித்ததாகத் தெரியவில்லை. மரத்துப் போன மனதுக்கு வலி எப்படி இருக்கும்?

இப்போதெல்லாம் அவளால் அழக்கூட முடிவதில்லை. இலங்கையின் இருண்ட வானில் இப்போது சமாதான விடியல் தெரிவதாக எல்லோரும் பேசிக்கொள்கிறார்கள். நிகழ்காலத்திலிருந்து துண்டிக்கப்பட்டு, நம்பிக்கை வரண்டு, சுவாசிப்பதற்காக மட்டுமே வாழ்ந்துகொண்டிருக்கும் அவளுக்குச் சமாதானமேது? விடியலேது?

நீங்களே சொல்லுங்கள்! வாழ்க்கை முழுவதும் தேய்பிறையென்றால்... இவள் என்ன சபிக்கப்பட்ட நிலவா?

**விஜயா பிரான்சிஸ்-யாழ்ப்பாணம்**

---

# ஜீரணியாமை

**கா**ரிலிருந்து இறங்கி பங்களாவுக்குள் நுழைந்த சரவணன், தன் மனைவி ராதாவிடம், "ஏன் ராதா! நீர் இன்று ஒபீஸுக்குப் போகவில்லையா?" என்றான்.

"இல்லையப்பா! இன்று பாடசாலைகளுக்கெல்லாம் ஏ.எல் றிசல்ட் வருகுதாம். அதுதான் ஒபீஸுக்கு அரை நாள் லீவு போட்டுவிட்டு மகள் சாந்தியின் றிசல்ட்டைப் பார்க்கப் போகலாமென்று வந்துவிட்டேன்"

"நானும் அதையறிந்துதான் வங்கிக்கு அரைநாள் லீவு போட்டுவிட்டு வந்தேன். மகள் சாந்தி கட்டாயம் பாஸ் பண்ணி மெடிக்கலுக்கு எடுபடுவாள். இனி என்ன இன்னும் ஒரு நான்கு வருஷம் போனால் எங்களுடைய மகள் ஒரு லேடி டொக்டராக வருவாள், இல்லையா ராதா?" என்றான் சரவணன்.

"ஓமப்பா, எங்களுடைய கனவெல்லாம் நனவாகப் போகிறது. பாடசாலைப் படிப்பைவிட, மேலதிகப் படிப்பிற்காக எவ்வளவு செலவழித்து எத்தனை இடத்திற்கெல்லாம் அனுப்பினம். சும்மா என்ஜினியர், எக்கவுண்டன் என்று ஊர் ஊராக வேலைக்கு அலையாமல் வீட்டோடையே கிளினிக்கைப் போட்டுக் கொடுத்திடலாம். வருமானத்திற்கு வருமானமாச்சு. வீட்டோடை உத்தியோகமுமாச்சு" என்று அங்கலாய்த்தாள் ராதா.

"அது சரி, சாந்தி எங்கே... ராதா? ஒரு கப் கோப்பி குடித்துவிட்டுப் பாடசாலைக்குப் போகலாமென்றால் சமையல்காரச் செல்லம்மாவையும் காணவில்லை..." சரவணன் தன் பார்வையால் வீடெல்லாம் துளாவினான்.

"சாந்தியைக் கரைச்சல் படுத்தாதேங்கோ! அவள் மாடியில் தன் அறையில் படுத்து ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறாள். சோதனைக்குப் படித்துப் படித்துக் கண் மடலெல்லாம் வீங்கிப் போச்சு. செல்லம்மா சாந்திக்குக் கோப்பி கொண்டு போயிருக்கிறாள். எங்களுக்கும் கொண்டு வருவாள்" என்று ராதா சொல்லவும், செல்லம்மா இருவருக்கு ஆவி பறக்கத் தட்டில் இரண்டு கப் கோப்பி கொண்டுவரவும் சரியாக இருந்தது.

வெற்றுக் கோப்பைக்காக நின்ற செல்லம்மா, எதையோ எஜமானியிடம் கேட்பதற்கு நெளிந்து, குழைந்து கொண்டு நிற்பதைக் கண்ட ராதா, "என்ன செல்லம்மா... போய் வேலையைக் கவனி. நாங்கள் ஒரு பயணம் போய்விட்டு வாறம்" என்றாள் தன் அதிகாரக் குரலில்.



"எல்லா வேலைகளும் முடிந்துவிட்டதம்மா... சற்று முன்னர்தான் என்னைக் கூட்டிக்கொண்டு போகக் கமலா இங்கு வந்திருந்தாள். அதனால் அவளின் ஒத்தாசையுடன் இரவுச் சாப்பாட்டையும் செய்து முடித்துவிட்டேன் அம்மா... நீங்கள் வந்தவுடன் வருவதாகச் சொல்லி அவளை அனுப்பிவிட்டு... · அம்மா! என்ன அவசரமோ தெரியாது. தயவு செய்து அரைநாள் லீவு தாங்கம்மா..." எனக் காலில் விழாக் குறையாகக் கெஞ்சினாள் செல்லம்மா.

"அது சரி, உன்ரை மகள் கமலா எங்கையோ படிக்கிறதாச் சொன்னாயல்லவா, அவள் பள்ளிக்கூடம் போறதில்லையா? சும்மா அலையவிடாதே! பள்ளிக்கூடம் போகாமல் விட்டால் உனக்கு உதவியாக இங்கேயே எங்களிடம் ஏதாவது வீட்டு வேலை செய்யலாந்தானே! வசதியானவர்களின் பிள்ளைகளே படித்துவிட்டு வேலைக்கலையும் இந்தக் காலத்தில் நீ உன்ரை மகளைப் படிப்பித்து என்ன செய்யப் போகிறாயோ தெரி யாது?" என்று ஆடு நனைகிறதென்று ஓநாய் அழும் பாணியில் உபதேசம் செய்தாள் எஜமானியம்மா ராதா.

"இங்கே பார்! இன்று லீவு தர முடியாது... வேண்டுமானால் நாளைக்குத் தரலாம்" தொடர்ந்தாள் ராதா.

"அம்மா நான் கட்டாயம் வாறதெண்டு சொல்லிப் போட்டன்..." செல்லம்மா கெஞ்சினாள்.

இவர்களின் சம்பாசனையைக் கேட்டுக்கொண்டிருந்த சரவணன், "சரி! சரி, ராதா வீட்டு வேலைகள் எல்லாம் முடிச்சாச்சுத்தானே! பாவம் அவளைப் போகவிடு. நாங்கள் காரில்தானே போகிறோம். உடனே திரும்பிவிடலாம். நீ போ செல்லம்மா..." என்று அனுமதி கொடுத்தான் சரவணன்.

பாடசாலை அதிபரின் அறை வெளிச் சுவரில் உள்ள விளம்பரப் பலகையை மொய்த்தவாறு ஏ.எல் பெறுபேறுகளைப் பார்க்க மாணவர்கள், பெற்றோர்கள் என்று ஒரே கூட்டம். கூட்டத்துடன் கூட்டமாகச் சங்கமித்த சரவணனும், ராதாவும் கடும் முயற்சியின் பின்னர் தங்கள் மகள் சாந்தியின் பெயரைத் தேடிக் கண்டு பிடித்தார்கள்.

சாந்தி சரவணன் -F,F,F,F; ஆங்கிலம்-C; மொத்தம் 3F, 1C.

இதைப் பார்த்த ராதாவிற்கும் சரவணனுக்கும் தலை சுற்றியது. தம்மைச் சுதாகரித்துக்கொண்டு மெதுவாகக் கூட்டத்தைவிட்டு வெளியே வந்தார்கள். நல்ல வேளையாக அங்கே அவர்களை அறிந்தவர்கள், தெரிந்தவர்கள் என்று யாரும் இருக்கவில்லை.

அப்போது, அவர்களை நோக்கி, அறிந்த ஒரு முகம் வியர்த்தொழுக வந்துகொண்டிருந்தது. அதுதான் அவர்கள் வீட்டுச் சமையல்காரி செல்லம்மா. அவளுக்குத் தன் எஜமானும், எஜமானியம்மாவும் அங்கு வருவார்கள் என்றே தெரியாது.

சமையல்காரச் செல்லம்மா அங்கு ஏன் வந்தாள் என்று அவளது எஜமானர்களுக்குத் தெரியாது. செல்லம்மா அவர்களைக் கண்ட சந்தோஷத்தில் "ஐயா! எனது மகள் இங்கேதான் படிக்கிறாள். தன்ரை பரீட்சை முடிவுகள் வந்திருக்காம். தான் வாறதுக்கு வெட்கப்பட்டு என்னை அனுப்பியிருக்கிறாள். நீங்கள்தான் ஒருக்கால் பார்த்துச் சொல்ல வேண்டும்..." என்று சொல்லி அவர்களைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

எரிச்சலுடன் வெளியேறிய சரவணனுக்கும் ராதாவிற்கும் செல்லம்மாவின் வேண்டுகோளை 'உதாசீனப்படுத்த முடியவில்லை. செலவழித்துப் படிப்பித்த எங்கள் பிள்ளையின் றிசல்ட்டே மோசமென்றால், சுயமாகப் படித்த செல்லம்மாவின் மகள் என்னத்தைப் பாஸ் பண்ணப்போகுது?' என்ற இளக்காரத்துடன் அறிவித்தல் பலகையைப் பார்த்தான் சரவணன்.

செல்லத்துரை கமலா- A,A,A; ஆங்கிலம்-A; மொத்தமாக 4A.

மூன்று விஞ்ஞானப் பாடங்களுடன் ஆங்கிலப் பாடம் முதற்கொண்டு தோற்றிய நான்கு பாடங்களிலும் அதி விசேஷ சித்தியைப் பெற்றிருந்தாள் கமலா. சரவணனுக்கும், ராதாவிற்கும் ஜீரணிக்கவே முடியவில்லை.

சகல வசதிகளுடனுமிருந்த தங்கள் பிள்ளை சித்தியடைய முடியாத பரீட்சையில், அடிப்படை வசதிகளேயில்லாத தங்கள் வீட்டுச் சமையல்காரியின் மகள் அதிவிசேஷ சித்தி பெற்றதை எந்த எஜமானர்களால்தான் ஜீரணிக்க முடியும்.

ஆனால், சமையல்காரச் செல்லம்மாவோ 'A'க்கும் 'F'க்கும் உள்ள பெறுமதி தெரியாததால், சலனமற்று நின்றாள். ■

**நீர்கொழும்பு- எம்.எஸ்.கமலநாதன்**

# ஒரு கைதியின் கதை

## 15

"**அ**பிதாவிடம் இந்தப் பையைக் கொடுக்கப் போகும் போது நானும் வரட்டுமா?"

"வேண்டாம்" என்று அவசரமாக மறுத்தார், பரமேஷ்வர். "நானே அவளை நேரில் பார்க்க முடியுமா தெரியவில்லை... யாரோ ஒரு டிரைவரை அனுப்பியிருக்கிறாள்... அவனிடம்தான் கொடுத்து அனுப்பப் போகிறேன்."

பயணப்பையை வாங்கிக் கொண்டு பரமேஷ்வர் அவசரமாக வெளியே வந்தார்.

சந்திரமோகன் அவரை ஆச்சரியப்படுத்தத் துவங்கியிருந்தான். எவ்வளவு தூரம் முன்யோசனையுடன் செயல்படுகிறான்!

இவனிடம் வெகு கவனமாக இருக்க வேண்டும். அவனை முதலில் ஆழ்ந்து கவனித்து அவன் செயல்களிலிருந்து அவனுடைய பலவீனம் என்ன என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். அவசரப்பட்டு எந்த அடியும் எடுத்து வைத்து விடக் கூடாது!

பரமேஷ்வரின் வக்கீல் அலுவலகம். அவருடைய பிரத்தியேக அறை. மிகச் செல்வாக்குள்ள வாடிக்கையாளர்கள் அமர்வதற்காகப் போடப்பட்ட உயர்ரக குஷன் நாற்காலியில் சந்திரமோகன் அமர்ந்திருந்தான்.

"மல்லையா என்பவரும், கிருஷ்ணதாஸ் அவருடைய பார்ட்னராகவும் நடத்திக் கொண்டிருந்த மல்லையா லேத் ஒர்க்ஸ் நினைவிருக்கிறதா?" என்றான் சந்திரமோகன்.



பரமேஷ்வரின் முகத்தில் ஒரு நிழல் ஓடியது.

"நினைவிருக்கிறது...இப்போது பிரமாதமான லாபத்தில் ஓடிக் கொண்டிருக்கிறது..."

"அந்தத் தொழிற்சாலை இப்போது யாருக்குச் சொந்தம்?"

"மல்லையா இறந்த பிறகு அவருடைய முதலீட்டிற்கு ஒரு தொகை கணக்கிட்டு அவர் குடும்பத்தாரிடம் கொடுத்தாயிற்று. அவர் அங்கு இறந்ததால் அந்தத் தொழிற்சாலையில் அவர் குடும்பத்தினருக்கு ஆர்வம் இல்லை...பங்கு பிரித்துக் கொடுத்த பின் இப்போது அது முழுக்க முழுக்க கிருஷ்ணதாஸிற்குத்தான் சொந்தமாய் இருக்கிறது."

"அந்தக் கம்பெனிக்கும் நீங்கள் தானே லீகல் அட்வைஸர்?"

"ஆமாம்!"

"கம்பெனியின் பர்ஸனல் மானேஜரையும் கூப்பிட்டுக் கேளுங்கள்... அங்கு இப்போது இருக்கும் அத்தனை தொழிலாளர்களின் பெயர்கள்... மற்றும் ஐந்து வருடத்திற்கு முன்னால் ரங்கசாமி என்று ஒரு சீனியர் தொழிலாளி தொழிற்சாலை விபத்தில் மாட்டி இறந்தாரே... அந்த நாளில் தொழிற்சாலையில் வேலை செய்து அப்புறம் ஓய்வு பெற்ற தொழிலாளர்களின் பெயர்கள்...இரண்டையும் சேகரியுங்கள்..."

"சேகரித்து?"

"மல்லையா லேத் ஒர்க்ஸ் கம்பெனியின் அத்தனை பங்குகளையும் அந்தத் தொழிலாளர்களுக்குச் சமமாகப் பிரித்துக் கொடுத்து தொழிற்சாலையை அவர்கள் அத்தனை பேருக்கும் கூட்டாக வழங்கப் போகிறார், கிருஷ்ணதாஸ்...அதற்கான பத்திரம் தான் நாம் இப்போது எழுதப் போகிறோம்.

"உனக்கென்ன பைத்தியமா? கிருஷ்ணதாஸ் ஒரு நாளும் இதற்குச் சம்மதிக்க மாட்டார்..."

"பத்திரம் எழுதப் போவது நாம். அவர் எப்படிச் சம்மதிப்பார் எப்படி கையெழுத்துப் போடுவார் என்பதற்கொல்லாம் பொறுப்பு நான்! பத்திரம் எழுதும் போது மறக்காமல் கிருஷ்ணதாஸ் இதையெல்லாம் சுய நினைவோடு சொந்தப் புத்தியோடு எந்த வற்புறுத்தலும் இல்லாமல் எழுதிக் கொடுத்ததாக வாசகம் வர வேண்டும்... பத்திரம் மறுபடி மாற்ற முடியாதபடி 'இர்ரிவோக்கபில்' என்று சொல்வார்களே அந்த அடிப்படையில் அமைக்கப்பட வேண்டும்...."

"நீ போகாத ஊருக்கு வழி தேடுகிறாய்... கிருஷ்ணதாஸ் உயிரே போனால் கூட இந்தப் பத்திரத்தில் கையெழுத்துப் போட மாட்டார்..."

"உயிரே போனல் கூட?"

சந்திரமோகன் 'உயிரே' யை அழுத்திக் கேட்டான்.

பரமேஷ்வரின் பார்வை தடுமாறியது.

"அவர் உயிரைப் பற்றி அப்புறம் கவலைப்படுவோம். முதலில் அபிதாவைப் பற்றி நாம் கவலைப்படுவோம்." என்று அவன் அடுத்துச் சொன்னதும் பரமேஷ்வர் பத்திரம் தயாரிப்பதற்கான சட்டப் புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டார்.

கிருஷ்ணதாஸ் நாற்காலியில் களைத்து உட்கார்ந்திருந்தார். எதிரே டெலிவிஷனில் ஒரு பக்திப்படம் ஓடிக் கொண்டிருக்கிறது. அதில் காட்டப்பட்ட அம்மன் சிலையிடம் கிருஷ்ணதாஸ் கண்களை மூடி வேண்டினார்:

"தெய்வமே....என்னைக் காப்பாற்று...என் எதிரிகள் அத்தனை பேரும் அழிந்து போக வழி செய்..."

பிரார்த்தனை முடிந்து கண் திறந்தால் காட்சி மாறி, சாத்தான் வேடம் போட்டவன் வேடிக்கையாகச் சிரித்துக் கொண்டிருந்தான்.

ஃபோன் ஒலித்தது. அவருடைய பிரத்யேக நம்பர்.

எடுத்தார்.

"நான் பரமேஷ் பேசுகிறேன்... ஒரு புதுக் குழப்பம்" என்றார் பரமேஷ்வர் மறுமுனையில்.

"என்ன?"

"சந்திரமோகனிடம் என்னைப் பற்றிய காஸெட் மட்டும் இருக்கிறது என்று நினைத்திருந்தேன். தப்பு... அஸ்வினும் வேறு யாரோ ஒரு பெண்ணும் இருக்கும் காஸெட் கூட வைத்திருக்கிறான். அதையும் அவனிடமிருந்து வாங்க வேண்டியிருக்கிறது... பேரம் பேசி முடித்து விட்டேன்... இரண்டு லட்சம் கேட்கிறான்..." பரமேஸ்வரின் குரல் சற்று தழைத்தது.

"வாட் நான்சென்ஸ்!" கிருஷ்ணதாஸ் குரைத்தார்.

"தயவு செய்து அஸ்வினை உடனே பணத்தோடு அனுப்புங்கள்" பரமேஸ்வர் குரலை ரகசியமாக்கிக் கொண்டார். "காஸெட் நம் கைக்கு வந்ததும் இந்தப் பயலை என்ன செய்வது என்று நான் ஒரு திட்டம் வைத்திருக்கின்றேன்..."

"இரண்டு லட்சமா?" கிருஷ்ணதாஸின் நெற்றி சுருங்கியது.

"ஆமாம்... இரண்டே லட்சம்! அஸ்வினையே அனுப்புங்கள்."

கிருஷ்ணதாஸ் ரிசீவரை வைத்தார். "அஸ்வின்!" என்று ஆத்திரத்துடன் கூவினார்.

பரமேஸ்வர் போனை வைத்தார். முகம் கடுகடுவென்று இருந்தது.

"அபிதாவின் உயிரைக் காட்டி நீ இன்னும் என்னென்ன காரியம் சாதித்துக் கொள்ளப் போகிறாய்?"

"உங்களிடம் ரிவால்வர் இருக்கிறது என்று சொன்னீர்களே..."

"ரிவால்வர் எதற்கு?" பரமேஸ்வரின் முகம் திடுக்கிடலால் சிவந்து போனது.

"அஸ்வின் வரும் போது ஒரு விளையாட்டு காட்ட..."

"ஐம் ஸாரி... உன் விளையாட்டுக்கெல்லாம் ஒரு லிமிட் இருக்கிறது...ரிவால்வரையெல்லாம் உன்னிடம் கொடுக்க நான் தயாராயில்லை... கிரிமினல் லாயர்கள் என்றால் அதையெல்லாம் யோசிப்பார்கள் என்று நீ நினைக்கவில்லையா?"

"என்னிடம் இருக்கும் ரிவால்வர் உங்களுடையது தானா என்று கேட்பதற்காகத்தான் அந்தக் கேள்வி கேட்டேன்..."

"என்ன பேத்துகிறாய்? என் ரிவால்வரை நீ எடுத்து விட்டாயா?"

"நோ...நோ..." சந்திரமோகன் தன் பையிலிருந்து ரிவால்வரை எடுத்து வெளியே அவர் மேஜை மீது வைத்தான்.

பரமேஸ்வரின் விழிகள் விரிந்தன.

"இது என்னுடையது போலவே இருக்கிறது."

"எதற்கும் சீரியல் நம்பரைச் செக் பண்ணி விடுங்கள்... இன்னும் தோட்டாக்கள் போடவில்லை..."

எழுதுவது

**சபா**

பரமேஸ்வரின் விழிகள் விரிந்தன.

பரமேஸ்வர் பாய்ந்து ரிவால்வரை எடுத்தார். அவருடைய அந்தரங்கமான வாழ்க்கையைப் படம் எடுக்க முடிந்திருக்கிறது. காருக்குள் நுழைந்து ஸ்டிக்கர் ஒட்ட முடிந்திருக்கிறது. புத்திசாலி என்று நினைத்த மகளைக் கடத்த முடிந்திருக்கிறது. இவனால் அவருடைய ரிவால்வரை ஏன் எடுத்திருக்க முடியாது? என்ற அச்சத்தினால் வந்த வேகம் அது.

ரிவால்வரைக் கையில் பிடித்துப் புரட்டிப் பார்த்தார்.

எண்கள் பதிக்கப்பட்ட பகுதியைப் பார்த்ததும் பெருமூச்சு ஒன்று அவரிடமிருந்து விடுபட்டது.

"இது என்னுடையது இல்லை..." என்று மேஜை மீது திருப்பி வைத்தார்.

சந்திரமோகன் அதை எடுத்துக் கொண்டான். தோட்டாக்களை நிரப்பினான்.

பரமேஷ்வர் அவனை அச்சத்துடன் பார்த்தார்.

(கைதியின் கதை தொடரும்)

# ஆறு மனமே ஆறு!

## மன உளைச்சல்-02

**1990 ம்** ஆண்டு கிளிநொச்சியில் நடைபெற்ற தாக்குதல் காரணமாக மனைவியோடும், இரண்டு பிள்ளைகளோடும் இடம்பெயர்ந்து மன்னாருக்கு வந்து, அங்கிருந்து படகு மூலம் தமிழ் நாட்டுக்கு வந்து, லேனாவிளக்கு அகதிகள் முகாமில் வாழ்ந்து வரும் நவரத்தினத்திற்கு இப்போது மூன்று பிள்ளைகள். நவரத்தினம் கூலி வேலைக்குச் சென்று குடும்பத்தைக் கவனிக்கிறார்.

மூத்த இரு பிள்ளைகளும் லேனாவிளக்குப் பாடசாலையில் படிக்கிறார்கள். மூத்தவன் ராகுலன் 6 ம் வகுப்பில் படிக்கிறான். கெட்டிக்காரன்.

ராகுலன் பாடசாலைக்குச் செல்வதிலோ, பாடங்களைப் படிப்பதிலோ, விளையாடுவதிலோ பல நாட்களாக நாட்டமின்றிச் சோர்ந்து போயிருப்பது நவரத்தினத்திற்கு அவரது மனைவி மூலம் தெரியவந்தது.

அன்றும் ராகுலன் பாடசாலைக்குச் செல்லத் தயங்கினான்.

"என்ன? மூத்தவர் இன்னைக்குப் பள்ளிக்குப் போகேல்லியா?"

"இன்னிக்கு அவரு பள்ளிக்குப் போகவிரும்பலையாம்". இது மனைவி.

"ராகுலன்! இங்க வாங்க, ஏன் பள்ளிக்குப் போகலை?"

"அப்பா! பள்ளியில, என்னோட படிக்கிற பசங்க என்னைய அகதிப்பய, சிலோன்காரன்னுறாங்க..."

"ஆசிரியர்கிட்டே சொல்லுறது தானே..."

"ஆசிரியர் கிட்டே சொன்னே... அவங்களும்அப்படித்தா சொல்றாங்க... ஏனப்பா, அவங்க எல்லாரும் இப்படிச் சொல்றாங்க...?" என்று ராகுலன் சொல்லும்போது கண்கள் கலங்கி விட்டன.

நவரத்தினத்திற்குத் தனது பாடசாலை நாட்கள் ஞாபகத்திற்கு வந்தது.

கிளிநொச்சி பாடசாலை...

தோட்டக்காட்டான், வடக்கத்தையான், இந்தியாக்காரன்...

பழைய விடயங்கள் நவரத்தினத்திற்கு ஞாபகம் வரவே, தன் மகனுக்கும் அதே மாதிரியான துன்பம் ஏற்பட்டிருப்பதை ஒப்பிட்டுப் பார்த்து மிக உணர்ச்சிவசப்பட்டுப் போய், "கத்துக் கொடுக்கிற ஆசிரியங்களே இப்படிப் பிள்ளைகளின்ர மனசை நோகடிச்சா, பிள்ளைங்க எப்படி படிக்க முடியும்? இப்பவே போயி அதிபரையும், ஆசிரியங்களையும் கண்டு, இதுக்கொரு முடிவ இன்னைக்கே எடுக்கணும். ராகுலன்! புறப்படு பள்ளிக்கு"

மகனுக்கு ஆறுதல் சொல்லித் தேற்றவேண்டிய நவரத்தினம் அவசரமாகப் புறப்பட, நவரத்தினத்தின் மனைவி தடுத்து, "மவன் தன்ர கவலையை உங்களுக்குச் சொன்னா, நீங்க ஆத்திரப் படநீங்களே. நீங்க இப்போ வேலைக்குப் போங்க. முகாம்லயுள்ள பெரியவங்கோட பேசிப்பாப்பம்..."

"இல்ல... இத இப்படியே விட்டுப்புட்டா இவனும் கத்துக்கறதை விட்டுப்புட்டு என்போல கூலிக்காரனாத்தான் திரியணும்"

"நீங்க இப்ப போயி ஆத்திரத்துலை கேட்டுப் பிரச்சனைப் பட்டுட்டா அவுங்க புள்ளய கவனமாப் படிப்பிச்சிடுவாங்களா?"

மனைவி சொல்வதிலும் நியாயம் இருப்பதாகத் தெரிந்தது. அதிபரிடம் போவதைக் கைவிட்டு விட்டாலும், அவரது உள்ளம் கொதித்தது. சிறு வயதிலிருந்தே புறக்கணிப்பாலும் ஒதுக்கப்பட்டதாலும், பட்ட துன்பம் நவரத்தினத்தின் அடிமனதில் ஆறாத வடுவை ஏற்படுத்தியிருந்தது. இதே மாதிரியான புறக்கணிப்பால் தனது மகனும் துன்பப் படுவதை எந்தத் தந்தையால் பொறுத்துக் கொள்ள முடியும்?

அன்று வேலைக்குச் சென்று திரும்பிய நவரத்தினம், முகாம் நலப்பணியாளரைச் சந்தித்து மகன் ராகுலனைப் போன்ற பல இலங்கை மாணவர்கள் புறக்கணிக்கப்படுவதையும், அகதிப் பயல், சிலோன்காரன் என்று அழைக்கப்படுவதையும் மிக வேதனையுடன் கூறினார்.

முகாம் நலப்பணியாளர் மூலமாகவே நவரத்தினம் இப்போது என்னைச் சந்திக்க வந்திருந்தார்.

"நான் படிக்கிற காலத்தில் என்னைக் கிளிநொச்சியில வடக்கத்தையான், தோட்டக்காட்டான், இந்தியாக்காரன் என்று புறக்கணித்த சமுதாயத்தில் நான் பட்ட வேதனைகளைப் போல, இடம் பெயர்ந்து அகதிகளா தமிழ் நாட்டில இருக்கிற என்ட மவனை, சிலோன் காரன், அகதிப்பயன்னு ஒதுக்கி கேலி பண்றதால அவன் பள்ளிக்குப் போகமாட்டேங்கிறா. நம்மளை இலங்கைல வடக்கத்தையான், இந்தியாக்கார எங்கிறாங்க... இங்க இந்தியால சிலோன் கார, அதிப்பய என்கிறாங்க... நாம நாடற்றவங்களா?"

நவரத்தினம் ஆத்திரத்துடனும் வேதனையுடனும் ஒரே மூச்சாகச் சொல்லி முடித்தார்.

நவரத்தினம் சிறுவனாயிருந்த போது 1977 ஆம் ஆண்டில் இனக்கலவரத்தின் போது மலையகத்தில் இடம் பெற்ற கொடுமைகளும், கோர நிகழ்வுகளும், பின் கிளிநொச்சியில் ஏற்பட்ட புறக்கணிப்பும், போராட்ட ஈடுபாட்டின் போது தலைமையே அழிக்கப்பட்டதால் ஏற்பட்ட அச்சுறுத்தலும், இடம்பெயர்ந்து தமிழ்நாட்டில் படுகின்ற துன்பங்களும், இவையெல்லாவற்றுக்கும் மேலாகத் தனது மகன் ஒதுக்கப்படுவதும் தொடர்ச்சியாக இவற்றினால் ஏற்பட்ட மன உளைச்சலே நவரத்தினத்தின் நிலைக்குக் காரணம் என்பதனைத் தெரிந்துகொண்டு, அவரை அமைதிப் படுத்தினேன்.

"உங்களுடைய உணர்வும், மன உளைச்சலும் நியாயமானதே. இலங்கையில் மலையகத் தமிழர்கள் ஆங்கிலேயன் காலத்திலிருந்தே, தமது வியர்வையையும், குருதியையும், உடல்களையும் கூடத் தேயிலைத் தோட்டங்களுக்கு உரமாக்கியவர்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

**எஸ்.பி.லெம்பட்**

இலங்கையின் தேசிய வருமானத்திலே மலையக மக்களின் பங்கு மிக முக்கியமானது. இருந்தும் இவர்களுக்குச் சரியான தலைமையும், வழிகாட்டல்களும் இல்லாததாலே வறுமையும் சமுதாயத்தில் மதிப்பின்மையும் தொடர்கிறது. இலங்கையின் பூர்வீகத் தமிழர்கள் எனக் கூறிக்கொள்ளும் வடக்குக் கிழக்குத் தமிழர்களும் மலையகத் தமிழர்களைக் கூலியாட்களாக, வீட்டு வேலைக்காரர்களாக, அடிமை போலவே நடத்தியும் உள்ளார்கள்.

ஆனால், ஈழப் போராளிக் குழுக்களில் மலையகத்து இளைஞர்களும் ஏனையோரைப் போல சமத்துவமாகக் கணிக்கப்பட்டதால் பல மலையகத்து இளைஞர்கள் போராளிக் குழுக்களில் இணைந்து கட்டுப்பாட்டுடனும், விவேகத்துடனும் போராட்டத்தில் பங்குபற்றினர். கணிசமானவர்கள் வீரமரண மெய்தியுமுள்ளனர்.

இலங்கையின் பூர்வீகத் தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் எனத் தமிழ் மொழி பேசும் அனைவரும் இலங்கைத் தமிழர்களே! அரசியல் நோக்கங்களாலும் இன ரீதியான பிரிவினைகளாலும் பிரிந்துள்ளோமே தவிர நாம் அனைவரும் இலங்கைத் தமிழர் என்ற உணர்வுக்கே முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

மாவட்டம், பிராந்தியம், இன, மத வேறுபாடுகளை அகற்றி, இலங்கை வாழ் தமிழ் சமூகம் ஒற்றுமையாக, சமத்துவமாக வாழ வழி பிறக்கும் என்பதனை நம்புங்கள். அதற்காகப் பாடுபடுங்கள். உங்கள் மகனுடையதும் உங்களதும் மன உளைச்சலைத் தீர்க்கப் பாடசாலை மட்டத்தில் பேசி உரிய நடவடிக்கை எடுக்க முயற்சி செய்கிறேன்" எனக் கூறினேன்.

நவரத்தினம் முன்னாள் போராளி என்ற வகையில் நான் கூறியவற்றைப் புரிந்து கொண்டு அமைதியுற்றார்.

தொடர்ந்து வரும்...

# அபிவிருத்தியா...? அரசியல் தீர்வா...?

## கூட்டமைப்பின் குத்துக்கரணம்!

அபிவிருத்தியா...? சீ.....சீ..... அது புளிக்கும்! கசக்கும்! என்றனர் கூட்டமைப்புக்காரர்கள். ஏன்?... எட்டியெட்டிப்பார்த்தார்கள். எட்டவில்லை கட்டிவிட்டார்கள் கட்டுக்கதையை.

அரசியல் தீர்வும் அபிவிருத்தியும் இருவேறாக பிரித்துப் பார்க்க முடியாதவை. எரிந்து கொண்டிருக்கும் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு எவ்வளவு அவசியமோ அதேபோல் சிதைந்து போன தேசமொன்றிற்கு அபிவிருத்தியும் அவசியமாகிறது.

அரசியல் தீர்வு குறித்த இலக்கில் தமிழ் பேசும் மக்கள் நகர்ந்துகொண்டிருக்கும்போது அபிவிருத்திக்கான வாய்ப்புகள் ஏற்பட்டால் அதைச் சரிவரப் பயன்படுத்தவேண்டியது சம்பந்தப்பட்டவர்களின் பாரிய பொறுப்பாகும்.

கல்வி, கலாசாரம், வேலைவாய்ப்பு, போக்குவரத்து, மின்சாரம் என்பன அபிவிருத்திக்குள் அடங்கும் முக்கிய அம்சங்கள். அது தவிர யுத்தத்தால் அழிந்துபோன தேசத்தைப் புனரமைப்புச் செய்யவும், இடம்பெயர்ந்த மக்களின் நலன்களை கவனிக்கவும், சாத்தியமாகும் பட்சத்தில் அவர்களை மீளக் குடியமர்த்தவும் அபிவிருத்தி என்ற பணி பெரும்பங்காற்றுகிறது. மொத்தத்தில் அபிவிருத்தி இல்லையெனில் அப் பிரதேசம் மயான பூமிதான். இதைத் தமது நடைமுறை வாழ்வியலில் அனுபவ ரீதியாக உணர்ந்துகொண்டவர்கள் தமிழ் பேசும் மக்கள். இதை உணர மறுத்து வருபவர்கள் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சிகள்.

அபிவிருத்தி குறித்த அக்கறை சம்பந்தப்பட்ட தமிழ்க் கட்சிகளுக்கு ஒருபோதும் இருந்ததில்லை. "அபிவிருத்தி என்பது வெறும் சலுகை மட்டுமே. அது தேவையற்றது" என்று வாய் கிழியக் கத்திய கூட்டணியின் ஆனந்தசங்கரி இப்போது யாழ் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். யாழ் மாவட்டத்தின் அபிவிருத்திதான் தமிழ்பேசும் மக்களுக்கான அரசியல் தீர்வு என்று இப்போது சங்கரியார் கருதத் தொடங்கி விட்டாரோ என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

கூட்டணியின் யாழ் மாநகர சபையின் உறுப்பினர் ஒருவர் கடந்த வருடம் லண்டனிலுள்ள தமிழ் வானொலி ஒன்றிற்குப் பேட்டியளித்திருந்தார். அதில் யாழ் மாவட்டத்தை அபிவிருத்தி செய்வதென்பது தமிழ் மக்களுக்குச் செய்யும் துரோகம் என்று கூறியிருந்தார். உண்மையில் அது துரோகம் என்றால் அந்தத் துரோகத்தை இழைப்பதற்கு இவர்கள் இப்போது ஏன் முன்வர வேண்டும் என்று மக்கள் மத்தியிலிருந்து கேள்விகள் எழுந்துள்ளன.

> வடக்கு கிழக்கிற்கு வந்து போகின்ற அமைச்சர்களிடம் அபிவிருத்திக்கு உதவுங்கள் என்று கோரிக்கைவிட்டு வருகிறார்கள். புனர்வாழ்வு அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தனாவிடம் நிதி ஒதுக்கித் தருமாறு கேட்டிருக்கிறார்கள். காலத்திற்குக் காலம் கதையை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள் தமிழ்க் கூட்டமைப்பினர்.

தமிழ் காங்கிரஸ் கட்சியினரும் பங்குக்கு தாமும் அபிவிருத்தி என்பது சலுகை என்றுதான் கதையளந்து வருகிறார்கள். ஆனால் தமது கட்சியின் ஸ்தாபகர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்கள் அபிவிருத்தியையே முக்கிய இலக்காக கருதிச் செயலாற்றியிருக்கிறார். அபிவிருத்தி பிழையென்றால் ஜீ.ஜீ.யின் நிலைப்பாடு குறித்து அவர்கள் இதுவரை அது தவறு என்று விமர்சனம் செய்திருக்கவேண்டும். ஆனால் அது பற்றி வாய் திறப்பதேயில்லை.

**ஊடறுப்பான்**

வடக்கு கிழக்கிற்கு வந்து போகின்ற அமைச்சர்களிடம் அபிவிருத்திக்கு உதவுங்கள் என்று கோரிக்கை விட்டு வருகிறார்கள். புனர்வாழ்வு அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தனாவிடம் நிதி ஒதுக்கித் தருமாறு கேட்டிருக்கிறார்கள்.

காலத்திற்குக் காலம் கதையை மாற்றிக்கொண்டிருக்கிறார்கள் தமிழ்க் கூட்டமைப்பினர். அபிவிருத்தி தேவையற்றது என்றால் தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் தீர்வு குறித்து இவர்கள் இதுவரை திட்டவட்டமான கருத்தைக் கூறியிருக்கவேண்டும். அதுவும் நடந்ததாக இல்லை. பார்க்கப்போனால் தமது எதிரி எதை ஆதரிக்கிறானோ அதை எதிரப்பது மட்டும்தான் தமிழ் கூட்டமைப்பினரின் கொள்கை என்றே தெரிகிறது. தமிழ் பேசும் மக்களின் நலன் சார்ந்ததாக எதுவுமேயில்லை.

எது எப்படியோ ஆனந்தசங்கரிக்கு யாழ் மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவர் பதவி கிடைத்துவிட்டது. அபிவிருத்தி என்பது சலுகை என்ற வார்த்தை சங்கரியின் வாயிலிருந்து மீண்டும் உதிராமல் பார்க்கவேண்டிய பொறுப்பு மக்களுடையதே!

மக்களின் ஞாபக மறதிதான் அரசியல்வாதிகளின் பலம்! ஆகவே மக்கள் விழித்திருக்க வேண்டும்! ●

# ஆயுதப் போராட்டத்துக்குப் போன மலையக இளைஞங்க கதி என்னாங்க?

மலையகோம்பத்தி யார்யாரோ என்னால்லாமோ பேசறாங்க, எழுதறாங்க. இப்ப நாமளும் ஆயுதம் தூக்கிப் போராடனுமுன்னெல்லாம் இப்பவும் செலபேரு முழங்கறாங்க.

ஆனாங்க, நம்ம மலையக இளைஞங்களும் ஆயுதப் போராட்டத்துக்கு போயிருக்காங்க. அவுங்க என்ன ஆனாங்க, என்னாத்த சாதிச்சாங்க, ஏங்கறதப்பத்தி யாருமே இதுவரையில பேசினதுமில்லை, எழுதினதுமில்லை, ஏங்க..?

> நம்ம மலையக இளைஞங்களும் ஆயுதப் போராட்டத்துக்கு போயிருக்காங்க. அவுங்க என்ன ஆனாங்க, என்னாத்த சாதிச்சாங்க, ஏங்கறதப்பத்தி யாருமே இதுவரையில பேசினதுமில்லை, எழுதினதுமில்லை, ஏங்க..?

நம்ம இளைஞங்க எத்தின பேரு செத்துப்போயி இருக்காங்க எங்கிற கணக்குக்கூட இன்னிக்கு யாருகிட்டயின்னாலு ஒரு தகவலாத்தன்னு இருக்காங்க? அப்புறம் என்னாங்க தலைவருங்க, என்னாங்க இவுங்கட அக்கறைங்க. உசிருங்க... உசிரு! பச்சை உசிருங்க, பெத்த வயிறு பத்திக்கிட்டு எரியுமில்ல. யாரு கண்டுக்கறாங்க. அந்தத் தாயிக்குத்தன்னும் தன்னோட புள்ள எங்கபோயி எப்பிடி மாண்டுச்சுதுண்டு தெரிஞ்சுக்க முடிச்சுதாங்க.

இந்த நெஞ்சு வெடிக்கிற சோகம், மலையகத்தில ஒரு அங்கங்க. மனசுக்கயே புதைஞ்சு நிண்னு இன்னுங் குமிறிக்கிட்டுக் கெடக்குங்க. யாருக்குத் தெரியுங்க இந்தக் கதை?

நம்ம மலையக இளைஞங்க ஆயுதப் போராட்டத்தில போனாங்கங்கறதுக்குப் பின்னாடி என்ன சங்கதி இருந்திச்சுங்கறதயும் நாம சித்த சிந்திச்சுப் பாக்கனுமில்லியாங்க.

மலையத்து இழைஞங்க, தங்க, தொழிலு, குடும்போ எல்லாத்தையு ஒதறித் தள்ளிப்புட்டு ஆயுதப் போராட்டத்துக்குன்னு இயங்களுக்கு போயி சேந்தாங்கன்னா அதில அவுங்க செஞ்சிருக்கற தியாகோ, ஒன்னும் வடக்கு கெழக்க இளைஞங்க செஞ்ச தியாகத்தவிட குறைஞ்சதில்லேங்க. சொல்லப்போன இன்னு ஒசத்தீங்கலாமுங்க.

ஆமாங்க. ஏன்னாக்க, ஒழைப்பத் தவிர ஒன்னுமே இல்லாதவங்களா இருக்கற மலையகத் தொழிலாளிங்க குடும்பத்துகிட்டயிருந்து ஒரு இளைஞன் போயிடுச்சான்னா அவுங்க எம்புட்டு தூரம் கஞ்சிக்கும் கூழுக்கும் கஷ்டப்படுவாங்க, அவுங்க குடும்பத்துக் குமருகளுக்கு கலியாணச் சடங்குன்னு செய்து கரையேத்த முடியாம எம்புட்டுத் தவிப்பாங்க எங்கறது யாருங்குங்க தெரியு?

இவுங்க பொருளாதார நெலமைய வடக்கு கெழக்கோட ஒப்பிட்டுக்க முடியுங்களா? அவுங்களுக்குசரி ஒருத்தன் போனா இன்னொரு சகோதரனோ, மாமனோ, மச்சானோ, வெளிநாட்டில இருந்து குடும்ப பாரத்துக்கு ஒத்தாசை கெடைக்குது. இவுங்களுக்கு ஏது நாதி?

இந்தக் குடும்பங்க வெளியாலயு சொல்லிக்க ஏலாம வேதனைய வயித்திலயும் மனசு[illegible] பொதுக்கிகிட்டு ஊமைப் பிண்டங்களா பொதைஞ்சு கெடக்கற கதைங்க எப்பிடிங்க வெளியால வரு?

> நம்ம இளைஞங்க, இந்த இயக்கோ, அந்த இயக்கோ, என்னு இடம்பார்த்து சேரலீங்க. அவுங்க சந்திச்சப்படி சேந்துகிட்டாங்க. இவுங்களை ஏம்பா போட்டு இசக்க மோதலில கொண்ணு தள்ளுனீங்க? இவுங்க யாருக்குங்க பாவொஞ் செய்தாங்க?

அதுதா இங்க நடந்த ஒரு சோகக் கதை யாருக்கு தெரியாம இந்த மலைப் பள்ளத்தாக்குகுள்ளேயே பொதைஞ்சு கெடக்குதுங்க.

ஏதோ, ஈழம், புரட்சி எங்கறப்ப நம்ம மலையகத் தமிழங்களோட துன்பத்துக்கு இதால ஏதும் விடுதலை கெடச்சுடுமாக்கு முன்னு நம்பி ஆயுதந்தூக்க போனாங்களே, அவுங்களுக்கெல்லா என்ன நடந்ததுன்னு ஏங்க யாருமே கேக்கல?

ஈ.ரோசு, ஈ.பி.ஆர்.எல்.எப்பு எண்டெல்லாம் இயக்கங்க இங்ககூட வந்து, தாங்க ஏதோ பாட்டாளிவர்க்க புரட்சிக் காரங்களா, ஏதோ மலையகப் பாட்டாளிங்களுக்கு விடுதலை கெடைக்கலின்னா தமிழ் மக்களுக்கே விடுதலை கெடைக்காதா, என்னுசொல்லி, தங்கட ஈழம் மேப்பிலையு மலையகத்தையும் சேத்துக் கீறி ரகசியமா வகுப்புங்க நடத்தி இளைஞங்கள சேத்தாங்களே, இப்ப என்னாச்சு!

மேப்ப சுருட்டி வைச்சுப்புட்டாங்களா? சரி சுருட்டிக்குங்க, நீங்க கொண்டுபோன மலையக இளைஞங்க எங்கேங்க?

இது மட்டுமில்லீங்க, வவுனியாவில குடியேறினா ஏதோ வசந்த வாழ்க்கை கெடைக்குன்னு சொல்லி, எங்களக் கொணந்து வவுனியாவுல குடியேத்தினாங்களே, அங்கயுமில்ல நம்ம இளைஞங்கள இயக்கங்களில சேத்தாங்க. அதுமட்டுமில்ல, மட்டக்களப்புக்கு தொழிலுக்குப் போனவங்களையு அப்புடியே சேத்துகிட்டாங்க.

இதெல்லாம் வேதனையில்லீங்க, நம்ம இளைஞங்க, இந்த இயக்கோ, அந்த இயக்கோ, என்னு இடம்பார்த்து சேரலீங்க. அவுங்க சந்திச்சப்படி சேந்துகிட்டாங்க. இவுங்களை ஏம்பா போட்டு இசக்க மோதலில கொண்ணு தள்ளுனீங்க?

**மலையூரான்**


இவுங்க யாருக்குங்க பாவொஞ் செய்தாங்க? தங்க மலையத்துக்கு ஒரு ஊசியத்தன்னு இந்த ஆயுதப் போராட்டத்துன்ன பெயரால பெற்றுக் குடுக்க ஏலாமப் போன இந்த அப்பாவி இளைஞங்க தங்கட உசிரக் கொடுத்ததுதானேங்க மிச்சம்?

குடுத்தாங்க சரி, இதில செத்தவங்க யாரு, எப்புடி செத்தாங்கங்கறதாவது அவுங்க குடும்பத்துக்குத் தெரியுமாங்க?

இப்ப பாருங்க, இந்த விஷயமெல்லாந் தெரிஞ்சுக்குன்னு, மலையத்து இளைஞங்கள திரும்பவு உசுப்பி விடனுங்களா?

தலைவங்க வீராவேசமா பேசிப்புட்டு, அரசியல நடத்திக்கலா, ஆனா இளைஞங்க....

வேணாங்க. திரும்பவும் அந்த சோகோ நமக்கு வேணாங்க. அவுங்க போராட்டத்தை வாழ்த்தினாப் பரவால்லீங்க, அதையே வலிஞ்சு இழுத்துப்புடாம நின்னுக்குங்க! ■



# காற்றுவாக்கில்... 10

### அதிர்ச்சி தரும் தகவல்

"இலங்கை வானொலித் தமிழ்த் தேசிய சேவையின் ஒலிபரப்பு நேரம் குறைக்கப்பட்டிருப்பது முகாமைத்துவத்தின் முடிவு. இது ஒரு தற்காலிக ஏற்பாடுதான். அடுத்த ஜனவரியிலிருந்து தேசிய சேவை வழமை நிலைக்குத் திரும்பிவிடும்" என்ற கருத்துப்பட தமிழ்த் தேசிய சேவையின் முதல்வர் 'நேயர் கடிதம்' நிகழ்ச்சி ஊடாக அவ்வப்போது கூறிவந்துள்ளார். இது ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு விளக்கம் எனக் கூறமுடியாது.என்றாலும், அவரால் இவ்வாறு சொல்வதைத் தவிர செய்வதற்கு ஒன்றுமில்லை. 'ஜனநாயகம்' என்ற பெயரில் இன்று தனியாட்கள் சிலரின் ஏதேச்சாதிகாரம் தான் மேலோங்கி நிற்கின்றதென்பதே 'காற்றாடி'யின் கருத்தாகும்.

பாரிய நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்கு இந்த நேரக் குறைப்புச் செய்யப்பட்டிருப்பதாக ஏற்கனவே நியாயப் படுத்தப்பட்டுள்ளது. இன்னும் சில மாதங்கள் பொறுத்திருந்தால் தேசிய சேவை இழந்த பொலிவை மீளப் பெற்று, தனித்துவத்துடன் இயங்கும் என ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கும் நேயர்களுக்குப் பேரிடி விழுந்தது போன்ற அதிர்ச்சி தரும் தகவல் ஒன்று 'காற்றாடி'க்குக் கிடைத்திருக்கிறது. கடந்த பல ஆண்டுகளாகத் தேசிய சேவையில் ஒலிபரப்பாகி வந்த பல முக்கிய நிகழ்ச்சிகளின் ஒலிப்பதிவு செய்யப்பட்ட நாடாக்களில் உள்ள நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக இப்பொழுது அழிக்கப்பட்டு வருகின்றனவாம். அழியாத ஆவணங்களாகப் பேணிப்பாது காத்து வைக்கப்பட வேண்டிய அந்த ஒலிப்பதிவு நாடாக்கள் இப்பொழுது புதிய நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவு செய்வதற்குப் பயன்படுத்தப்படுவதால் அவற்றில் ஏற்கனவே பதியப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் கண்மண் தெரியாமல் அழிக்கப்படுகின்றனவாம். இப்பொழுது நிகழ்ச்சிகளுக்குப் பங்களிப்புச் செய்பவர்களுக்கு எதுவித கொடுப்பனவுகளும் இன்றி, இலவசமாகவே அவர்களது பங்களிப்பைப் பெற்று-குறைந்த நேரமானாலும் நிறைந்த பயனளிக்கும் சேவையாகத் தன்னைக் காட்டிக்கொள்ள விளையும் தமிழ்த் தேசிய சேவை, புதிய ஒலிப் பதிவுகளுக்காகப் புதிய ஒலி நாடாக்களை விலைகொடுத்து வாங்க முடியாத-நிதிவசதியற்ற துரதிஷ்ட நிலையில் இருப்பதால் ஆவணப்படுத்தப்படவேண்டிய அதி முக்கியம் வாய்ந்த-என்றுமே தேடக் கிடைக்காத அத்தனை ஒலிப்பதிவு செய்யப்பட்ட நாடாக்களில் உள்ள நிகழ்ச்சிகளை அழித்துவிட்டு, அதனை மீண்டும் பயன்படுத்த வேண்டிய நிலைக்கு வந்திருப்பது மிகவும் வேதனைக்குரியது;

இதனை எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள இயலாது. இந்த வகையில், கடந்த கால சம்பவம் ஒன்று எமது நினைவிற்கு வருவதைத் தடுக்க முடியாது. ஆசியாவில் மிகச் சிறந்த வைப்பகமாகவிருந்த யாழ் நூலகம் அடியோடு எரித்து நாசமாக்கப்பட்டதை எவ்வாறு மறப்பது? சில மாதங்

**காற்றாடி**

களில் தேசிய சேவை வழமைக்குத் திரும்பும் என்று வைத்துக்கொண்டாலும் கூட அங்குள்ள கலைப் பொக்கிஷங்கள் அழித்தொழிக்கப்பட்ட நிலையில் அது 'திடகாத்திரத்துடன்' உயிருடன் செயற்பட முடியுமா? என்பது சந்தேகமே! இந்நிலையில் தனியார் வானொலிகளில் இப்படித் தேசிய சேவையொன்று உண்டா? என்று கூடக் கேட்கத் தலைப்பட்டுவிட்டனராம். "கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை?" என்று சும்மாவா சொன்னார்கள்!

### ஏமாறாதே ஏமாற்றாதே!

இப்பொழுது வானொலி நிலையங்களைப் பொறுத்தவரை தொலைபேசி வசதியுள்ள நேயர்களுக்கு ஒரே அதிஷ்டம்தான்! தொலைபேசி நேயர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள்-வசதிகள்- ஏன்? பரிசுகளும்கூட, தொலைபேசி வசதியற்ற (கடிதங்கள் வாயிலாகக் கலந்துகொள்ளும்) நேயர்களுக்குக் குறைவு என்றுதான் சொல்லவேண்டும். கடந்த ஆண்டு ஒரு தனியார் தமிழ் வானொலி தனது பிறந்தநாளையொட்டித் தொலைபேசி வசதியற்ற நேயர்களுக் காக பெரும் போட்டியொன்றை நடாத்தியது. "ஒரு இலட்சம் ரூபா பரிசு மழையாகப் பொழிந்து நேயர்களை மகிழ்விக்கப் போகிறது" என்று வானொலியிலும் அறிவித்தார்கள்.

வானொலியில் நாள் தோறும் கேட்கப்படும் கேள்விகளுக்கு, சமீபத்திய நாளிதழ் ஒன்றில் வெளியாகும் கூப்பனில் பதிலெழுதி அனுப்ப வேண்டும் என்பது மற்றொரு நிபந்தனை. இந்தப் போட்டி தொலைபேசி வசதியற்ற நேயர்களுக்கு மட்டுமே என்ற போதிலும், தொலைபேசி வசதியுள்ள நேயர்கள் கலந்துகொள்வதற்கும் தடையேதும் இருந்ததாகத் தெரியவில்லை! எவ்வாறாயினும், இந்தப் பரிசு மழைக்கும் மேலாக அந்தத் தனியார் வானொலி, தனது பிறந்த நாளன்று தொலைபேசி நேயர்களுக்குத் தனியாக பரிசு மழையொன்றை அறிவித்தது. அன்றைய தினம் வானொலியில் காலை முதல் மாலை வரை தொடராகக் கேள்விகளைக் கேட்டுத் தொலைபேசியூடாகவே உடனுக்குடன் பதிலளித்த நேயர்களுக்கு அனுசரணை வழங்கிய வர்த்தக நிறுவனங்கள் அள்ளி அள்ளிக்கொடுத்த, பரிசுகள் சென்றடைந்தன. ஆயினும், குறிப்பிட்ட அந்த நாளிதழின் இணை அனுசரணையுடன் நடாத்தப்பட்ட போட்டியில் கலந்துகொண்டு பரிசுகளைப் பெறலாம் என ஆவலுடன் எதிர்பார்த்து விடைகளை எழுதியனுப்பிய நேயர்களை ஏமாற்றிவிட்டதாகவே குற்றச்சாட்டுக் கூறப்படுகின்றது. அதாவது, போட்டியின் முடிவுக்கு என்ன நடந்தது என்பது இன்றுவரை எவருக்கும் தெரியாத பரம ரகசியமாம்! இதில் ஒரு முக்கிய விஷயம் என்னவென்றால், அந்தப் போட்டியை நடாத்திய அந்தத் தனியார் தமிழ் வானொலியின் இடை நிர்வாகத்தினர் சிலர் கடந்த வருடத்தின் இறுதி நாட்களில் அங்கிருந்து வெளியேறிவிட்டார்களாம். ஆனால், அங்கு பிரவேசித்துள்ள 'புதியவர்கள்' இந்தப் போட்டியைப் பற்றிக் கவனத்தில்கொள்ள விரும்பவில்லையாம். அது சரி இடை நிர்வாகம்தான் இப்படியென்றால், உயர் முகாமைத்துவமுமா மௌனம் சாதிக்க வேண்டும்?

இந்தப் பரிசு மழைப் போட்டிக்கான பரிசுக்குரியோர் தெரிவு இவ்வருடம் ஜனவரி மாதம் தைப் பொங்கல் தினத்தன்று நடந்திருக்க வேண்டுமாம்! ■

# ஸ்போர்ட்ஸ்

## ஆசிய மெய்வல்லுநர் போட்டியில்

## இலங்கைக்கு 6 பதக்கங்கள், 6வது இடம்

இலங்கைத் தலைநகர் கொழும்பில் நடைபெற்ற ஆசிய மெய்வல்லுநர் போட்டிகளில் இலங்கை 3 தங்கப் பதக்கங்களையும் ஒரு வெள்ளிப் பதக்கத்தையும், இரண்டு வெண்கலப் பதக்கங்களையும் பெற்று 6வது இடத்தைக் கைப்பற்றிக் கொண்டது.




இலங்கையின் நட்சத்திர வீராங்கனை சுசந்திகா ஜயசிங்க 100 மீற்றர், 200 மீற்றர் போட்டிகளில் தங்கப் பதக்கங்களை வென்றார். மூன்றாவது தங்கப் பதக்கம் ஆண்களுக்கான 400 X 4 அஞ்சல் ஓட்டப் போட்டியில் கிடைத்தது. சிறியானி குலவன்ச 400 மீற்றர் தடைதாண்டி ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கத்தை வென்றார். 4000 மீற்றர் ஓட்டப் போட்டியில் சுகத் திலகரத்ன வெண்கலப் பதக்கம் வென்றார். பெண்களுக்கா 400X4 அஞ்சலோட்டத்தில் வெண்கலப் பதக்கமும் கிடைத்தது.

சீனா 10 தங்கப் பதக்கங்களையும், 6 வெள்ளிப் பதக்கங்களையும், 3 வெண்கலப் பதக்கங்களையும் வென்று முதலாவது இடத்தைத் தனதாக்கிக் கொண்டது. 6 தங்கம், 2 வெள்ளி, 6 வெண்கலம் பெற்று கஸகஸ்தான் இரண்டாவது இடத்தையும், 6 தங்கம், 2 வெள்ளி, 4 வெண்கலப் பதக்கங்களையும் வென்று கட்டார் மூன்றாவது இடத்தையும் பெற்றுக்கொண்டன. ஜப்பான், சவுதி அரேபியா ஆகியவை முறையே 4ம், 5ம் இடங்களைத் தமதாக்கிக் கொண்டன. இம்முறை 49 நாடுகளின் அணிகள் ஆசிய மெய்வல்லுநர் போட்டிகளில் பங்கு பற்றின.

போட்டியை ஏற்பாடு செய்த நாடு இலங்கை என்ற வகையில் இம்முறை இலங்கையின் சார்பில் 100 போட்டியாளர்கள் பங்கு பற்றினார்கள். எனினும் 6 பதக்கங்களே கிடைத்தன.

போட்டி ஏற்பாடுகள் தொடர்பாகக் கடும் விமர்சனம் எழுந்துள்ளது. இலத்திரனியல் உபகரணங்கள் அடிக்கடி பழுதடைந்ததனால் போட்டிகள் பல மணி நேரம் தாமதமடைந்தன. ஏனைய ஏற்பாடுகளிலும் பலத்த திறமையீனங்கள் வெளிப்பட்டதாகக் குறை கூறப்படுகிறது.

இப் போட்டிகளின்போது இலங்கை யணியின் வீர, வீராங்கனைகளுக்கு இடையிலான கருத்து முரண்பாடுகளும், மெய்வல்லுநர் சம்மேளனத்திற்கும் போட்டியாளர்களுக்குமிடையில் நிலவும் பனிப்போரும் தெளிவாக வெளிப்பட்டது. இதன் காரணமாக இலங்கைக்குக் கிடைத்திருக்க வேண்டிய சில பதக்கங்கள் பறிபோயின.

---

இலக்கிய நயம்

## முறுவலித்த முகமே மகிழ்ச்சி தரும் காட்சி

தருவது முழடில்யன்

**தூ**க்கம் வரவில்லையா?" என்று கேட்டுக்கொண்டே விமலன் அருகில் வந்தமர்ந்தாள் நீரஜா.

அவளுக்கு அவன் தேவைப்படுகிறான் என்பது விமலனுக்குத் தெரிந்திருந்தது. இருப்பினும் கையிலிருந்த புத்தகம் அவனைத் திரும்பவிடாமல் இழுத்துப் பிடித்து வைத்திருந்தது.

படிப்பதைக் குழப்புகிறாள் என்று சினமும் சற்றே துளிர்த்தது.

பதில் எதுவும் சொல்லாமல் அந்த அத்தியாயத்தையேனும் வாசித்து முடித்துவிட வேண்டும் என்பதில் மும்முரமாயிருந்தான்.

"சாமம் தாண்டிவிட்டது. இன்னுமா படித்துக் கொண்டிருப்பீர்கள்?" என்று அவன் பிடரி அருகே முணுமுணுத்தாள்.

அவன் முதுகோடு சாய்ந்து தோளுக்கு மேலால் அவளும் புத்தகத்தை மேய்ந்தாள்.

மல்லிகை வாசனை விமலனைத் துளைத்தது.

அவன் கண்கள் புத்தக வரிகளில் தடுமாறின.

நீரஜா வலது கையால் அவன் இடுப்பைச் சுற்றி வளைத்தாள்.

மலர்ப்பொதி இரண்டு அவன் முதுகில் அழுத்தியது.

படிப்பைக் குழப்புகிறாள் என்று அவன் உள்ளம் கொண்ட சினத்தை மெய், செவி, நாசி என்ற மூன்று பொறிகளாலும் பெற்றுக்கொண்ட செய்திகள் தணித்தன.

"இனிப் போதும் படிப்பு" என்று இடது கையால் புத்தகத்தை மூடியபடி அவன் காதிற்குள் கிசுகிசுத்தாள் நீரஜா.

புலன்களால் தோற்கடிக்கப்பட்டவனாகப் புத்தகத்திலிருந்து பரிதாபமாகத் தலையைத் திருப்பிய விமலன், தன் பின்புறம் சாய்ந்திருந்த மென்மைச் சுமையைக் கைகளில் வீழ்த்தினான்.

சற்றே இடப்புறம் அசைந்து அவளைத் தன் மடியில் சரித்து வீழ்த்தியவன் வலது கையால் அவள் தலையின் பின்புறத்தைத் தாங்கியபடி கண்களால் அவளை முழுக்க அளந்தான்.


வெளுத்திருந்தது அவள் முகம்.

விளக்கின் ஒளி பட்டுத் தெறித்துப் பளீரெனக் காட்டியது.

சுருண்டு பெருங் குவியலாகப் பின்புறம் கிடந்தது கூந்தல். அந்தக் கருமையில் அவள் முகம் மேலும் பளீரிட்டது. மல்லிகையைப் பந்தாகச் சூடியிருந்தாள்.

அவசர அவசரமாகத் தன் வேலைகளை முடித்து வந்திருக்கிறாள். பிறையாக வளைந்து ஒளி வீசிக்கிடந்த நெற்றியில் சிறிய சிறிய குறுணி முத்துக்களாக வியர்வைத் துளிகள் தெரிந்தன.

நுதலின் கீழே புருவங்களும், கண்ணிமையோரங்களும் கருமை அப்பிக் கிடந்தன. புகை உண்டது போல் கறுப்பாய் விரிந்து கிடந்த அந்தக் கண்களின் நீளம் பார்த்து அதிசயித்தான். காதுகளை மூடியிருந்த கூந்தல் கறுப்புடன் இணைந்து கிடந்தன அந்தக் கரிய



சமுத்திரங்கள்.

மெல்லக் குனிந்து நெற்றியில் வகிடு ஆரம்பிக்கும் இடத்தில் முத்தமிட்டான் விமலன்.

கண்களை மூடிச் சிறு முனகலுடன் சற்றே நெளிந்தாள் நீரஜா.

இமை மடல்களின் மேலும் இதழ்களைப் பதித்தான்.

இதழ்களை அவள் இமைகளிலிருந்து மீட்காமலே "மல்லிகையைக் கூந்தலில் மட்டும்தானே சூடுகிறாய்... உண்பதில்லையே...?" என்றான்.

"ம்..." என்ற ஒற்றை முனகலோடு உடம்பை அவன் கரங்களுக்குள்ளேயே மெல்லப் புரட்டினாள்.

தன் கரங்களுக்குள் அசைந்த அந்த மென்மைச் சுமை அவனை நிலைகுலைய வைத்தது.

"மல்லிகையை யாராவது சாப்பிடுவார்களா?" என்று சிணுங்கினாள்.

"இதோ நான் சாப்பிடுவது வேறென்ன?" என்று அவள் கன்னத்தைக் கடித்தான். தொடர்ந்து,

"உன் இரத்தத்திலும் மல்லிகை வாசனைதான் ஓடுகிறது" என்றான் அவள் கழுத்துப் பகுதியை முகர்ந்தபடி.

மெல்ல அவனை விலக்கிவிட்டு எழுந்துகொண்ட நீரஜா, "ம்... எழுந்திருங்கள். வெளியே குளிருக்குள் இருக்க வேண்டாம்" என்றாள்.

சொல்லியபடியே சேலைத் தலைப்பால் நெற்றி வியர்வையைத் துடைத்துக்கொண்டாள்.

முந்தானையைக் கையில் பிடித்தபடி ஒயிலாக வளைந்து நின்ற அந்தச் சிலையைப் பார்த்தான்.

முன்புற எழுச்சிகளையும் அதேயளவிலான பின்புற எழுச்சிகளையும் நெளிந்த ஒரு நூல் துண்டால் இணைத்துவிடுகிற வித்தையைக் கோயிற் சிலைகள் செய்யும் சிற்பிகளிடம்தான் கண்டிருக்கிறான் விமலன்.

"என்ன பார்க்கிறீர்கள்" என்று மெல்ல முறுவலித்தாள் நீரஜா.

"அந்த நூல்..." என்று அவள் இடையைப் பார்த்தபடி குழறியவன், அங்கிருந்து பார்வையை அகற்றி முகத்தை நோக்கினான். அந்தப் பெரிய புகைக் கண்களுக்குள் சிக்குண்டான்.

சிறு சிறு வெள்ளி முட்களாக அவளிரு இதழ்களின் நடுவே வெளிச்சம் காட்டிய பற்களைக் கண்டான். நாணச் சிரிப்பில் ஒளிர்ந்த அவள் முகம் அவனை மூச்சுத் திணற வைத்தது.

'விருந்து தர விருப்பத்தோடு அழைக்கின்ற இவள் தோற்றத்திற்கு இணையாகச் சொல்ல உலகில் எந்த மகிழ்ச்சிதான் உண்டு' எனத் தனக்குள் கேட்டுக்கொண்டான்.

இதோ முறுவலித்து நிற்கின்ற இவள் முகத்தைத் தவிர வேறு மகிழ்ச்சி தருங் காட்சியை என் வாழ்வில் நான் பார்த்ததில்லை என்று நினைத்தான்.

இந்த மகிழ்ச்சியுடனேயே விருந்தையும் ஏற்றுக்கொள்ள எழுந்தான் விமலன்.

விருந்தைக் கைகளில் ஏந்தி அறைக்குள் சென்றான். விளக்கு வெட்கத்துடன் கண்களை மூடியது.

புகையுண்டு அமர்த்த
கண்ணள் தகைபெறப்
பிறைநுதற் பொறித்த
சிறு நுண் பல்வியர்
அம்துகில் தலையிற்
றுடையினள் நப்புலந்
தட்டிலோளே அம்மாவரிவை
எமக்கே வருகதில்
விருந்தே சிறப்ப ஆன்று
சிறியமுள் ளெயிறுதோன்ற
முறுவல் கொண்ட
முகங்காண் கம்மே.

(நற்றிணை: 120: 6-12)

---

## சிந்தியா

### பதில்கள்

**★ பதவிக்கு வந்து ஒரு வருடம் ஆகப் போகிறது. பொருட்கள் விலை குறையவில்லை. இனப் பிரச்சனைக்கும் தீர்வு வைக்கவில்லை. இன்னமும் முன்னைய ஆட்சியைக் குறை கூறுவதும் நிற்கவில்லை. பிரதமர் என்னதான் சாதித்திருக்கிறார்?**

இரா.வைகுந்தன், திருகோணமலை.

*நெடுங்காலத்திற்குப் பிறகு முதன் முதலில் இலங்கைத் தலைவர் ஒருவர் அமெரிக்க ஜனாதிபதியைச் சந்தித்திருக்கிறார். இராஜசிங்கனுக்குப் பிறகு மிமோரே கிராமத்திற்கு விஜயம் செய்த முதல் தலைவர் இன்றைய பிரதமர்தான். இதெல்லாம் உங்களுக்குச் சாதனைகளாகத் தெரியவில்லை என்றால், நிச்சயம் நீங்கள் சமாதானத்தைக் குழப்பும் கூட்டத்தைச் சேர்ந்தவராகத்தான் இருக்க வேண்டும்.*

**★ 'ராஜா' அஜித்திற்குத் தோல்விப் படமா?**

ஆர்.எப். நஸ்லியா, நிககொல்ல.

*அப்படித்தானிருக்க வேண்டும். இனித் தன் படங்களில் காதல் கத்தரிக்காய் என்று மினக்கெடப் போவதில்லை என்று சொல்லியிருக்கிறாரே அதை விடுங்கள், அகன்ற கண்களில் அச்சமும், உதட்டுச் சுழிப்பில் சொர்க்கமும் காட்டி அசத்தியிருக்கும் அந்தப் புதுமுக கன்னடத்துப் பைங்கிளி பற்றிக் கேள்வி கேட்க மாட்டீர்கள்..ள்...ளா?*

**★ சிந்தியா, இலங்கை ஜனாதிபதிக்கும் தமிழக முதல்வருக்கும் உள்ள ஒற்றுமைகளைச் சொல்ல முடியுமா?**

ஆர்.கே.பிரபாகரன், திருகோணமலை.

*இருவரும் பெண்கள். பதவிக்கு வருமுன்னர் நடிப்பில் ஈடுபட்டிருக்கிறார்கள். உடன் பிறந்தோ, உடன் பிறவாமலோ இருக்கும் சகோதர உறவால் அபகீர்த்தியடைகிறார்கள். இருவராலும் தான் நமக்குச் சமாதானம் வராமலிருக்கிறது என்று நம்பிக் கொடும்பாவி கொளுத்துமளவிற்கு நம்மவர்களின் முட்டாள்தனம் வெளிப்படக் காரணமாயிருந்திருக்கிறார்கள்.*

**★ சுசந்திகா எப்படி?**

பி.எம்.எம். அஸ்மி, பள்ளிமுல்லை.

*அவரை அதிகம் பேச வைக்காமல், அவருக்கு நாம் தாராளமாகத் தரும் மரியாதை, கௌரவங்களில்தான் இந் நாட்டில் இன்னும் பல சுசந்திகாக்களையும், முரளிதரன்களையும் உருவாக்க முடியும் என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து செயற்பட வேண்டும்.*



**★ சிந்தியா! பூமிகா என்னவானார்?**

எஸ்.சுவர்ணன், அக்கரைப்பற்று.

*காணாமல் போனார்.*

**★ தலவாக்கலை 'மேல் கொத்மலை' நீர் மின் உற்பத்தித் திட்டத்தில் மலையகத் தலைவர்களிடம் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடு எதனைக் குறிக்கோளாகக் கொண்டது?**

குணா, போகாவத்தை.

*அந்தப் பகுதி மக்களின் பிரதேசம் பறிபோகும் கவலை எல்லாம், திட்டத்தால் தத்தமக்குக் கிடைக்கும் இலாபத்தின் பங்கை எண்ணிக் கரைந்துவிடுவதில்!*

**★ அமெரிக்கா பயங்கரவாதத்திற்கு எதிரான தனது போக்கைப் பாலஸ்தீன அமைப்புக்களிடம் மட்டும் காட்டத் தயங்குவது ஏன்?**

கி.ஜெயக்குமார், மட்டுவில் கிழக்கு.

*பயங்கரவாதம் என்பது அவ்வளவு மேலோட்டமான விளக்கத்திற்குரியதல்ல.*

*வலிமையானவர்களின் நாசூக்கான நசுக்குதல்களிலிருந்து திமிறி எழுவதற்காக வலிமை குறைந்தவர்கள் பயங்கரவாதத்தைக் கைக்கொள்கிறார்கள். இவர்களின் பயங்கரவாதத்தை அடக்குவதற்கு வலியவர்கள் மேற்கொள்ளும் பயங்கரவாதத்தை உலக பாதுகாப்பிற்காக என்று காட்டிக்கொண்டு செய்ய முடிகிறது. இவற்றுள் சரியான பயங்கரவாதத்தை ஆதரிப்பது என்பதெல்லாம் கோழியா? முட்டையா? கதையாகத்தான் முடியும். அல்லது எதிர்க்க முடிந்த பயங்கரவாதத்தை எதிர்ப்பது என்ற நியாய(?)ப் போக்கும் மற்றொரு பயங்கரவாதத்தை மிகத் தீவிரமாக வளர்த்துவிடுவதாகும்.*

*பயங்கரவாதத்தின் முளையை எங்கு கண்டாலும் எதிர்ப்பதுதான் மனுக்குலத்தில் அக்கறையுள்ளவர்களின் கடமை.*

**★ தொலைக்காட்சி நாடகங்கள் பார்ப்பதுண்டா?**

த.கமல், கல்முனை-02.

*இந்தியத் தமிழ் நாடகங்களைத்தானே கேட்கிறீர்கள்? தமிழ்ப் படங்களை விட அதிகமாகப் பொய் சொல்கின்றன இந்த நாடகங்கள். முன்னுக்குப் பின் முரணாகவும் மூடத்தனமாகவும் பேசிக்கொண்டிருக்கும் பாத்திரங்களையும் சம்பவங்களையும் தொடர்ந்து பார்த்துக்கொண்டு வந்தால் மிக விரைவில் தொலைக்காட்சிப் பெட்டியை உடைத்துவிடுவேனோ என்று பயமாக இருக்கிறது.*

**★ "பொம்பளைங்க காதலைத்தான் நம்பிவிடாதே..." 'உன்னை நினைத்து'ப் படப் பாடல் எப்படி? அதில் வரும் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. உங்களுக்கு எப்படி?**

எ.ஃப்.சல்மா, கண்டி.

*இது கொஞ்சம் பச்சையாகச் சொல்கிறது அவ்வளவுதான். மற்றப்படி எல்லாப் பாடல்களுக்கும் பின்னால் இந்தக் கருத்துக்களே இருக்கின்றன என்பதுதான் உண்மை.*

**★ உங்களுக்குப் பிடித்த பொய் ஒன்று சொல்லுங்களேன்?**

எல்.வசந்தா, மட்டக்களப்பு.

*செப்டம்பரில் தாய்லாந்துப் பேச்சுவார்த்தை மூலம் இடைக்கால நிர்வாகம் கிடைத்து, அடுத்த இரண்டு வருடங்களுக்குள் நிரந்தரத் தீர்வு கிடைக்கப் போகிறது.*

# மன்னாதி மன்னன்

117

இராஜகுமாரன்

ஆரிய நாட்டில் வாழ்ந்து வந்த தாசி கமலரேகையின் பேரழகில் மயங்கி அவளுடன் கூடிவாழ ஆசைப்பட்டுச் செல்லும் ஆண்கள், அடுத்த நாளே பிணமாகி விடும் விபரீதத்தை வீரியன் என்பவன் மூலம் அறிந்த மன்னன் விக்கிரமாதித்தன் கமலரேகையுடன் அன்றிரவைக் கழிக்க அவளுடன் சென்றார்.

கமலரேகை அளித்த உணவுப் பண்டங்களை அவர் தொட்டும் பார்க்கவில்லை. கட்டிலில் ஏறிப் படுத்துக் கொண்டார். அவள் இனிமையாகப் பாடினாள். அப் பாடலைக் கேட்டுத் தூங்கி விட்டவர் போல் மன்னர் பாசாங்கு செய்தார். பாடி முடித்ததும் கமலரேகை ஒரு வகை மயக்க முற்றவள் போல் படுத்துத் தூங்கி விட்டாள்.

மன்னர் மெல்ல எழுந்து அவளருகில் தான் படுத்திருந்த இடத்தில் தலையணைகளை வைத்துப் போர்வையால் மூடிவிட்டு மறைவான ஓரிடத்தில் பதுங்கியவாறு என்ன நடைபெறுகிறது என்று பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது கமலரேகையின் மூக்கினுள்ளிருந்து தங்க நிறத்தில் ஒரு சிறிய நாகம் வெளியே வந்து, அவளருகில் வைக்கப்பட்டிருந்த தலையணையில் கொட்டியது.

மன்னர் விக்கிரமாதித்தன் தாமதம் செய்யாமல் தன்னுடைய மந்திரவாளை எடுத்து அந்த நாகத்தை வெட்டினார். இந்தச் சலசலப்பில் கமலரேகை கண் விழித்துப் பார்த்தாள். அவளருகில் நாகம் துண்டாடப்பட்டு இரத்தம் பெருகக் கிடந்ததைக் கண்டாள். அது காலவரை அவளை ஆட்டிப் படைத்த பெரும் பழிக்கு ஆளாக்கிய நாகம் அழிக்கப்பட்டு விட்டமையினால் பெருமகிழ்ச்சியடைந்தாள். மன்னரின் கால்களில் விழுந்து, "என் மீது இதுகால வரை ஏற்பட்டு வந்த பழியையும் கறையையும் நீக்கிய தாங்களே என் தெய்வம்" என்று நன்றிப் பெருக்கால் தளதளத்த குரலில் கூறினாள்.

அன்றிரவை கமலரேகையுடன் இன்பமாகக் களித்த மன்னர் விக்கிரமாதித்தன் அடுத்த நாட்காலை உயிரற்ற சடலமாகக் கிடப்பார் என்று எண்ணி பிரேதத்தை அப்புறப்படுத்தும் பணிக்காக வந்த வேலை ஆட்கள், அவர் உயிருடன் இருப்பது கண்டு அதிசயித்தனர். தகவலறிந்த ஆரிய நாட்டவர்கள் பலரும் வந்து மன்னருக்குத் தங்கள் நன்றியறிதலைத் தெரிவித்தனர். இத்தகைய செயலைச் செய்து அவ்வூரவர்களைக் காப்பாற்றியவர் விக்கிரமாதித்த மன்னரே என்பதை அறிந்து அவர்களுடைய மகிழ்ச்சி பலமடங்கானது.

சற்று நேரத்தில் எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்டு மன்னர் உஜ்ஜயினி மாகாளிபட்டணம் போய்ச் சேர்ந்தார்.

இந்தக் கதையை பதினாறாம் படிக்கட்டுக்குக் காவலாக நின்றிருந்த கிருபா பரிபூரணவல்லிப் பதுமை போஜ மன்னரிடம் கூறி முடிக்கும் போது பொழுது சாய்ந்து இரவாகிவிட்டது.

"இத்தகைய அரும் பண்புகள் நிறைந்த எமது மாமன்னரிடமிருந்த சிறப்பம்சங்கள் ஏதாவது உம்மிடம் இருக்குமானால் இவ்வரியணையில் தாராளமாக நீர் போய் ஏறி அமரலாம்." என்று அப் பதுமை கதைக்கு முற்றுப் புள்ளி வைத்தது. போஜ மன்னரும் தனது அரண்மனை திரும்பி ஓய்வெடுத்தார்.

அடுத்த நாளான பதினேழாம் நாள் காலையில் துயிலெழுந்த போஜமன்னர் தனது காலைக் கடன்களையெல்லாம் முடித்துவிட்டு, வழக்கம் போல் பரிவாரங்கள் சூழ அரியணை வைக்கப்பட்டிருக்கும் மண்டபத்தை வந்தடைந்தார். அந்தணர்கள் அரியணைக்கான பூசைகளை முடித்தனர். மலர்களை இரு கைகளாலும் எடுத்து அரியணை மீது தூவிய போஜ மன்னர், பதினாறு படிகளையும் கடந்து பதினேழாவது படியில் காலடி எடுத்து வைத்தார். அந்தப் படிக்குக் காவலாக இருந்த கருணாகர வல்லிப் பதுமை தனது கையை நீட்டி மன்னரைத் தடுத்தது.

"போஜ மன்னரே! எமது மாமன்னர் விக்கிரமாதித்த பூபதி இதே அரியணையில் அமர்ந்து செம்மையாக ஆட்சி புரிந்தார். அவருடைய அருமை பெருமைகளையெல்லாம் எனது சகோதரிகளான பதினாறு பதுமைகளும் கூறி விளக்கியிருந்தனர். அம் மாமன்னருடைய அரும் பெரும் செயல்களை விளக்கும் மற்றுமொரு கதையை நான் கூறப் போகிறேன். அதனையும் கேட்ட பின்னர் உமது படியேற்றத்தைத் தொடரலாம்" என்று கூறிய பின்னர் கதையைக் கூறத் தொடங்கியது.

## மகரபுரி மர்மம்

மன்னர் விக்கிரமாதித்தன் வழக்கம் போல் தனது தகவல் சேகரிக்கும் தூதர்கள் நால்வரை அழைத்து நான்கு திசைகளுக்கும் திக்விஜயம் செய்து, அங்கெல்லாம் நடைபெறும் அதிசயங்களைத் திரட்டி வருமாறு கேட்டுக் கொண்டார். தூதர்களும் சென்றார்கள். அவர்களில் வட திசைக்குச் சென்ற தூதன் ஏனையோரை விட முன்னதாகவே வந்து சேர்ந்து விட்டான். அவன் கூறிய விவரங்களும் அதிசயமாகவே இருந்தது.

"வடக்கே உள்ள மகரபுரி என்ற நாட்டை சோமப்பிரதாபன் ஆண்டு வருகிறான். அந்த அரசன் தினமும் நகர்வலம் வருவான். மன்னன் அரண்மனை திரும்பும் வேளையில் நகர வாயிலில் நூறு தட்டுக்களில் பொன்னும், நூறு தட்டுக்களில் முத்தும், நூறு தட்டுக்களில் பவளமும் மற்றும் நூறு பானைகளில் சோறும் வைத்து ஆரத்தி எடுத்து மன்னரை வரவேற்கிறார்கள். மன்னர் அரண்மனை சென்றதும் அத்தனை பொருட்களையும் நகரின் கோடியிலுள்ள ஓர் ஆலமரத்தின் கீழ் கொட்டி விடுகிறார்கள். பொருட்களைக் கொண்டு போய்க் கொட்டுபவர்கள் திரும்பியதும் மரத்தின் மேல் மறைந்திருக்கும் பூதங்கள் இறங்கி வந்து பொருட்கள் அனைத்தையும் தங்களுடன் எடுத்துக் கொண்டு போய்விடுகின்றன" என்று தான் அறிந்து வந்த அதிசயத்தை மன்னர் விக்கிரமாதித்தனிடம் கூறினான்.

அடுத்த நாள் மன்னர் விக்கிரமாதித்தன் வேதாளத்தின் துணையுடன் மகரபுரியைச் சென்றடைந்தார். மாலையில் குறிப்பிட்ட ஆலமரத்துக்கு அணித்தாக ஒரு மறைவிடத்தில் இருந்து கொண்டார். காவலன் வந்து கூறியது போல் மன்னரை வரவேற்று ஆரத்தி எடுக்கும் வைபவம் முடித்து குறிப்பிட்ட பொருட்களைத் தட்டுக்களில் ஏந்திய வண்ணம் பல பெண்கள் வருவதையும் வண்டிகளில் கடாரங்களில் சோறு கொண்டு வரப்பட்டதையும் அவதானித்தார். அத்தனை பொருட்களையும் மரத்தின் அடியில் வைத்துவிட்டு அனைவரும் சென்றபின் மரத்திலிருந்து பல பூதங்கள் வந்து அப் பொருட்களை எடுத்துக் கொண்டு மீண்டும் மரத்தின் மேலேறி மறைந்தன.

பூதங்கள் மறைந்ததும் தன்னை அப் பூதங்கள் காணாமல் உரு மறைவு செய்து கொண்டு மரத்தின் மீது மன்னர் ஏறினார். மரத்தின் மையப் பகுதியில் ஒரு பெரும் போறை இருப்பதைக் கண்டு அதனுள் இறங்கினார். அங்கே அவர் கண்ட காட்சி அவரைப் பிரமிக்க வைத்தது.

(மன்னன் வருவான்...)

# காதில பூ கந்தசாமி

நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை *-காதில பூ கந்தசாமி-*

தான் ஏதோ அரசியலில நடிக்கிறதா ஜனாதிபதி சொல்லியிருக்கிறாவே, எங்கட தமிழ் அரசியல்வாதிகளவிட அவவால நடிக்க ஏலுமோ கேக்கிறன். கூட்டமைப்போட சம்பந்தப்பட்ட தலைவரொருவர் தன்ர மனசாட்சியோட பேசினதக் கொஞ்சம் கற்பனையில கேளுங்கோ தெரியும்.

**மனசாட்சி:** எப்பிடியப்பா சமாளித்தீர்? ஒரே சிக்கல், இந்தமுறை நீ அம்போவெண்டு நினைச்சன். சிவசிதம்பரத்தாற்ற வெற்றிடத்துக்கு தன்ர ஆளப் போடச்சொல்லி சங்கரியார் கத்த, மற்றக் கூட்டுக் கட்சிகள் தங்கட ஆக்களத்தான் போட வேணுமெண்டு நிக்க நீர் எப்பிடி எல்லாரையும் ஓரங்கட்டிப்போட்டு உம்மட ஆளப் போட்டீர்?

**சம்பந்தமானவர்:** ஹஹஹஹா....! எல்லாம் அரசியல் சூட்சுமம்தான். மற்றக் கட்சிகள தேர்தல் உடன்பாட்டிலயே நொக்கவுட் பண்ணிட்டன். தேர்தலில எப்பிடியும் கூட்டாச் சேர்ந்தால் சரியெண்டு நிண்டவைக்கு விஷயம் விளங்காமலே, போனஸ் சீற்ர எங்கடதா. மடக்கிப் போட்டன்.

**மன:** முந்தி அமிரண்ணையும் ஈ.பியோட இதே ட்ரிக்கப் பாவிச்சுத்தானே தோத்தாலும் போனஸ் சீற்றப் பிடிச்சு பார்லிமன்டுக்குள்ள நுழைஞ்சவர்? அதுசரி, சங்கரியாரைச் சமாளிச்ச விதத்தச் சொல்லேல்ல...?

**சம்:** முதலில, சிவசிதம்பரத்தார போனஸ் சீற்றுக்குப் போடேக்கயே ஆள் கனகாலம் தங்காதெண்டு தெரிஞ்சு வன்னித் தம்பிமாரிட்ட சாடமாடையா அவற்ர வெற்றிடம் வந்தால் என்ர ஆளப் போடுறதுதான் நல்லமெண்டு கதைவிட்டு வைச்சிட்டன்.

**மன:** பிறகு...?

**சம்:** ஜெயலலிதா புலித் தலைவரைப் பிடிக்கிற தீர்மானம் நிறைவேற்றின உடன எங்ட ஆக்கள் அவவுக்கெதிரா கொடும்பாவி எரிக்க, சங்கரியார் வாய வைச்சிருக்காமல் வலியப் போய் வம்பில வீழுவாரெண்டு பாத்திருந்தன். அப்பிடியே அந்தாள் தன்ர தமிழ்நாட்டு நலன்களுக்க மோசம் வந்திடப்போகுதெண்டு பயந்து 'அம்மையார் சன்னதம் கொண்டிட்டால் ஆபத்து, நாங்கள் யோசிச்சு நடக்க வேணுமெண்டு' யோசிக்காமலே அறிக்கை விட்டுட்டார்....

**மன:** வன்னியாரிட்ட முட்டி விட்டிட்டியளெண்டிறியள்.

**சம்:** அதேதான்! உவரே உப்பிடியெண்டால், உவர் தாற ஆக்கள் எப்பிடியிருப்பினமெண்டு அவை யோசிப்பினம்தானே. அதோட சேத்து நானும் விஷயத்தக் கடுமையாக்கிற கணக்கா ஒரு அறிக்கை விட்டன், உப்பிடிக் கண்டபடி ஆளாளுக்கு அறிக்கை விடக் கூடாது. கட்சியின்ர நிலைப்பாட்ட செயலாளர் நான்தான் உத்தியோக பூர்வமா வெளிவிட வேணும். மற்றவை பேசாமல் இருக்கட்டுமெண்டு.

**மன:** நெத்தியடிதான்! பிறகு...?

**சம்:** இதே நேரத்தில சிவத்தாற்ர கூட்டணித் தலைமைப் பதவி சங்கரிக்கு கிடைக்காமல் போயிடுமெண்டொரு மிரட்டலையும் குடுத்தன்.

**மன:** எப்பிடி?

**சம்:** மற்றப் பக்கத்தால மாவையக் கிளப்பி விட்டன், சங்கரியாரால தனக்குப் பெரும் சங்கடமாயிருக்கெண்டு சத்தம் போடச் சொல்லி....

**மன:** அட, அதப் பாவிச்சு என்ன செய்தீர்?

**சம்:** அத ட்ரம் கார்டா வைச்சுத்தான் பேரம் பேசினன். இப்ப உமக்குக் கூட்டணித் தலைமைப் பதவியும் கிடைக்காமல் போகப்போகுது. பேசாமல் அதை எடுத்துக் கொண்டு கப்சிப்பாயிரும், போனஸ் சீற்ற என்ர ஆளுக்கு விட்டிடுமெண்டு.

**மன:** விட்டிட்டாரே?

**சம்:** விடாமல்..? பிறகும் விட்டனே நான்?

**மன:** என்னவாம் பிறகு?

**சம்:** நானே றிசைன் பண்ணி எனக்கு அடுத்ததா இருந்த என்ர ஆள எம்பியாக்கிப்போட்டு நான் போனஸ் சீற்றில எம்பியாயிட்டன்.

**மன:** அதில என்ன விஷயமிருக்கு?

**சம்:** அதிலதான் விஷயமிருக்கு. ஒருபக்கம் லிஸ்டில எனக்கு அடுத்ததாயிருக்கிற என்ர ஆள் எம்பியாவாறத நிப்பாட்ட யாருக்கும் ஏலாது. மற்றது நான் போனஸ் ஸீட்டில எம்பியானால் சீனியரெண்ட கோதாவில மற்றக் கட்சிக்காரருக்கு அதத் தங்களுக்குத் தரச் சொல்லிக் கேக்கவும் ஏலாது. அதோட நானேதான் கூட்டின்ர செயலாளராவும் இருக்கிறதால சட்டமும் என்ர கையிலதான். எல்லாமே எனக்குள்ள ஒரே மடக்கம். எப்பிடி வேலை?

**மன:** திறம் திறம். நீர் திறமைசாலிதான். ஆனால் இப்ப வைக்கோ விஷயத்தில மாட்டுப்பட்டு இந்தியாவைப் பகைச்சிட்டீரே..?

**சம்:** கண்ணியில சிக்காதையா கானாங்குருவி... எண்டு கேள்விப்பட்டதில்லையே நீர். நானாவது மாட்டுப் படுறதாவது! வைக்கோவை விடுவிக்கிற கூட்டம் பொது மக்களின்ர பேரில நடத்தப்பட்டது கண்டீரோ. அதுக்குப் போகாட்டால் வன்னியாருக்குச் சந்தேகம் தட்டுமெண்டதால கூட்டத்துக்குப் போனன். என்ன பேசினனானெண்டு கேட்டீரோ? ஏதும் இந்தியாவை, அல்லது தமிழ்நாட்டு அரசாங்கத்தைக் கண்டிக்கிற சொல்லுப் பாவிச்சனானே. வலு பக்குவமா அளந்துதான் பேசினனான்.

**மன:** பிறகு இந்தியன் எம்பஸியில போய்க் கண்டனம் தெரிவிச்சது?

**சம்:** கண்டனமெண்டு பேப்பருக்கு குடுத்தனான். ஆனால், உள்ளுக்குப்போய், நானா ஒண்டும் செய்யேல்ல, நிர்ப்பந்தத்தால செய்யிறமெண்டு சொல்லி இந்திய உதவி எங்களுக்கு எப்பவும் தேவையெண்டுதானே கேட்டனான்.

**மன:** அப்ப ஜனாதிபதியின்ர கூட்டத்துக்குப் போய் அவவப் புகழ்திருக்கிறீர்..?

**சம்:** இங்கால புலிகளின்ர கூட்டத்துக்குப்போய் தமிழ்ச் செல்வனையும் புகழ்ந்திட்டுத்தானே வந்திருக்கிறன். நான்தானே அவைக்கும் ஐடியாக் குடுக்கிறது.

**மன:** ஐடியாவோ, எல்லாருக்கும் அல்வாவெல்லே குடுக்கிறீர். தமிழ்ச் சனத்துக்கு...?

**சம்:** அவைக்கு குடுக்கிறதில்ல, அவயிட்டயிருந்து எடுக்கிறதுக்குத்தான் வழி தேடுறன்.

**மன:** நிர்க்கதியா நிக்குது சனம். அவையிட்டயிருந்து என்னத்த வாங்கக்கிடக்குது உமக்கு?

**சம்:** வாக்கு.

**மன:** மனசாட்சியிருக்கிறவை வாக்குப் போடுவினமே உமக்கு?

**சம்:** மனசாட்சி யாருக்கு வேணும்?

**மன:** என்ன, அப்ப என்ர கதி!

**சம்:** அதோ கதிதான். வாசல் திறந்திருக்கு. வந்த வழியாலயே திரும்பிப் போய் எங்கேனும் ஒரு இழிச்சவாயன் கிடைச்சால் மனசுக்க புரிந்துகொள்ளும் போம்.

யாவும் கலப்படமற்ற கற்பனை

# இந்தவாரம் உங்கள் பலன்

18.08.2002 தொடங்கி 24.08.2002வரை

சோதிட மாமணி தில்லை

## கிரக நிலை

கர்க்கடகம் - சூரியன், செவ்வாய், வியாழன், மிதுனம் - சனி, கன்னி-வெள்ளி, விருட்சிகம்-கேது, கர்க்கடகம்-வியாழன், இடபம்- இராகு, *சந்திரன் இடபம், மிதுனம், கர்க்கடகம், சிங்கம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.*

### மேடம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) முயற்சிகள் பலிதம். பெரியோர் உதவி, உறவினர் பகை. வார இறுதியில் செலவு மிகுதியுண்டு. உத்தியோகத்தர்கள் மறைமுக எதிர்ப்புக்களால் சிரமமடைவர். மாணவர்களுக்கு கல்வியில் உயர்வுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபமடைவர்.

அதிஸ்ட நாள்: வியாழன்.

அதிஸ்ட இல.: 2.

### இடபம்

(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) தொழிலில் சிறிது மந்தநிலை தோன்றும். பணவரவில் தடை. வீண் பிரயாணம். தேகாரோக்கியக் குறைவு உண்டு. உத்தியோகத்தில் வார இறுதி நன்மைகளைத் தரும். மாணவர்களுக்கு கல்விச் சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.

அதிஸ்ட நாள்: திங்கள்.

அதிஸ்ட இல: 1.

### மிதுனம்

(மிருகசீரிடத்துப் பின்னரை திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்) தொழில் கஷ்டம், பணவரவு மந்தம். பெரியோர் நட்பு. விருந்தோம்பல் உண்டு. உத்தியோகத்தில் வீண் பிரச்சனைகள் சிலருக்கு ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் மந்த நிலை உருவாகும். விவசாயிகள், வியாபாரிகள் முதலீடுகளில் கூடிய கவனமெடுப்பது நல்லது.

அதிஸ்ட நாள்: வெள்ளி,

அதிஸ்ட இல.: 6.

### கர்க்கடகம்

(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) தொழில் முயற்சி பலிதம். பணக் கஷ்டம் நீங்கும். குடும்பத்தில் வீண் செலவு. பெரியோர் உதவியுண்டாகும். உத்தியோகத்தில் இருந்து வந்த தொல்லைகள் மறையும். மாணவர்களுக்கு கல்வியில் மாற்றம் ஏற்படும். விவசாயிகள், வியாபாரிகள் எதையும் திட்டமிட்டுச் செய்வது நன்மைதரும்.

அதிஸ்ட நாள்: புதன்.

அதிஸ்ட இல.: 3.

### சிங்கம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) காரியானுகூலம். செய்தொழில் விருத்தி. பணவரவு. உறவினரால் கஷ்டம் ஏற்படும். உத்தியோகத்தில் உள்ளோர் மேலதிகாரிகளை பகைத்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் மந்தநிலை தோன்றும். விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபம் பெறுவர்.

அதிஸ்ட நாள்: செவ்வாய்.

அதிஸ்ட இல.: 7.

### கன்னி

(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) மனக்கிலேசம் நீங்கும். புதிய முயற்சிகளில் வெற்றியுண்டாகும். பணவரவு சுமாராக அமையும் .உத்தியோகத்தில் உள்ளோர் உயர்வடைவர். மாணவர்களுக்கு கல்விச் சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் எதிர்பார்த்த இலாப மடைவர்.

அதிஸ்ட நாள்: வெள்ளி.

அதிஸ்ட இல.: 4.

### துலாம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்) தொழில் மறைமுக எதிர்ப்புக்கள் தோன்றும். வீண்செலவுக்கு இடமுண்டு. பொருள் வரவு சுமாராக அமையும். மாணவர்களுக்கு கல்வியில் உயர்வளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.

அதிஸ்ட நாள்: செவ்வாய்.

அதிஸ்ட இல.: 7.

### விருட்சிகம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) தொழில் உயர்வும் மனமகிழ்ச்சியும் ஏற்படும். எதிர்பார்த்த பணவரவுக்கு இடமளிக்கும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளுடன் இணைந்து நடப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் மாற்றம் ஏற்படும். விவசாயிகள், வியாபாரிகள் எதிலும் கவனமுடன் நடந்து கொள்வது நல்லது.

அதிஸ்ட நாள்: புதன்.

அதிஸ்ட இல.: 5.

### தனு

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) செய்தொழில் மந்தம். செலவு மிகுதி. உறவினரால் தொல்லை உண்டாகும். பணவரவு சுமாராக இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு வீண்தொல்லைகளுக்கு இடம் தரும். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனமெடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.

அதிஸ்ட நாள்: திங்கள்.

அதிஸ்ட இல.: 4.

### மகரம்

(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) இனசன விரோதம். கௌரவம் பாதிப்பு. தொழில் முயற்சிகளில் பிரச்சனை. பணவரவு மந்தம். உத்தியோகத்தர்களுக்கு கடமைகளில் வீண் தொல்லை. மாணவர்களுக்கு கல்விச்சிறப்பு. விவசாயிகள் வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.

அதிஸ்ட நாள்: வெள்ளி.

அதிஸ்ட இல.: 6.

### கும்பம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்) தொழில் விருத்தி. மனமகிழ்ச்சி. பணவரவில் தடை. பெரியோர் உதவியுண்டு. உத்தியோகத்தில் உள்ளோர் மேலதிகாரிகளுடன் இணைந்து நடப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் மந்தநிலை தோன்றும். விவசாயிகள், வியாபாரிகள் முதலீடுகளில் கவனமெடுப்பது நல்லது.

அதிஸ்ட நாள்: செவ்வாய்.

அதிஸ்ட இல.: 2.

### மீனம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) தொழில் முயற்சி பலிதம். காரியானுகூலம். வெளியிடப் பிரயாணம். உறவினரால் தொல்லை உண்டாகும். தொழில் முயற்சிகளில் பிரச்சனை. பணக் கஷ்டம். உத்தியோகத்தில் மனக்குழப்பம். மாணவர் கல்வியில் மேன்மை. விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.

அதிஸ்ட நாள்: திங்கள்.

அதிஸ்ட இல.: 1.

Regd. as a News Paper at the G.P.O. (QD/38/NEWS/2001)




ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்

SRI KALYANY JEWELLS

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு





அருள் ஜுவல்லர்ஸ்

பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்காது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன.

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

436331


# முன்னோடி

**ம**னிதன் செவ்வாய்க் கிரகத்திற்குப் பயணிப்பதைப் பற்றிச் சிந்திக்கிறான். சந்திரனுக்கான பயணம் இன்று சர்வ சாதாரணமாகிவிட்டது. பொழுது போக்கிற்காகச் சுற்றுலா செல்லும் இடமாகச் சந்திரன் மாறிவிட்டது.

சந்திரனில் முதன்முதலாகக் காலடி எடுத்து வைத்தவர் நீல் ஆம்ஸ்ரோங் என்றபோதும் அவருக்கு முன்னதாக விண்கலத்தில் இருந்தவாறே சந்திரனை வெற்றிகரமாகச் சுற்றி வந்தார் ரஷ்ய விண்வெளி வீரரான யூரிககாரின்.



1962ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12ம் திகதி ககாரின் தனது 27 வது வயதில் வோஸ்டொக்-1 என்ற விண்கலத்தில் சந்திரனுக்குச் சென்று திரும்பினார். சுமார் நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் அந்த அபாயகரமான பயணத்தில் சாதனை படைத்த ககாரின், சிறிய ரக விமானமொன்றில் பயணிக்கும்போது விபத்தில் சிக்கி உயிரிழந்தார் என்பது துரதிஷ்டம். எது எப்படியானபோதும் விண்வெளிப் பயணத்தின் முன்னோடியாக யூரி ககாரின் கருதப்படுகிறார்.

# படிப்போ படிப்பு



▲ **ந**மது நாட்டிலும் இரண்டாவது தவணைக்கான விடுமுறை பாடசாலைகளில் வழங்கப்பட்டுள்ளன. படிப்பு விஷயத்தில் நம் நாட்டு மாணவர்கள் கொடுத்து வைத்தவர்கள். இங்கே வருடத்தில் 180 நாட்கள் மட்டுமே பாடசாலைகள் நடைபெறுகின்றன.

ஆனால், சீனாவில் 251 நாட்களும், ஜப்பானில் 243 நாட்களும், கொரியாவில் 220 நாட்களும் பாடசாலைகள் நடைபெறுகின்றன. இந்த நாடுகளில் மாணவர் வருகை, ஆசிரியர் வருகை போன்றவற்றில் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. எமது நாட்டிலும் கல்வி உருப்பட வேண்டுமென்றால் இப்படி ஏதாவது செய்தால்தான் உண்டு.

என்ன சம்மதம்தானே!

# மகளிர் மன்றமாக...

▼ **ஒ**ரு காலத்தில் வாக்குரிமைகூட மறுக்கப்பட்டிருந்த பெண்கள் இன்று பல நாடுகளில் ஆட்சியாளர்களாக இருந்துவருகிறார்கள். பாராளுமன்றத்தில் பெண்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று இந்தியா போன்ற நாடுகளில் கோரிக்கை முன்வைக்கப்பட்டு வருகின்றன.



▲ 1998 ம் ஆண்டின் புள்ளி விபரங்களின் படி சுவீடன் பாராளுமன்றத்தில்தான் அதிகளவான பெண் பிரதிநிதிகள் காணப்பட்டார்கள். அங்கு மொத்தமாக 349 உறுப்பினர்களுள் 149 பேர் பெண்கள். இரண்டாவது நாடாக டென்மார்க் விளங்குகிறது. இங்கு 179 உறுப்பினர்களில் 67 பேர் பெண்கள். என்ன? நம் நாட்டுப் பெண்களும் முயற்சிக்கலாமே!


## 2வது பிறந்தநாள் வாழ்த்து



18.08.2002

நாவற்குழியைச் சேர்ந்த செல்வக்குமார் - ஜெனி தம்பதியினரின் அன்புச் செல்வன் துஷாந் தனது இரண்டாவது பிறந்த தினத்தை 18.08.2002 ஞாயிற்றுக்கிழமை சுவிஸ், சூரிச்சிலுள்ள தனதில்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

துஷாந் குட்டியை அன்புடன் அப்பா, அம்மா, இலங்கையில் இருக்கும் அப்பப்பா, அம்மப்பா, அம்மம்மா, (மாமா, அத்தை, இத்தாலி), (பெரியப்பா, பெரியம்மா, அக்காமார், அண்ணாமார்

செல்வன் துஷாந்

நாவற்குழி), பெரியப்பா, பெரியம்மா, தங்கை ... (மாமா, அத்தை, மச்சான் ...), (மாமா, அத்தை, மச்சாள்மார் ...), (பெரியப்பா, பெரியம்மா, அக்கா - இத்தாலி) ... வாழ்க வென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: திரு.திருமதி. செல்வக்குமார்

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



செல்வி ஆரணி 18.08.2002

... சேர்ந்த ... தம்பதியினரின் செல்வப்புதல்வி ஆரணி தனது முதலாவது பிறந்த நாளை 18-08-2002 ... கொண்டாடுகிறார். ... வாழ்த்துகின்றார்கள்.

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



18.08.2002

பழைய பொலிஸ் நிலைய பின்வீதி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த பிரபாகரன் - சுசீதா தம்பதிகளின் செல்வப் புதல்வன் நிகேதன் தனது முதலாவது பிறந்த நாளை 18.08.2002 இல் ஆனைக்கோட்டையில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்

செல்வன் நிகேதன்

இவரை அவுஸ்திரேலியாவிலுள்ள அப்பா, ஆனைக்கோட்டையில் உள்ள அம்மா, அம்மம்மா, அம்மப்பா, அப்பப்பா, அப்பம்மா, சித்திமார், சித்தப்பாமார், மாமிமார், மாமன்மார், பெரியப்பாமார், பெரியம்மாமார், மைத்துனர்கள் பூட்டிமார், அப்பப்பாமார், அப்பம்மாமார், பிரான்சிலுள்ள பெரியப்பா - பெரியம்மா, அண்ணன்மார், கனடாவில் உள்ள மாமா, அத்தை, லண்டனில் உள்ள சித்தி, சித்தப்பாமார், இந்தியாவிலுள்ள சித்தப்பா, மாமா, அத்தை, மச்சாள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் நிகேதனை பல்கலைகளும் கற்றுப் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: திருமதி பி.சுசீதா (அம்மா) ஆனைக்கோட்டை.




இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை ... ஆக. 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.